விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
ஆங்கிலம் - II
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் - I
உள்ளே...

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 03 வெள்ளிக்கிழமை (18.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335



ஜனாதிபதியின் இணையத்தளத்துக்குள் ஊடுருவிய மாணவனுக்கு பரிசு!

24ஆம் பக்கம் பார்க்க

## உதயமானதைப் போன்றே விரைவில் 'தாமரை மொட்டு' அஸ்தமனமாகும்

### புதிய கட்சி குறித்து சுதந்திர கட்சி கருத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்காமக்கள்முன்னணிஎன்ற புதிய கட்சியை உருவாக்கியுள்ள மகிந்த அணியினர் விரைவில் மக்களால் நிராகரிக்கப்படுவார்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரும், உள்ளூராட்சி சபைகள் பிரதி அமைச்சருமான சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில்

24ஆம் பக்கம் பார்க்க....



# சிங்களவர்களை அச்சுறுத்தினால்

# தமிழருக்கு நிம்மதி கிடைக்காது

### புதிய கட்சியின் ஊடக சந்திப்பில் பசில் கருத்து

(கொழும்பு) ---------------------

நாட்டில் சிங்கள மக்களை அச்சத்தில் உறையச் செய்துவிட்டு தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது என தெரிவித்துள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையிலான அரசாங்கம் இழைத்த தவறுகளை தற்போது உணர்ந்துவிட்ட நிலையில் தவறுகளைத் திருத்திக்கொண்டு மீண்டும் ஆட்சிபீடம் ஏறுவதற்கான சந்தர்ப்பத்தை மக்கள் எமக்கு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (24 ஆம் பக்கம் பார்க்க)



" தவறுகளை உணர்ந்துவிட்டோம் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு சந்தர்ப்பம் தாருங்கள் "

# புதிய கட்சியின் ஊடக சந்திப்பில் பசில் கருத்து



(கொழும்பு) — நாட்டில் சிங்கள மக்களை அச்சத்தில் உறையச் செய்துவிட்டு தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது என தெரிவித்துள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையிலான அரசாங்கம் இழைத்த தவறுகளை தற்போது உணர்ந்துவிட்ட நிலையில் தவறுகளைத் திருத்திக்கொண்டு மீண்டும் ஆட்சிபீடம் ஏறுவதற்கான சந்தர்ப்பத்தை மக்கள் எமக்கு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (24 ஆம் பக்கம் பார்க்க)

**" தவறுகளை உணர்ந்துவிட்டோம் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு சந்தர்ப்பம் தாருங்கள் "**

**அன்பு வாசகர்களே!**

**கார்த்திகை மாத இராசிபலன்கள்**



**உள்ளே...**

# முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தை வடக்கில் துரிதப்படுத்த வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கிற்கென விரிவான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டும் என தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்,

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகளை அரசாங்கம் துரிதகதியில் மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

வரவு - செலவுத்திட்ட 2ஆவது வாசிப்பு மீதான விவாதத்தின் ஐந்தாவது நாள் விவாதத்தை நேற்று ஆரம்பித்து, உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

காணிகளை கையளித்தல், மீள குடியேற்றம், வீடமைப்பு, வாழ்க்கைத் தரம், பண்ணைகள், மீன்பிடி, விவ

24 ஆம் பக்கம் பார்க்க....



# மங்களராமய விகாராதிபதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இல்லையேல் தொடர் ஹர்த்தால்- யோகேஸ்வரன்

(மட்டக்களப்பு

நீதிமன்றத்தின் தடை உத்தரவை மறி, பண்குடாவெளி தனியார் காணிக்குள் மட்டக்களப்பு மங்களராமய பௌத்த பிக்குவை பொலிஸார் ஏன் நுழைய விட்டார்கள்? என கேள்வி எழுப்பியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் இது தொடர்பில் விரைந்து சட்ட நடவடிக்கை அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு பன்குடாவெளியில் புத்தர் சிலை அமைத்தல் தொடர்பான பிரச்சினையை அடிப்படையாக வைத்து, நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனினால் நேற்று வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பகுதியில் புத்தர் சிலை நிர்மாணித்தல் மற்றும் திட்டமிட்ட சிங்கள குடியேற்ற செயற்பாடுகளில் ஏதோவொரு பின்னணி உள்ளதாகக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன்,

இவ்வாறான செயற்பாடுகளை ஏன்கண்டும்காணாதவர்கள்போன்று

23 ஆம் பக்கம் பார்க்க....

## கிராம உத்தியோகத்தர் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரருக்கு எதிராக கெவிலியாமடு கிராம உத்தியோகத்தர் சிதம்பரநாதன் ஜீவிதன் கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

மங்களராமய தலைமை பிக்குவான அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகவும் கெவிலியா

23 ஆம் பக்கம் பார்க்க....

## புதிய கட்சியுடன் மகிந்த சீனா விஜயம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு ஆதரவை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழு எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்

24 ஆம் பக்கம் பார்க்க....

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ அத்தியட்சகர் காரியாலய பிரிவிற்கு உட்பட்ட முள்ளியவளை பொலிஸ் பகுதியில் உள்ள வற்றாப்பளை காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு நிர்மூலமாக்

24 ஆம் பக்கம் பார்க்க....

## மாணவர் படுகொலை வழக்கு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை இன்றைய தினம் மீண்டும் யாழ்.நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. கொக்குவில் பகுதியில்

24 ஆம் பக்கம் பார்க்க....

## துவிச்சக்கரவண்டி திருடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பூட்டிய நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டியொன்று திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச கலாசார விழா நேற்றைய தினம் யாழ்.திருமறைக்கலாமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது அப்பகுதியில் பூட்டிய நிலையில் நிறுத்தப்பட்டிருந்த பெண்களுக்கான துவிச்சக்கரவண்டியே களவாடப்பட்டுள்ளது.

6991 5890 என்ற இலக்கத்தையுடைய மேற்குறித்த துவிச்சக்கர வண்டி தொடர்பாக தகவல் தெரிந்தால் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (செ-9)

## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## VACANCIES

Graduates are hereby invited from the qualified persons for the following vacancies.

01. Chemistry A/L - English or Tamil Medium
    Qualification: B.Sc (Chemistry as one of the major components)

02. Science for 6-O/L - English or Tamil Medium
    Qualification: B.Sc

03. Mathematics 6 – 11 English Medium
    Qualification: B.Sc (Physical Science)

## ACCOUNTANT

**Duties & Responsibilities**
- In charge of accounts department supervising 3 staff.
- Audits, accounting package, monthly accounts, budgets, Cash flow and management reporting.

**Qualifications & Experience**
- Fully qualified AAT Sri Lanka, HND or part qualification of Chartered, ACCA, CIMA or equivalent.
- Working knowledge of any major accounting package and MS-Excel.
- Five years working experience in audit firm or commercial enterprise including supervising staff.

Applications should be addressed to the Principal, St. John's College, Jaffna and emailed to stjohns@sltnet.lk before 25th November 2016.
Office Tel: 021 2222 432

(C-6424)

## க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் விசேட வேலைத்திட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

இந்த முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டை பெற்றுக் கொடுப்பதற்காக நாளை 19-ம் திகதி சனிக்கிழமை விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதுவரை அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்களுக்காக அன்றையதினம் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை விசேட ஒருநாள் சேவையை முன்னெடுக்க உள்ளதாக அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்தார்.


ஒருநாள் சேவைக் கட்டணமாக ஆயிரம் ரூபாய் அறவிடப்படும் என்றும் அன்றைய தினம் பாடசாலை மூலமான விண்ணப்பதாரிகள் வருவது கட்டாயமல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

விண்ணப்பதாரியின் பெற்றோர் அல்லது உறவினர் ஒருவர் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் அடையாள அட்டைக்கான உரிய ஆவணங்களுடனும் வருகை தந்து அடையாள அட்டையை பெற்றுக கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விண்ணப்பித்துள்ள போதும் இதுவரை அடையாள அட்டை கிடைக்கப் பெறாத மாணவர்கள் மற்றும் சரியான ஆவணங்களை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் ஆகியோரும் நாளை சனிக்கிழமை அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்காக 011 286 2217 மற்றும் 011 286 2228 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (செ-7-10)

## பிரதியமைச்சர் ரஞ்சன் நடித்த மாயா திரைப்படத்தினை பார்க்க திரையரங்கிற்கு வந்த ஜனாதிபதி



(கொழும்பு)

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நடித்த மாயா திரைப்படத்தின் சிறப்பு காட்சியை பார்ப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கொழும்பு ரீகல் திரையரங்கிற்கு சென்றுள்ளார்.

ஜனாதிபதியுடன் அவரது பாரியார் உட்பட மாயா திரைப்படத்தை பார்ப்பதற்காக அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, பைஸர முஸ்தப்பா, மகிந்த அமரவீர, பாலித தேவரபெரும, தலதா அத்துகோரல, அனோமா கமகே ஆகியோரும் சென்றுள்ளனர்.

தென்னிந்தியாவில் வெளியான காஞ்சனா என்ற திரைப்படத்தினை மொழிமாற்றம் செய்யப்பட்டு மாயா திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த திரைப்படத்தில் ரஞ்சன் ராமநாயக்க பெண் வேடத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### மு/வித்தியானந்தக் கல்லூரி

எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி சிறிலதா சுதாகரன், திருமதி மஞ்சுளா குலராதன், திரு. சிவராசா குகதாசன், திரு. சுப்பிரமணியம் தனரூபன், திருமதி சுகந்தினி சந்திரமோகன் ஆகியோர் அதிபர் சேவை தரம் III தெரிவு செய்யப்பட்டமையும் எமது பாடசாலை ஆசிரியை திருமதி கௌசலாதேவி ஐங்கரலிங்கம் இவ்வருடம் நல்லாசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருது பெற்றமைக்காகவும் இவர்களை மேலும் பல உயர்வுகளைப் பெற்று சாதனைகள் படைக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**மு/வித்தியானந்தக் கல்லூரி,**
**முள்ளியவளை.**

(6640)




திருமதி
சிறிலதா சுதாகரன்



திருமதி
மஞ்சுளா குலராதன்



திரு.
சிவராசா குகதாசன்



திரு.
சுப்பிரமணியம் தனரூபன்



திருமதி
சுகந்தினி சந்திரமோகன்



திருமதி
கௌசலாதேவி ஐங்கரலிங்கம்

## கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கை நெறி

### பகுதி நேரம்

### இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 2014/2016

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 05.12.2016 ஆம் திகதி முதல் 09.12.2016 ஆம் திகதி வரை நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 17.11.2016 ஆம் திகதி முதல் 21.11.2016 ஆம் திகதி வரை கல்வித்துறை அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்களை கல்வித்துறை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். பற்றுச்சீட்டை பரீட்சை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**15.11.2016** (சி-6423)

# கடன் சுமையை குறைக்க மக்கள் விரும்பாவிட்டால் வரி அறவீடுகள் அவசியம்

## அமைச்சர் சந்திரானி தெரிவிப்பு

(கொழும்பு)

**நாடு எதிர்கொண்டுள்ள கடன் சுமையை குறைக்க மக்கள் விரும்பாவிட்டாலும் சில வரி அறவீடுகள் அவசியமென சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சந்திரானி பண்டார தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை சம்பந்தமான தேசிய செயற்றிட்ட மற்றும் கொள்கைச் சட்டவரைபின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் அமைந்துள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்குத் தலைமை தாங்கிய அமைச்சர் சந்திரானி பண்டார நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

சந்திரானி பண்டார 9 கோடி ரூபா கடனுடனேயே முன்னைய அரசாங்கம் ஆட்சியை விட்டுச் சென்றது. அதனை திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பு தற்போதைய அரசாங்கத்திற்கும் நாட்டு மக்களுக்கும் காணப்படுகின்றது. ஆகவே வரியை அறவிடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. வரி அறவீடின்றி ஆட்சியை நடத்திச் செல்ல முடியாது. ஆட்சியின்போது மக்கள் விரும்பாவிடினும் சில விடயங்களை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுகிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த இலங்கைப்பெண் நாடு திரும்பினார்

சவுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அதில் இருந்து விடுவிக்கப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ஒருவர் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

கலேவெலையைச் சேர்ந்த மாணிக்கம் ராணி என்ற 29 வயதான பெண்ணே இவ்வாறு நாடு திரும்பியுள்ளார்.

9 மாதக் குழந்தை ஒன்றின் மரணம் தொடர்பில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி இந்த பணிப்பெண்ணின் பாதுகாப்பில் இருந்த 9 மாதக் குழந்தை உயிரிழந்தது.

இதனை அடுத்து அவருக்கு 10 ஆண்டு காலம் சிறை தண்டனையுடன், மரண தண்டனையும் விதிக்கப்பட்டது.

எனினும் மேன்முறையீட்டை அடுத்து அவருக்கான தண்டனை ஒன்றரையாண்டு சிறைவாசமாக குறைக்கப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பியுள்ளார். (இ-7-10)

# மீண்டும் ஒரு சிங்கள-முஸ்லிம் கலவரத்தை உருவாக்க முயற்சி

## பந்துல எம்.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

தமது சொந்த நலனுக்காக மீண்டும் ஒரு சிங்கள - முஸ்லிம் கலவரம் ஒன்றை உருவாக்க சில குழுக்கள் முயற்சிப்பதாக கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நூறு ஆண்டுகளுக்கு பின்னர் அதே போன்ற நிலைமை ஒன்றை உருவாக்க ஒரு சிலர் முயற்சிக்கின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளார். அதை பொது மக்கள் புரிந்துகொண்டு தடுக்க வேண்டும் என பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களில் ஒரு வகுப்பு வாத தீவிரவாதத்தை உருவாக்க சதி செய்கின்றனர் எனவும் எச்சரித்துள்ளார். (இ-7-10)

# சீனாவை பகைக்க வேண்டாம்; மகிந்த அரசிற்கு அட்வைஸ்



உலக வல்லரசுகளில் ஒன்றான சீனாவை ஒரு போதும் பகைத்துக் கொள்ளக்கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய தேசிய அரசாங்கத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுரை வழங்கியுள்ளார். சீனாவுக்கு இம்மாதம் விஜயம் செய்யவிருக்கும் மகிந்த ராஜபக்ஷ, சீனா போன்ற நாடுகளைப் பகைத்துக் கொள்வதன் மூலம் பாரிய நட்டத்தை எதிர்நோக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

இந்த நாட்டில் அபிவிருத்தி சிறப்பாக இருந்த காலமொன்று இருந்தது. அப்போது தான் புதிய அரசாங்கம் இந்த அனைத்து அபிவிருத்திகளையும் நிறுத்தியது. அதன் பின்னர்தான் இந்த அரசாங்கம் உலகம் முழுவதிலும் சுற்றித் திரிந்து, இறுதியாக மீண்டும் சீனாவை நாடியது. சீனத் தூதுவரது உரையை கேட்டோம். இந்த நாட்டின் தலைவர்கள், நிதியமைச்சர் என்ற ஒருவர் உலகில் பொருளாதார பலம் வாய்ந்ததும், எமது நெருக்கமான நட்பு நாடான சீனா மீது அவ்வாறான குற்றச்சாட்டையும், அவமானத்தையும் சுமத்த முடியாது. அவ்வாறு செய்தால் சீனா மட்டுமல்ல அயல்நாடான இந்தியாவும் நம் மீது சந்தேகத்துடன் பார்க்கும் நிலை ஏற்படும். இவை மட்டுமல்ல இன்னுமொரு நாள் இந்தியாவையும் பேசுவார்கள். இவ்வாறு நாடுகளைப் பகைத்துக் கொண்டு பணிகளை செய்ய முடியுமா? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-7-10)

# கல்லுண்டாயில் வாள்வெட்டு; பொலிஸாரால் வாள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நவாலி கல்லுண்டாயில் நபரொருவர் மீது வாளால் வெட்டி தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் குழுவிடமிருந்து பொலிஸாரால் வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கல்லுண்டாய் பகுதியில் உடலில் பல வெட்டுக் காயங்களுடன் மயங்கிய நிலையில் அநாதரவாக இருந்த நபர் பொலிஸாரால் மீட்கப்பட்டு சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதேநேரம் ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள வீடொன்றின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் வாள் போன்றனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்விரு சம்பவங்களும் நேற்று முன்தினம் இரவு சுமார் 7 மணிக்கும் 8 மணிக்குமிடையில் கல்லுண்டாய் வை.எம்.சி.வீதி மற்றும் ஆனைக்கோட்டை பகுதிகளில் இடம் பெற்றுள்ளது. வெட்டுக் காயங்களுக்குள்ளான நபருக்கு சுமார் 40 வயதிருக்கும் என தெரிவித்த பொலிஸார் இவர் எவ்விடத்தை சேர்ந்தவர் என்பதும் அவரது பெயர் மற்றும் ஏனைய தகவல்கள் என்ன என்பது தொடர்பாகவும் இதுவரை தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் குறித்த நபரை வேறெங்காவது வைத்து வெட்டிவிட்டு இப்பகுதியில் கொண்டுவந்து போட்டிருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுவதாகவும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம் ஆனைக்கோட்டை சிவசுப்பிரமணிய ஆலயத்திற்கு அண்மையில் வீடொன்றின் மீது இனந் தெரியாத சிலரால் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வரை பொலிஸார் சோதனையிட முயன்ற போது அவர்கள் தப்பிச்செல்ல முற்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் துரத்திப்பிடித்து கைது செய்து அவர்களிடம் விசாரணை மேற்கொண்ட போது அவர்களிடம் இருந்து வாள்கள் கைப்பற்றப்பட்டிருந்ததாகவும் இவர்களுக்கும் மேற்படி இரு சம்பவங்களுக்கு இடையில் தொடர்புகள் ஏதாவது இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

# வேலைத்தளங்களில் பால்நிலை சமத்துவத்தைப்பேண யாழ். மாவட்ட செயலகத்தால் தொடர் கண்காணிப்பு

வேலைத்தளங்களில் பால்நிலை சமத்துவத்தினைப் பேணுவது தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தினால் தொடர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வேலைத் தளங்களில் பால்நிலை சமத்துவத்தினைப் பேணல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட அரச அதிபரின் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

பால்நிலை சமத்துவம் பேணல் தொடர்பில் பல்வேறு தளங்களில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் வேலைத்தளங்களில் பால்நிலை சமத்துவத்தினைப் பேணல் தொடர்பில் சர்வதேச தொழில் நியதிகள் உள்ளடக்கிய நடத்தைக் கோவையினை இயைபுடையதாக்குவது மற்றும் அது தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வேலைத்தளங்களில் பாலியல் இம்சை ஏற்படுத்தப்படும் போது பாதுகாப்பின்மை, நம்பகத்தன்மையற்றதன்மை, தொழிலினை இழக்க வேண்டிய நிலை ஏற்படுத்தப்படலாம் என்ற காரணங்களினால் இவை வெளிப்படுத்தப்படுவதில்லை.

எனவே ஒருவர் தனது அதிகாரநிலையினைப் பயன்படுத்திப் பேரம் பேசுவது , பாலியல் இச்சைக்கு உட்படுத்தப்படுவது போன்றவை வெளிக்கொணரப்படவேண்டும் என்ற அடிப்படையில் பல விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

அந்த வகையில் உப குழுக்கள் உருவாக்கி அவர்களின் உதவியுடன் வேலைத் தளங்களில் நடத்தைக் கோவையினை நடைமுறைப்படுத்தல், இந் நடத்தைக் கோவையின் பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தல், பிரச்சினைகளிற்கு முகம்கொடுப்பவர்கள் நம்பகமான முறையில் முறைப்பாடு செய்வதற்கு தொழில்நுட்ப பொறிமுறையினை ஏற்படுத்திக் கொடுத்தல், இனங்காணப்பட்ட சம்பவங்களிற்கு சட்ட உதவிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டன.

அத்துடன் வேலைத்தளங்களில் பாலியல் இம்சை மேற்கொள்ளப்படுதல் தண்டனைக்குரிய குற்றம் என்பதுடன் இத்தகைய சம்பவங்கள் சட்டரீதியாக கையாளப்படும் என்பது தொடர்பில் சகல பணியாளர்கள் மத்தியிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு வேலைத்தளத்திலும் தமது பகுதியில் நடத்தைக் கொள்கையினை அனுசரித்து நடத்தல், கண்காணித்தல் மற்றும் முறைப்பாடு தொடர்பில் பாதுகாப்பான உள்ளகப் பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சட்டத்தரணிகள் ,மாவட்ட செயலக பெண்கள், சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை வைத்தியர், யாழ் பொலிஸ் நிலைய பெண்கள், சிறுவர் பிரிவினை சார்ந்த பொறுப்பதிகாரி, தொழில் திணைக்கள பணிப்பாளர் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ-9)

# முழு முகம் மூடிய தலைக்கவச தடைக்கு மேலும் மூன்று மாதங்கள் தடை நீடிப்பு

மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள், முழு முகத்தையும் மூடும் வகையிலான தலைக்கவசத்தை (Full Face Helmet) பயன்படுத்துவதற்கு எதிராக பொலிஸார் விதித்த தடையுத்தரவுக்கு மேலும் 3 மாதங்கள் இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றில், குறித்த விடயம் தொடர்பில், மூவரால் மேற்கொள்ளப்பட்ட மனு தொடர்பிலான விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குறித்த இடைக்கால தடையுத்தரவை எதிர்வரும் பெப்ரவரி 21 ஆம் திகதி வரை நீடிப்பதாக நீதிமன்றம் அறிவித்திருந்தது.

கொழும்பின் முன்னாள் நகர அவசர மரண பரிசோதகர் எட்வர்ட் அஹூஹ்கம, அங்கீகாரம் பெற்ற கணக்காய்வாளர் சானக தசநாயக்க, ஓய்வு பெற்ற மேஜர் மனோஜ் ராலக ஆகியோரினால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

“வெற்றி நிச்சயம்”

# மாதாந்தத் தொடர் பரீட்சை - ஐப்பசி 2016

# (க.பொ.த. (உ/த) - 2017

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

**Maths Stream**

## Chemistry & Physics Average Rank List

| st.Id | Full Name | School Name | chemistry | physics | Average | Rank |
|---|---|---|---|---|---|---|
| 3014 | Pararasasingam Mishanth | J/Jaffna Hindu College | 78 | 86 | 82 | 1 |
| 3194 | Prapakaran Prathees | Vaddu, Jaffna College | 84 | 76 | 80 | 2 |
| 3244 | Shanmugakumar Shanmugabavan | Jaffna Hindu College | 78 | 78 | 78 | 3 |
| 3911 | Thayaparan Sathulakjan | J/Chavakachcheri hindu college | 75 | 75 | 75 | 4 |
| 3919 | Nagarajah Kopisankar | J/Chavakachcheri hindu college | 80 | 70 | 75 | 4 |
| 3920 | Thanapalu Piratheepan | J/Chavakachcheri hindu college | 78 | 71 | 74.5 | 6 |
| 3009 | Sivakumar Utharshan | J/ Jaffna Hindu College | 72 | 76 | 74 | 7 |
| 3904 | Sivasubramaniam Elankumaran | J/Chavakachcheri hindu college | 80 | 68 | 74 | 7 |
| 3005 | Sivapiran Sanjeepan | Kilinochchi Central College | 77 | 65 | 71 | 9 |
| 3354 | Sanmuganathan Anojan | St. John's College | 78 | 64 | 71 | 9 |
| 3305 | Kalanantharasan Yathurshan | J/ Jaffna Hindu College | 71 | 70 | 70.5 | 11 |
| 3916 | Naguleswaran Varnaraj | J/Chavakachcheri hindu college | 68 | 73 | 70.5 | 11 |
| 3333 | Vijayakumar Sangeeth | J/ Mahayana College | 75 | 65 | 70 | 13 |
| 3598 | Victor Jeyakumar Vasanth Godfrey | Jaffna college | 74 | 66 | 70 | 13 |
| 3909 | Arumugam Sarangan | J/Chavakachcheri hindu college | 70 | 69 | 69.5 | 15 |
| 3924 | Sivarajah Jalini | J/Chavakachcheri hindu college | 70 | 69 | 69.5 | 15 |
| 3937 | Manokaran Ajithkaran | J/Chavakachcheri hindu college | 75 | 64 | 69.5 | 15 |
| 3179 | Pulenthiran Tenojan | J/ Jaffna Hindu College | 74 | 64 | 69 | 18 |
| 3967 | Jeyaganesan Jeyatharani | J/ Chavakachcheri Hindu College | 71 | 67 | 69 | 18 |
| 3061 | Visuvanathan Aruran | J/Jaffna Hindu College | 80 | 57 | 68.5 | 20 |
| 3223 | Mathanky Sachchithananthan | J/ Vembadi Girls High School | 60 | 75 | 67.5 | 21 |
| 3938 | Thamaraichselvan Shanusan | J/Chavakachcheri hindu college | 68 | 67 | 67.5 | 21 |
| 3040 | Thayaparan Thananchseyan | J/ st.john's College | 70 | 65 | 67.5 | 21 |
| 3483 | Parameswaran Srihari | J/Jaffna Hindu College | 73 | 61 | 67 | 24 |
| 3055 | Thillainathar Thigitharan | J/ Atchuvely Central College | 67 | 66 | 66.5 | 25 |
| 3129 | Vigneswaran Vignagajan | J/ Jaffna Hindu College | 69 | 64 | 66.5 | 25 |
| 3402 | Krishnathasan Seyon | J/Jaffna Hindu College | 62 | 70 | 66 | 27 |
| 3953 | Tharmalingam Laksika | J/Chavakachcheri hindu college | 69 | 63 | 66 | 27 |
| 3022 | Suntharalingam Thivakaran | J/ Jaffna Hindu College | 65 | 66 | 65.5 | 29 |
| 3198 | Ravichandran Soban | J/ Jaffna Hindu College | 73 | 58 | 65.5 | 29 |
| 3902 | Tharmalingam Jathusigan | J/Jaffna Hindu College | 54 | 77 | 65.5 | 29 |
| 3932 | Vigani Ravikkumar | J/Chavakachcheri hindu college | 67 | 64 | 65.5 | 29 |
| 3102 | Sivapalan Sarankan | J/ Jaffna Hindu College | 57 | 73 | 65 | 33 |
| 3935 | Thadshajini Rajakulasingam | J/Chavakachcheri hindu college | 66 | 64 | 65 | 33 |
| 3054 | Manikkavasagar Amalan | J/ Jaffna Hindu College | 63 | 66 | 64.5 | 35 |
| 3178 | Satkuneswaran Mathushan | J/ Jaffna Hindu College | 57 | 72 | 64.5 | 35 |
| 3224 | Saranya Raveendran | J/ Vembadi Girls High School | 66 | 63 | 64.5 | 35 |
| 3951 | Thanabalasingam Yathursha | J/Chavakachcheri hindu college | 66 | 63 | 64.5 | 35 |
| 3039 | Sivaneswaran Junoj | J/ st.john's College | 65 | 64 | 64.5 | 35 |
| 3132 | Abivarna Thavajogarajah | J/ Vembadi Girls High School | 68 | 60 | 64 | 40 |
| 3169 | Sivakumar Sivapprasanna | J/ st.john's College | 71 | 57 | 64 | 40 |
| 3286 | Kunarasa Tharsujan | J/ st.john's College | 70 | 58 | 64 | 40 |
| 3363 | Thurairajasingam Sajithkanth | J/ Kokuvil Hindu College | 73 | 55 | 64 | 40 |
| 3450 | Yogalingam Vajeeharan | J/ Jaffna Hindu College | 60 | 68 | 64 | 40 |
| 3914 | Yoganathan Anojan | J/Chavakachcheri hindu college | 69 | 59 | 64 | 40 |
| 3044 | Kaneshakumar Viththagan | J/ Kokuvil Hindu College | 58 | 69 | 63.5 | 46 |
| 3050 | Nirmaleswaran Dilaxseswaran | J/ Kokuvil Hindu College | 76 | 51 | 63.5 | 46 |
| 3218 | Mathusha Mahendran | J/ Vembadi Girls High School | 64 | 63 | 63.5 | 46 |
| 3232 | Thulaxshana Sathiyaseelan | J/ Chundikuli Girls' College | 72 | 55 | 63.5 | 46 |
| 3370 | Selvaratnam Ketharagan | J/ Jaffna Hindu College | 60 | 67 | 63.5 | 46 |
| 3638 | Rajigaa Tharmarajah | J/ Kokuvil Hindu College | 75 | 52 | 63.5 | 46 |
| 3134 | Rajeswaran Ilankumaran | J/ Arunodaya College | 53 | 73 | 63 | 52 |
| 3226 | Jude Selvakumar Anto Sheron | J/ st.john's College | 63 | 63 | 63 | 52 |
| 3484 | Sivasubramaniam Sivaneevan | J/Jaffna Hindu College | 73 | 53 | 63 | 52 |
| 3923 | Kanagathurai Tharsan | J/Chavakachcheri hindu college | 77 | 49 | 63 | 52 |
| 3324 | Maathangi Baskaran | J/ Manipai Girls' College | 67 | 58 | 62.5 | 56 |
| 3297 | Gayathiri Muralitharan | J/ Vembadi Girls High School | 64 | 60 | 62 | 57 |
| 3670 | Pirakasini Mahendran | J/ Vembadi Girls High School | 72 | 52 | 62 | 57 |
| 3966 | Selvarajan James Danistan | St.John's College | 71 | 53 | 62 | 57 |
| 3004 | Gajani Kangesan | J/ Vembadi Girls High School | 64 | 58 | 61 | 60 |
| 3933 | Abinaya Ratnasabapathy | J/Chavakachcheri hindu college | 54 | 68 | 61 | 60 |
| 3936 | Heerthana Thiruketheeswaran | Ki/ Kilinochchi Maha Vidyalayam | 72 | 50 | 61 | 60 |
| 3956 | Selvarasa Mathujan | | 69 | 53 | 61 | 60 |
| 3604 | Kunasekaram Kujinthan | J/ Kokuvil Hindu College | 70 | 51 | 60.5 | 64 |
| 3063 | Ketheeswaran Kukesan | J/ Jaffna Hindu College | 61 | 59 | 60 | 65 |
| 3413 | Veerakathipillai Gajabavan | J/ Jaffna Hindu College | 55 | 65 | 60 | 65 |
| 3545 | Abdul Careem Abdullah | A/ Kekirawa Central College | 47 | 73 | 60 | 65 |
| 3913 | Kamalanathan Niranjan | J/Chavakachcheri hindu college | 75 | 45 | 60 | 65 |
| 3915 | Balakirushnar Matheesan | J/Chavakachcheri hindu college | 74 | 46 | 60 | 65 |
| 3431 | Ashokumar Rasath | J/ Jaffna Hindu College | 51 | 68 | 59.5 | 70 |
| 3560 | Thivajini Ravichandran | J/ Vembady Girls High School | 69 | 50 | 59.5 | 70 |
| 3929 | Krishnamoorththy Printhavan | J/Chavakachcheri hindu college | 65 | 54 | 59.5 | 70 |
| 3944 | Kirusnamoorthy Jasinthan | J/ Varani Central College | 63 | 56 | 59.5 | 70 |
| 3105 | Partheepan Vasavan | J/Jaffna Hindu College | 70 | 48 | 59 | 74 |
| 3037 | Thangarajah Kaarunjan | J/Jaffna Hindu College | 59 | 58 | 58.5 | 75 |
| 3918 | Balasubramaniam Pakeetharan | J/Jaffna Hindu College | 72 | 45 | 58.5 | 75 |
| 3926 | Thasitha Thangarasa | J/Chavakachcheri hindu college | 65 | 52 | 58.5 | 75 |
| 3265 | Thanapalasingam Umesh | J/ Jaffna Hindu College | 64 | 52 | 58 | 78 |
| 3907 | Mouleeswaran Mydrejan | J/Chavakachcheri hindu college | 62 | 54 | 58 | 78 |
| 3072 | Sivarajh Vishakanan | J/ Jaffna Hindu College | 56 | 59 | 57.5 | 80 |
| 3965 | Maathumai Sivapalasuntharam | J/ Chavakachcheri Hindu College | 57 | 58 | 57.5 | 80 |
| 3086 | Balakumar Srigajan | J/ Jaffna Hindu College | 53 | 61 | 57 | 82 |
| 3112 | Thavarajan Dinojan | J/Jaffna Hindu College | 59 | 55 | 57 | 82 |
| 3246 | Sajanthini Satgunarasa | J/ Manipay Girls' College | 57 | 57 | 57 | 82 |
| 3961 | Kanthasamy Kaviraj | | 68 | 46 | 57 | 82 |
| 3158 | Mousiya Karunakaran | J/ Vembadi Girls High School | 47 | 66 | 56.5 | 86 |
| 3159 | Kiruththika Sivasankaranathan | J/ Vembadi Girls High School | 64 | 49 | 56.5 | 86 |
| 3922 | Yogarasa Pinthushan | J/Chavakachcheri hindu college | 64 | 49 | 56.5 | 86 |
| 3069 | Velalagan Paavothayan | St. John's College | 60 | 52 | 56 | 89 |
| 3213 | Thiruchelvam Sathurgasthan | J/ Jaffna Hindu College | 54 | 58 | 56 | 89 |
| 3949 | Tharaniya Somasegaram | Ki/ Kilinochchi Maha Vidyalayam | 59 | 53 | 56 | 89 |
| 3366 | Dushyanthan Thuvarakan | J/ st.john's Collage | 54 | 57 | 55.5 | 92 |
| 3903 | Alakarasa Sangithan | Meesalai Veerasingam Central College | 67 | 44 | 55.5 | 92 |
| 3939 | Yokesvaran Visnu | J/ Varani Central College | 72 | 39 | 55.5 | 92 |
| 3947 | Vaithiyasoorar Tharaniga | J/ Uduthurai Maha Vidyalayam | 65 | 46 | 55.5 | 92 |
| 3948 | Kugathasan Ahilan | J/Chavakachcheri hindu college | 51 | 60 | 55.5 | 92 |
| 3065 | Kanakalingam Kugan | J/ Kokuvil Hindu College | 57 | 53 | 55 | 97 |
| 3113 | Shanmuganathan Saisuthan | J/Jaffna Hindu College | 53 | 57 | 55 | 97 |
| 3152 | Piriyanthy Mahendran | J/ Vembadi Girls High School | 58 | 52 | 55 | 97 |
| 3934 | Puvanenthiran Methulan | J/Chavakachcheri hindu college | 63 | 47 | 55 | 97 |
| 3941 | Vijjachchanthiran Thilakshana | J/Chavakachcheri hindu college | 65 | 45 | 55 | 97 |
| 3267 | Saambavi Sivanraj | J/ Vembadi Girls High School | 67 | 42 | 54.5 | 102 |
| 3516 | Balasubramaniam Logapriyan | J/ Jaffna Hindu College | 47 | 61 | 54 | 103 |
| 3606 | Ijunthini Thuraisingam | J/ Manipay Girls' College | 60 | 48 | 54 | 103 |
| 3930 | Paveenthini Vignesvaran | J/Chavakachcheri hindu college | 57 | 51 | 54 | 103 |
| 3952 | Muththukrishnan Shinthusan | J/Chavakachcheri hindu college | 58 | 50 | 54 | 103 |
| 3330 | Satkunarasa Ajinthan | J/ Kokuvil Hindu College | 47 | 60 | 53.5 | 107 |
| 3906 | Kanthasamy Kajeepan | J/Chavakachcheri hindu college | 62 | 45 | 53.5 | 107 |
| 3910 | Uruththiramoorthy Vinusan | J/Jaffna Hindu College | 46 | 61 | 53.5 | 107 |
| 3928 | Sathiyaseelan Sankarjee | J/Chavakachcheri hindu college | 39 | 68 | 53.5 | 107 |
| 3958 | Sivaranjan Aravinthan | J/Chavakachcheri hindu college | 60 | 47 | 53.5 | 107 |
| 3137 | Thavarasa Saranja | J/ Vembadi Girls High School | 49 | 57 | 53 | 112 |
| 3144 | Kirushanthy Kirubananthan | J/ Vembadi Girls High School | 50 | 56 | 53 | 112 |
| 3252 | Thaventhiran Senujan | J/ Kokuvil Hindu College | 55 | 51 | 53 | 112 |
| 3962 | Chandran Thesikan | J/Chavakachcheri hindu college | 58 | 48 | 53 | 112 |
| 3276 | Sathushana Ganeshalingam | J/ Jaffna Hindu Ladies College | 54 | 51 | 52.5 | 116 |
| 3270 | Sivaniha Rajendram | J/ Uduvil Girls' College | 62 | 42 | 52 | 117 |
| 3399 | Kanagalingam Gowsigan | J/ Jaffna Hindu College | 49 | 55 | 52 | 117 |
| 3295 | Uthayakumar Kanistan | J/ Velanai Central College | 58 | 45 | 51.5 | 119 |
| 3364 | Selvarajah Anushan | J/Punitha Pathirisijar College | 44 | 59 | 51.5 | 119 |
| 3957 | Kunasegaram Thilakshan | J/Chavakachcheri hindu college | 53 | 49 | 51 | 121 |
| 3018 | Premachandran Rangeelan | J/ Jaffna Hindu College | 50 | 51 | 50.5 | 122 |
| 3038 | Suntharamoorthy Nearujan | J/ st.john's College | 49 | 52 | 50.5 | 122 |
| 3217 | Colin Vigneswaran Nithurjini | J/ Uduvil Girls' College | 48 | 53 | 50.5 | 122 |
| 3236 | Sivanujah Sivasubramaniam | J/ Vembadi Girls High School | 53 | 48 | 50.5 | 122 |
| 3533 | Thavananthan Thanujan | J/ Jaffna Central College | 47 | 54 | 50.5 | 122 |
| 3020 | Jeyaparipalan Parthipan | J/ Jaffna Hindu College | 48 | 52 | 50 | 127 |
| 3070 | Kuganesan Magilrajah | J/ Jaffna Hindu College | 45 | 55 | 50 | 127 |
| 3150 | Gowshalya Vivekananthakurukkal | J/ Vembadi Girls High School | 42 | 58 | 50 | 127 |
| 3912 | Rajaratnam Piratheep | J/Chavakachcheri hindu college | 45 | 55 | 50 | 127 |

NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD

Physics : R.Kumaran, R.Kugan Chemistry : Dias, T.Sivakumar

# ஹோலி, புஜாரா சதம்; இந்தியா சிறப்பாட்டம்



இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் நாள ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 317 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்தியா- இங்கிலாந்து கிரிக்கெட் அணி களுக்கிடையிலான முதல் போட்டி சமநிலை யில் முடிவடைந்த நிலையில் 2-வது டெஸ்ட் போட்டி விசாகப்பட்டினத்தில் நேற்று தொடங் கியது.


நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் ஹோலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் 5 பந்துகளை சந்தித்து ஓட்டம் எதுவும் எடுக்காமல் டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித் தார். மற்றொரு தொடக்க வீரர் முரளி விஜய் 4 பவுண்டரி உள்பட 20 ஓட்டங்கள் எடுத்து நடையைக் கட்டினார். இதனால், இந்திய அணி 22ஓட்டங்களுக்குள் தொடக்க ஜோடியை இழந்தது.

அதன்பின்னர் இணைந்த புஜாரா- ஹோலி இருவரும் நிலைத்து நின்று ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கணிச மாக உயர்த்தினர். இங்கிலாந்து பந்து வீச்சை துவம்சம் செய்த புஜாரா 60-வது ஓவரில் சிக் சர் அடித்து தனது சதத்தை நிறைவு செய்தார். மறுமுனையில் அணித் தலைவர் ஹோலி, 63-வது ஓவரில் சதம் கடந்தார். இவர்களின சிறப்பான ஆட்டத்தினால் இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.

ஓட்ட எண்ணிக்கை 248 ஆக இருந்த போது புஜாரா 119 ஓட்டங்களில் ஆட்டமிழந் தார். மூன்றாவது விக்கெட்டுக்கு ஹோலியும் புஜாராவும் இணைந்து 226 ஓட்டங்கள் சேர் த்தனர். புஜாரா ஆட்டமிழந்ததையடுத்து ஹோலியுடன் ரகானே இணைய, ஆட்டம் மீண்டும் விறுவிறுப்படைந்தது.

தொடர்ந்து இங்கிலாந்து பந்து வீச்சாளர் களுக்கு போக்கு காட்டிய ஹோலி, 150 ஓட்ட ங்களை கடந்தார். மறுமுனையில் நிதான மாக ஆடிக்கொண்டிருந்த ரஹானே 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் ஆக, முதல் நாள ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 4 விக்கெட இழப்பிற்கு 317 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

ஹோலி 151 ஓட்டங்களுடனும், அஸ்வின் ஒரு ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். இன்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறவு ள்ளது. (க)



# ஆறுமுகநாவலர் மாநாடு இன்று ஆரம்பம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும்குருபூசைநிகழ்வுகள்இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆரம்பநாள்நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை தலைவர் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் முன்னிலையில் இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவருமான சீனித்தம்பி யோகேஸ்வரன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலாளர் ஆ.சிறி, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர் சு.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மங்கல இசையுடன் காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இருந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு 9.25 மணிக்கு நூற்கண்காட்சி ஆரம்ப நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் அருளுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்யசுவாமிகளும்தலைமை உரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன், பிரதம விருந்தினர் உரையை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கௌரவ விருந்தினர் உரைகளை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சீனித்தம்பி யோகேஸ்வரன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்தரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் நாவலர் பெருமான் நூல் வெளியீடும் இடம் பெறும். **நாவலர் நமக்கோர் காவலர்** எனும் தலைப்பில் சிறப்புரையை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்த்தவுள்ளதுடன் அ.அமிர்தசிந்துஜன்,அ.அமிர்தலோஜனன் ஆகியோரது இசை அரங்கம் என்பன இடம்பெறும்.

இந்நிகழ்வின் மாலை நிகழ்வுகள் மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வீணாகான குரு பீடத் தலைவர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் முன்னிலையில் இடம்பெறும். கல்வியமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் எஸ்.தில்லை நடராசா தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத்துணைத்தூதுவர் ஆ.நடராஜன்,கௌரவ விருந்தினராக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபைத் தலைவர் பேராசிரியர் சி.பத்மநாதன், சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வைத்திய கலாநிதி ஆர்.சிவசங்கர், சிங்கப்பூர் தய் இச்சி குழுமத் தலைவர் சோ.நிரஞ்சன் நந்தகோபன், தொழிலதிபர் கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பால பாடக்கதைகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நீதி வாக்கியங்கள், ஆறுமுக நாவலர் கவித்திரட்டு, நல்லை நகர் நாவலர் சைவத்தின் காவலர்** ஆகிய நூல்களின் வெளியீடு இடம்பெறும்.

நூல் அறிமுக உரையினை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.முகுந்தன் வழங்குவார். மட்டக்களப்பு காயத்திரிபீட சிவயோகச் செல்வர் சாம்பசிவ சிவாச்சாரியார் வழங்கும் இசையும் கதையும் நாவலர் நாதம் இடம்பெறும்.

மேலும் கலா கீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவனேசனின் நெறியாள்கையில் கொக்குவில் கலா பவனம் வழங்கும் **நாவலர்** பிறந்திலரேல் நாட்டிய நாடகம் இடம்பெறவுள்ளது. (இ-3)



யாழ். வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் உள்ள மாணவர்களுக்கு அண்மையில் நெல்லியடிப் பொலிஸாரால் சுற்றுச்சூழல் சம்பந்தமான போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற மாணவிக்கு கடந்த சனிக்கிழமை நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பிரியந்த பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் :-கரணவாய் செய்தியாளர் )

## மிருசுவில் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மிருசுவில் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசில் வழங்கலும் நாளை 19ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மிருசுவில் பொதுநூலகத்தில் இடம்பெறும்.

மிருசுவில்உபபணிமனைப் பொறுப்பதிகாரி வ.பாலகிருஷ்ணன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் திருமதி முகுந்தினி கோடீஸ்வரன்,சிறப்பு விருந்தினர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீசன்,மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய பங்குத்தந்தை எக்ஸ். டபிள்யூ. ஜேம்ஸ், உசன் கந்தசுவாமி ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ கேதீஸ்வரக் குருக்கள், கௌரவ விருந்தினர்களாக யாழ். உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம், யாழ்.மிருசுவில் அ.த.க.பாடசாலை அதிபர் ஐ.தேவஈஸ்வரன்,யாழ்மிருசுவில்றோ.க.த.க. பாடசாலை அதிபர் பி.தோமஸ் எடிசன், யாழ்.எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலய அதிபர் க.கஜேந்திரன், யாழ். கரம்பகம் அ.த.க.பாடசாலை அதிபர் இ.சுப்பிரமணியம் ஆகியோர் கல்ந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# வீதி ஒழுங்கு விதிமீறல் தண்டம்
# தீர்வு வழங்கப்படாவிட்டால் நாடு தழுவிய போராட்டம்

மீறல்களுக்கான குறைந்த பட்சத தண்டத்தை 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முடிவு தொடர்பாக, உரிய தீர்வை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வழங்காவிடில், வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக, மாகாணங்களுக்கிடையில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்து சங்கம் எச்சரித்துள்ளது.


குறைந்தபட்சத் தண்டம் அதிகரிப்புத் தொடர்பாக, நேற்று முந்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அச்சங்கத்தின் தலைவர் சரத் விஜிதகுமார, வரவு - செலவுத்திட்டத்தில் நிதியமைச்சரால் பிரேரிக்கப்பட்டுள்ள குறைந்த பட்சத் தண்டப்பண அதிகரிப்பை, சங்கத்துடன் மேற்கொள்ளும்கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்றார்.

“குறைந்தபட்சத் தண்டத்தை, 20 ரூபாயிலிருந்து 2,500 ரூபாவாக உயர்த்துவது, நியாயமற்றது. ஒரு குற்றத்துக்கான தண்டம், இந்தளவுக்குக்கு அதிகரிக்கப்படுமாயின், ஏனைய குற்றங்களுக்கு எவ்வளவு அதிகரிக்கப்படும் என்பதை நாம் உணரலாம்” என்று அவர் தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், “பேருந்து சாரதிகள் மாத்திரம் தான், வீதிகளில் உயிரிழப்பை ஏற்படுத்துபவர்கள் அல்லர்.

அவர்கள் அவ்வாறு உயிர்களைப் பறித்தால், தற்போதைய வீதிகளின் நிலைமையாலேயே ஆகும். வேலை நிறுத்தத்தின் பின்னர், எமக்குக் கலந்துரையாடல் தேவையற்றது. கெமுனு விஜேரத்னவின் பேருந்து சங்கம் போன்று, எங்களுடைய சங்கம், முடிவுகளை எடுப்பதில்லை. கலந்துரையாடல்களின் பின்னரே, நாம் முடிவுகளை எடுப்போம்” என்று அவர் தெரிவித்தார். (இ-7-10)

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையின் முன்னை நாள் ஆசிரியரும் எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர் திரு. சி.கௌரிதரன் ஆசிரியரின் அன்பு மாமனாருமாகிய



### அமரர் காசிப்பிள்ளை சரவணமுத்து

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (6639)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி.**
**காங்கேசன்துறை.**

## இராசி பலன்

18.11.2016
(கார்த்திகை 03, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 11.39 மணிவரை
திருவாதிரை முற்பகல் 11.46 மணிவரை
சுபநேரம் 6.08-7.38 மணிவரை
இராகுகாலம் 10.38-12.08 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை,மூலம்<br>இரவு 4.51 மணிக்கு<br>கட-சந் | | |
| செவ் | | | ராகு |
| சுக் | சூரி<br>சனி<br>புத | | குரு |

**மீனம்:** உறவினர் வழியில் எதி பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடி கொள்ளும்,பேச்சில் கனிவு பிறக்கும்.

**மேடம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**இடபம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** வியாபார விருத்தியுண்டு, ஆன்மீக நாட்டம் கூடும், சுபதகவல்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்:** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள்,வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும்.

**மகரம்:** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரும்,தேவைகள் பூர்த்தியாகும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு,தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்,புதிய பொருட் சேர்க்கையுண்டு, நண்பர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், விட்டுக்கொடுத்து செல்வதன் மூலம் அமைதி காண வேண்டிய நாள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**துலாம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், ஆன்றோரின் சந்திப்பு இடம்பெறலாம், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், வீட்டை அழகு படுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கோப்பாய் பொலிஸாரால் நேற்று அதிகாலை கைது

## இரு மோட்டார் சைக்கிள்கள், மடிக்கணனி, 10 தொலைபேசிகள், நகை என்பன பறிமுதல்






யாழில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒரு பெண் உட்பட இருவர் கோப்பாய் பொலிஸாரினால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையிலான விசேட பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கை மூலம் இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 39 வயது பெண்ணும், குறித்த பெண்ணின் சகோதரியின் மகனாகிய 18 வயது இளைஞனும் உள்ளடங்குகின்றனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இரண்டு மோட்டார் சைக்கிள், நகை, மடிக்கணனி, பத்து கைத்தொலைபேசிகள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், ஆட்டோக்களின் ஆவணங்கள் என்பன மீட்கப்பட்டு உள்ளன.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களும் சுன்னாகம் மற்றும் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில்குற்ற செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டவை எனபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். அத்துடன் கைது செய்யப்பட்ட இருவரிடமும் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருவ தாகவும், அதனை தொடர்ந்து நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-4)

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கற்கை நெறிகளாவன, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், சாய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இருசக் கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், டீசல் வாகன இயந்திர திருத்துநர், குளிர்சாதன இயந்திர திருத்துநர் ஆகும்.

இக்கற்கை நெறிகள் கைதடி தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளன. இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கை நெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது கைதடி தொழிற்பயிற்சி நிலையம், A9 வீதி, கைதடி எனும் முகவரியில் எதிர்வரும் 30.11.2016 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாண உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ

யாழ்.செய்திகள்

# மாற்றம் ஒன்றுக்காக மக்களுக்கு சரியான வழியைக் காட்டுங்கள்

## கட்சி உறுப்பினர்களுக்கு டக்ளஸ் எம்.பி.அறிவுறுத்து

தமிழ் மக்களுக்கு தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி வந்துள்ள போலித் தமிழ்த் தேசியவாதிகளின் சாயம் வெளுக்கத் தொடங்கியிருக்கின்றது. அவர்களை எதிர்த்து மக்கள் வெளிப்படையாக கேள்விகளையும், விமர்சனங்களையும் முன்வைக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

எனவே தோழர்களும் கட்சி உறுப்பி னர்களும் கட்சி ஆதரவாளர் களும் மக்களுக்குத் துணையாகவும் அவர்களின் குரலு க்கு வலுவாகவும் மக்களிடம் செல்லுங்கள் என்று செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கட்சியின் தேசிய,மாவட்ட நிர்வாகிகள், தொகுதி, வட்டார அமைப்பாளர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களுடனான விசேட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது இரவு- பகலாக எமது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அவர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வைக் காண்பதிலும் அக்கறையாகச் செயலாற்றினோம். ஆனால் இப்போது அபிவிருத்திப் பணிகள் தொடராமலும் எமது மக்களின் நாளாந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலும் இருக்கின்றன.

தற்போது மாவட்ட அபிவிருத்திக் குழுச் செயற்பாடுகள் அர்த்தமற்றதாகவே காணப்படுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதிக்கான அக்கறைக்கான வேலைத்திட்டங்கள் நடைபெறாமலும் வடக்கு மாகாண சபை செயல் திறனற்றும் இருப்பதாலும் எமது மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளும் அடிப்படைப் பிரச்சினைகளும் தீர்வில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

எனவே மக்களைச் சந்தித்து நிலைமைகளை தெளிவுபடுத்தி உரையாடுங்கள். அவர்களின் நலன்சார்ந்த போராட்டங்களுக்கு எழுச்சியோடு துணையாக செயற்படுங்கள். நாம் அதிகாரத்தில் இருந்தபோது ஆற்றிய பணிகளை மக்களுக்கு தெளிவுபடுத்துங்கள். மக்களை சரியான திசை நோக்கி வழிநடத்துங்கள். தமிழ் உணர்வைத் தூண்டியும் போலித் தமிழ்த் தேசியம் பேசியும் மக்களின் வாக்குகளை அபகரித்தபின் மக்களை மறந்து சுகபோக வாழ்க்கை வாழ்கிறவர்களை மக்களுக்கு இனங்காட்டுங்கள். மாற்றம் ஒன்றின்அவசியத்தை உணர்த்துங்கள்.

கடந்த காலத்தில் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு கிடைத்த பல வாய்ப்புக்களை தமிழ்த் தலைமைகள் எனப்பட்டோர் தவறவிட்டும், குழப்பியடித்தும் உள்ளனர். அவ்வாறு ஒரு தவறு நடைபெறுவதற்கு இனியும் அனுமதிக்க முடியாது.

அதற்காக தமிழ் மக்கள் சரியான திசையில் சரியானவர்களுடன் அணி திரண்டு வருவார்களானால் எமது அரசியல் உரிமைகளை எம்மால் வென்றெடுக்க முடியும். எமக்கு கிடைக்கும் அரசியல் பலமே தமிழ் மக்களின் தற்போதைய அநாதரவான தலைவிதியை மாற்றி எழுதும் என்றும் அவர் தெரிவித்ததாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.)ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# மாணவர்களை இணைத்துக்கொள்ள விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலக்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தினால் 2016/2017 ஆம் கல்வியாண்டிற்குரிய முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வியில் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத் திகதி அன்று விண்ணப்பதாரிகள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் முதலாம் மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவராகவோ அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளி உயர்கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவோ அல்லது இலங்கை தேசிய கல்வியியற் கல்லூரிகளினால் வழங்கப்பட்ட கற்பித்தலில் டிப்ளோமா சான்றிதழையோ அல்லது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளினால் வழங்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழையோ பெற்றிருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 13.11.2016 தொடக்கம் 30.11.2016 வரை www.ou.ac.lk என்னும் இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியுமென யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் மேலும் அறிவித்துள்ளார். (இ

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 'சாதனையாளர் தினம்'-2016 நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள "வடக்கு மாகாண சாதனையாளர் கௌரவிப்பு" நிகழ்வு நாளை 19ஆம் திகதி, நாளை மறுதினம் 20 ஆம் திகதிகளில் மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதலாம் நாள் (19.11.2016) காலை 9 மணிக்கு முதலாம் அமர்வு மாகாணக்கல்விப்பணிப்பாளர்செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்முதலமர்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்கள்,முதலமைச்சர் கிண்ண சதுரங்கப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள், கணிதப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், விஞ்ஞான விநாடி வினாப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள், வணிகப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள், சமூக விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் விவசாயம் மனைப்பொருளியல் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் போன்றோருக்கான கௌரவிப்பு நடைபெறும்.

அதே திகதியில் பி.ப.1.30 மணிக்கு இரண்டாம் அமர்வு ஆரம்பமாகவுள்ளது. மாகாணக்கல்விப்பணிப்பாளர்செ.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறைஅமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன்,கௌரவ விருந்தினராகயாழ்.பல்கலைக்கழககலைப்பீட மொழித்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.றமேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இவ் அமர்வில் மாகாண மட்ட ஆங்கில தினப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் அழகியல்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் கௌரவிப்பு வழங்கப்படும்.

இரண்டாம்நாள்20.11.2016 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள மூன்றாவது அமர்வில் வடக்கு மாகாணத்தில் சாதனைகள் புரிந்த பாடசாலைகளும் அவற்றின் அதிபர்களும் அச்சாதனைகளைப் புரிந்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெறவைத்த பாடசாலைகளின் அதிபர்களும் அவர்களைத் தரம் 5இல் கற்பித்த ஆசிரியர்களும் நூலகப்போட்டியில் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களும் பாடசாலைகளின் வினைத்திறனாக சுகாதார வசதிகளைப் பயன்படுத்தும் பாடசாலைகளின் அதிபர்களும் பங்குபற்றல் வேண்டும்.

மாகாணக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபைத் தலைவர் கந்தையா சிவஞானம், கௌரவ விருந்தினராக பிரதிப்பிரதம செயலாளர் (நிதி) எஸ்.யு.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பரிசில்கள் பெறும் மாணவர்களும் கௌரவிப்புப் பெறவுள்ள பாடசாலைகளின் அதிபர்களும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும் தத்தமக்குரிய அமர்வுகளின் ஆரம்ப நேரங்களுக்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக பிரசன்னமாகி தமது வரவுகளை பதிவு செய்து கொள்ளல் வேண்டும் என மாகாணக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(இ-7)

# ஆற்று மணலை கடத்தி பயணித்த உழவு இயந்திரங்கள் மாட்டின

## சாரதிகள் இருவர் கைது

மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட மூன்று இடங்களில் நடைபெற்ற சுற்றிவளைப்புக்களின் போது 2 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருத்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை உழவு இயந்திரங்களில் கடத்திய போது இரண்டு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகல் 12 மணி, பிற்பகல் 3.30 மணி, 4 மணி ஆகிய நேரங்களில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவல்களை அடுத்து மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேரோவின் உத்தரவிற்கு அமைய மாங்குளம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் அ.சியாளன் தலைமையில் விரைந்த பொலிஸ் கொஸ்தாபல்களான ஜெயந்த (64843), ரட்ணாநயக்க(48040) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரின் தேடுதலின் போது நட்டாங்கண்டல் கிராமத்தில் 2 லீற்றர் கசிப்பை தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கசிப்புடன் கைதானார்.

இதேவேளை மாங்குளம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் லால் தலைமையில் சென்ற பொலிஸ் அணியினரின் தேடுதலின் போது நீதிபுரம் கிராமத்தில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் சந்தேகத்தின் பேரில் கைதானார்.

இதேபோல் மாங்குளம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் சிசிர தலையில் விரைந்த பொலிஸ் அணியினரின் சுற்றி வளைப்பில் நட்டாங்கண்டல் கிராமத்தில் அனுமதிப்பத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவங்களின் போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளதுடன் சந்தேக நபர்களை விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)


யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியா: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(சி/5648)





அறிவித்தல்

சமய அந்தியேட்டி
கிரியைகள்
மற்றும் வீட்டுக் கிரியைகள்
சிறப்பாக செய்து
கொடுக்கப்படும்.
பொருத்தமாகவும் செய்து
கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
சிவஸ்ரீ சி.சபாரத்தினதேசிகர்
பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்
பண்டாரி அம்மன் கோவில்
தம்பசிட்டி, பருத்தித்துறை.

தொ.இல:
077 670 1678
021 226 3944

(சி-6418)



சேவை நலன் பாராட்டு

திருமதி
கனகரட்னேஸ்வரி சச்சிதானந்தம்




சேவைக்கால விபரம்

1990-1994 யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலை
1995-1996 யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்
1997-1998 கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்
1999-2002 கிளி/முரசுமோட்டை அ.த.க.பாடசாலை
2003-2004 யா/சரஸ்வதி மகளிர் வித்தியாலயம்
2005- இன்று வரை கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்

அளப்பரிய கல்விச் சேவையாற்றி 18.11.2016 இன்று ஓய்வுபெறும் திருமதி கனகரட்னேஸ்வரி சச்சிதானந்தம் அவர்கள் ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் நல்தேகாரோக்கியத்துடனும் வாழ எல்லாம் வல்ல இறை பொருளை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி.





கிளிநொச்சி மாவட்ட தனியார்
பேருந்து உரிமையாளர்களின்
(உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட
நிறுவனத்தின் வருடாந்த

பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

காலம் : 20.11.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணி
இடம் : கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபம்

குறிப்பு

பேருந்து உரிமையாளர்கள் மட்டும் கலந்து கொள்ளவும்.

வருகை தரும்போது தவறாது புதிதாக தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழி அனுமதிப்பத்திரத்தின் நிழல் பிரதியை எடுத்து வரவும்.

தகவல்:
தலைவர் கனகசபாபதி ஜமுனாதரன்
கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களின்
(உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனம்
(C-6409)

தொடர்பு: 021 320 8181



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/6468 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 31<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/2431 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 178cm<br>தகைமை/தொழில்:NCT/அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6470 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 10<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:O/L/அரசதொழில்<br>தொ.இ: G/2432 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 12 சூரி செவ் 6 இல்<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: B/6471 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 15 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BBA/வங்கியாளர்<br>தொ.இ: G/2438 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/6472 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA, HNDA<br>தொ.இ: G/2445 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.

# சுற்றிவளைப்பின் போது ஆற்று மணலை ஏற்றி பயணித்துக் கொண்டிருந்த உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன

## சாரதிகள் கைதாகினர்

முல்லைத்தீவுமாவட்டபொலிஸ் அத்தியட்சகர் காரியாலப் பிரிவிற்குட்பட்ட ஒட்டுசுட்டான் மற்றும் முள்ளியவளை பொலிஸ் நிலையப்பகுதிகளிலுள்ள கூழா முறிப்பு, வற்றாப்பளை ஆகிய இடங்களில் முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவுபொலிஸார்மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களின் போது அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்துக்கொண்டிருந்த உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவுமாவட்டபொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவிற்கு அமைய முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையில் சென்ற பொலிஸ் அணியினரின் சுற்றி வளைப்பின் போது ஒட்டுசுட்டான் கூழாமுறிப்புப்பகுதியில்ஆற்று மணலை ஏற்றி பயணித்துக் கொண்டிருந்த மூன்று உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை முள்ளியவளைப்பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்குமுரணானவகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்துக்கொண்டிருந்த உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைதானார்.

மேற்படி சம்பவங்களின் போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் கைதான சந்தேக நபர்கள் நான்கு பேரும் ஒட்டுசுட்டான், முள்ளியவளை ஆகிய பொலிஸ் நிலையங்களில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15)


# கடலில் பாய்ச்சப்பட்ட வலைத்தொகுதிகள் இந்திய மீனவர்களால் சூறையாடி நாசம்

## தாழ்வுபாடு மீனவர்கள் ஆதங்கம்



மீன்பிடிப்பதற்காக கடலில் பாய்ச்சப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைத்தொகுதிகளை இந்திய மீனவர்கள் நாசம் செய்துள்ளதோடு, அதிகளவான வலைத் தொகுதிகளை களவாடிச் சென்றுள்ளமையினால் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதோடு,தமது வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளதாக மன்னார் தாழ்வுபாடு கிராம மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் தாழ்வுபாடு கிராம மீனவர்கள் வழமை போன்று மீன் பிடிப்பதற்காக கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு இலங்கை கடல் எல்லையில் கடலில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைத்தொகுதிகளை பாய்ச்சி விட்டு மீண்டும் கரை திரும்பியுள்ளனர். மீண்டும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை தாம் கடலில் பாய்ச்சிய வலைகளில் உள்ள மீன்களை பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற போது தாங்கள் பாய்ச்சிய இடத்தில் வலைகள் இல்லை எனவும் தொலைவில் சென்று பார்த்த வேளை இந்திய மீனவர்கள் தமது வலைகளை படகுகளில் ஏற்றிக்கொண்டிருந்தனர்.




வலைகள் தாழ்வுபாடு கிராம மீனவர்களான எங்களுடையது என உறுதிப்படுத்திய போதும் வலைகளை தரவில்லை. சுமார் 15 படகுகளுக்கான வலைத் தொகுதிகளையே இந்திய மீனவர்கள் களவாடிச் சென்றுள்ளனர். இந்திய மீனவர்களினால் சுமார் 40 இலட்சத்திற்கும் அதிகமான வலைத் தொகுதிகள் களவாடப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், அவற்றில் ஒரு சில வலைத்தொகுதிகள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளதாக தாழ்வுபாடு கிராம மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

15 ஆம் திகதி தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் நீண்ட நேரமாக கரை திரும்பாத நிலையில் மீனவர்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டிருந்ததோடு,கடற்படையினரின் உதவியுடன் கடலுக்குச் சென்று மீட்கப்பட்ட வலைகளையும் எரிபொருள் இன்றி காணப்பட்ட படகுகளையும் தாம் மீட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குறித்த மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் நேற்று வியாழக்கிழமை காலை தாழ்வுபாடு கடற்கரைக்குச் சென்று மீனவர்களுடன் கலந்துரையாடினார். இதன் போது கடந்த பல வருடங்களாக இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதாகவும்,நாம் இந்திய மீனவர்களினால் பாதிக்கப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தாம் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் மன்னார் பொலிஸ் நிலையம்,மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் போன்றவற்றில் தொடர்ந்தும் முறைப்பாடுகளை மேற்கொள்ளுகின்ற போதும் தமது பாதிப்பு குறித்து எவ்வித நடவடிக்கைகளையும் உரிய அதிகாரிகள் மேற்கொள்வதில்லை என பாதிக்கப்பட்ட மீனவர்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலனிடம் தெரிவித்துள்ளனர்.

படகுகளுக்கான காப்புறுதி உட்பட கடற்றொழில் திணைக்களம் நடைமுறைப்படுத்தியுள்ள திட்டங்கள் சகலவற்றையும் தாம் செயற்படுத்தியுள்ள போதும் பாதிக்கப்படுகின்ற மீனவர்களுக்கான இழப்பீடுகளை உரிய முறையில் வழங்க மன்னார் மாவட்டகடற்றொழில்திணைக்களம் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என மீனவர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய முறையில் இழப்பீடுகளை பெற்றுக் கொடுக்க மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக் களம் உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும்.

இந்திய மீனவர்களின் கெடுபிடிகளை குறைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட தாழ்வுபாடு கிராம மீனவர்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-4-9)

# மஞ்சள் கடவையூடாக வீதியை கடக்க முயன்ற மாணவன் காயம்

## முல்லைத்தீவு-துணுக்காய் வீதியில் விபத்து

முல்லைத்தீவு நகரப் பகுதியை அண்மித்துள்ளமு/முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் மஞ்சள் கடவையூடாக வீதியை கடக்க முயன்ற வேளை வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிளினால் மோதுண்ட நிலையில் காயமடைந்த மாணவனும் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் பொது மக்களினால் மீட்கப்பட்டு முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு முல்லைத்தீவு -துணுக்காய் வீதியிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றிற்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் தரம் 7 இல் கல்வி பயிலும் பவிக்குமார் பவிசன் (வயது-12) என்ற மாணவனே காயமடைந்தவராவார். (2-5)

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி பகுதியில் ஏற்கனவே நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டபோதும் மீளவும் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய இருவருக்கு மூன்று இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் 30 நாட்கள் கட்டாயச்சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.கிளிநொச்சி இரணைமடுப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய ஒருவரையும் உழவு இயந்திரத்தினையும் கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த உழவு இயந்திரத்தையும் அதன் சாரதியையும் நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து, குறித்த சாரதி ஏற்கனவே நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டபோதும் மீளவும் அதே குற்றத்தில் ஈடுபட்டதனால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் அனுமதிப்பத்திமின்றி மணல் ஏற்றிய ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த சாரதியையும் உழவு இயந்திரத்தினையும் நேற்று முன்தினம் பிற்பகல் மன்றில் ஆஜர்படுத்தியபோது குறித்த நபர் ஏற்கனவே இரு தடவை நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டதை அவதானித்த நிலையில் மன்றினால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் 30 நாட்கள் கட்டாயச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மணல் ஏற்றிய குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டபோதும் மீளவும் அதே குற்றத்தினை செய்தமையால் மேற்படி அதிகூடிய தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் கட்டாயச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் ஏழு அடி உயரமான கஞ்சாச்செடி மற்றும் 26 கசிப்பு போத்தல்கள் என்பவற்றுடன் கைது செய்யப்பட்டவருக்கு ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் 15 நாட்கள் கட்டாயச்சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் ஏழு அடி உயரமான கஞ்சா செடி மற்றும் 26 போத்தல் கசிப்பு என்பவற்றை உடைமையில் வைத்திருந்த ஒருவரை மாவட்ட மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைது செய்திருந்தனர். குறித்த நபரையும் சான்றுப்பொருட்களையும் நேற்று முன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 26 கசிப்பு போத்தல்கள் வைத்திருந்தமைக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் கஞ்சா செடி வைத்திருந்தமைக்கு பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் பதினைந்து நாட்கள் கட்டாயச்சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சிப் பகுதியில் பெண்ணொருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த நபரை கடும் நிபந்தனைகளுடன் கூடிய பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டது.கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் பெண்ணொருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்தமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து குறித்த நபரை கைது செய்த பொலிஸார் சந்தேக நபர் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று முன்தினம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் சந்தேகநபரை மன்றில் ஆஜர்படுத்திய சமயம் சட்டத்தரணி ஊடாக பிணை விண்ணப்பம் செய்யப்பட்டதையடுத்து குறித்த சந்தேக நபரை பத்தாயிரம் ரூபா காசுப்பிணையிலும் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் வதிவிடத்தை உறுதிப்படுத்திய தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணைகளில் செல்லுமாறும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் கையொப்பமிடுமாறும் கட்டளையிடப்பட்டுள்ளதுடன் விசாரணைகளுக்காக எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம்திகதி தவணையிடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி பளைப்பகுதியில் பன்றிக்கு வைப்பதற்கு தயாரித்த வெங்காய வெடியை வைத்திருந்தவருக்கு இரண்டாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளைப்பகுதியில் பன்றிக்கு வைப்பதற்குரிய வெங்காயம்வெடியை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த பளைப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுக்கு இரண்டாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சிப்பகுதியில் 900 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்தவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் 900 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2-15)

# தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் புத்தர் சிலைகள் திட்டமிட்டு நிறுவப்படுகின்றன



நல்லாட்சி அரசின் மறைமுக ஆதரவுடனேயே தமிழ் மக்கள் வாழ்கின்ற பிதேசங்களில் புத்தர் சிலைகள் திட்டமிட்டு நிறுவப்படுகின்றன என முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். நிலை மாறு காலநீதியும் அதன் தோல்வியும் என்ற தொனிப்பொருளில் சமூக நலஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடனான கலந் துரையாடல் ஒன்று கடந்த 5 ஆம் திகதி முல்லைத்தீவு மல்லாவி பொதுநோக்கு மண்டபத்தில் நடை பெற்றது. அக் கலந்துரையாடலின் போதே மேற்குறித்த கருத்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் போரினால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்கள குடியேற்றத்தை தடுக்க வேண்டும் என்றும் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த நிலங்களை இராணுவம் கபளீகரம் செய்து தமது வேலைக்கு பயன்படுத்தி வருகின்றமையால் பாதிக்கப்பட்ட மக்கள் அதனை மீட்பதற்கு எத்தனையோ முறைப்பாடுகள் செய்தும் பல வகையான போராட்டங்களை நடத்தியும் எவ்விதபயனும் கிடைக்கவில்லை என சமூக ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கியமான மீன்வளத்தை இராணுவம், கடற்படையின் துணை கொண்டு தென்பகுதி சிங்கள மீனவர்கள் கபளீகரம் செய்து சூறையாடுகின்றது. இதன் காரணமாக இம்மாவட்ட மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வரும் நிலையில் இது தொடர்பாக முறையிட்ட போதும் நல்லாட்சி அரசால் ஆக்கபூர்வமான பயன் எதுவும் கிடைக்கவில்லை.

அத்துடன் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் திட்டமிட்டு புத்தர் சிலைகளை நிறுத்தி தமிழ் மக்களின் பரிமாணத்தை உலகறியச் செய்ய முனைப்புக்காட்டி வருகின்றது. இது அரசின் மறைமுக ஆதரவுடன் நடைபெறுகின்றது. பல உண்ணாவிரதங்களை மேற்கொண்டும், பல ஆர்ப்பாட்டங் களை மேற்கொண்டும் அரசியல் கைதிகள் ஒரு விடிவான வாழ்வை காணவில்லை. புனர்வாழ்வு அளிக் கப்பட்ட முன்னாள் போராளிகள் அங்கவீனமும் உடல் உள மற்றும் வெளிக்காயங்களினால் துன்புறும் நிலையில் வாழ்கின்றார்கள்.

புனர்வாழ்வு முகாம்களில் நஞ்சு ஊசி ஏற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அடிக்கடி தலைசுற்றினாலும் தலைவலி, மயக்கம், ஒரு வித சோர்வுத்தன்மையோடும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இவர்களின் வாழ்வை முன்னேற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

புலனாய்வாளர்களின் தொடர்ச்சியான தலையீடுகளும் அச்சுறுத்தல்களும் பொது இடங்களில் ஒன்று கூடுகின்ற மக்களை புகைப்படம் எடுப்பதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தகவல் அறியும் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் நடைமுறையில் இருக்கும் பொழுது சுதந்திரமாக செயற்படக் கூடிய நிலை காணப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் நிலை மாறுகால நீதியை அல்லது இடைக் கால நீதியை நடை முறைப்படுத் துவது என்பது மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடாகவே இருக்கின்றது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மீதும்; அரசாங்கத் தினால் முன்னெடுக்கப்படுகின்ற நல்லிணக்கம் மற்றும் நிலைமாறு கால நீதி தொடர்பான செயற்பாடுகள் தொடர்பாகவும் நம்பிக்கை இழந்துள்ளதோடு விரக்தியும் அடைந்துள்ளார்கள் என்பது கடந்த வாரம் யாழ். முற்றவெளியில் இடம்பெற்ற எழுக தமிழ் நிகழ்வு சுட்டிக்காட்டி நிற்கின்றது.

மேற்படி நிகழ்வானது தமிழ் மக்கள் மத்தியில் நீதி, உண்மை மற்றும் விடுதலை மேலுள்ள ஆர்வத்தையும், இளைஞர்களின் எழுச்சியையும் கட்டியம் கூறி நிற்கின்றது.

வட்டுக்கோட்டை பிரகடனத்தை இலங்கை அரசாங்கமானது சரியாக கையாளாதபடியால் தான் பாரிய யுத்தம் ஒன்றிற்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. யாழ். முற்றவெளியில் நடைபெற்ற எழுகதமிழ் பிரகடனத்தையும், இலங்கை அர சாங்கமானது இலகுவாக கையாளக் கூடாது என்பது தமிழ் மக்களின் கருத்தாகவுள்ளது என்றும் அக் கலந்துரையாடலில் சமூக ஆர்வலர்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (2-9)

# ஒரு பௌத்த குடும்பம் இல்லாத இடத்தில் விஹாரை அமைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

## சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் பௌத்த விஹாரையை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் 100 விஹாரைகளை புனரமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் வரவு- செலவுத் திட்டத்திலும் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமான முறையில் தமிழ் மக்களது பூர்வீக நிலங்கள் அபரிக்கப்பட்டு அதில் விஹாரைகள் அமைக்கப்படுதல் உடன்தடுத்து நிறுத்தப்பட வேண்டும். எமது நாட்டைப் பொறுத்தவரை எங்கெங்கு சைவ மக்கள் வாழ்கின்றார்களோ அவர்கள் தமது வணக்கஸ்தலங்களான கோவில்களை அமைப்பதில் தவறில்லை. அதேபோன்று முஸ்லிம், கிறிஸ்தவ மற்றும் பௌத்த மக்களும் அதிகளவில் வாழும் இடங்களில் தமது வணக்கஸ்தலங்களை அமைப்பதில் தவறில்லை.

அதிகளவான பௌத்த மக்கள் வாழும் இடங்களில் விஹாரைகள் அமைப்பதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் மாங்குளம் போன்ற இடத்தில் ஒரு பௌத்த குடும்பம் கூட இல்லாத இடத்தில் பௌத்த விஹாரை அமைத்து அங்கு சில விடுதிகளை அமைத்து அங்கு வரும் சிங்கள மக்களுக்கான விடுதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதென்பது ஒரு முற்றிலும் பலாத்காரமான விடயம்.

அதேபோன்று கொக்கிளாய் பகுதியில் சிங்கள மக்கள் வாழ்கின்றனர். ஆனால் இவர்களில் 90 வீதமானோர் கிறிஸ்தவர்கள். எனவே அந்த மக்கள் தமக்கான தேவாலயத்தை அமைப்பதற்கு நாங்கள் எப்போதும் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை. ஆனால் அங்குள்ள ஒரு சில குடும்பங்களுக்காக எமது மக்களதும் திணைக் களங்களதும் காணிகளை சட்டவிரோதமான முறையில் அபகரித்து ஒரு சில பிக்குகளின் ஏற்பாட்டில் அங்கு விஹாரை அமைக்கப்படுகின்றது.

எனவே பௌத்த மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் பௌத்த விஹாரை அமைத்தால் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. உதாரணமாக வவுனியாவின் தென்பகுதியில் பௌத்த விஹாரை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு பௌத்த மக்கள் அதிகம் வாழ்கின்றனர். நாங்கள் அதனை எப்போதும் எதிர்த்ததில்லை. எனவே தமிழ் மக்களது பூர்வீக நிலங்களில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் விஹாரைகள் அமைப்பதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என தெரிவித்தார். (2-250)

# முசலி மீனவர்களின் பிரச்சினை குறித்து ஆராயப்பட்டு தீர்வு கிடைப்பு

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே. காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் தலைமையிலான குழுவினர் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மகிந்த அமரவீரவை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த வாரம் குறித்த விடயம் தொடர்பாக அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்ததாகவும், அதற்கான தீர்வை அவர் இன்று வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார். குறித்த விடயம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் முசலி மீனவர்களுக்கு சாதகமான பதில் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிலாவத்துறையில் பதிவு செய்யப்பட்ட மீனவர்கள் மட்டும் அங்கு முன்னரைப் போன்று தற்காலிக மீன்பிடி தொழிலில் ஈடுபடவும், காயக்குளி பகுதியில் 1990ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து மீன்பிடி தொழிலில் ஈடுபடும் கொண்டச்சி பகுதி மீனவர்கள் மட்டும் மீனவத்தொழிலில் ஈடுபட முடியுமெனவும் அமைச்சரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான், அமைச்சர் ரவூப் ஹக்கீம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக், மீனவ சங்கங்களின் சமாச பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொணடிருந்தனர். (2)

# மீள்குடியேறி ஏழு ஆண்டுகள் கடந்தும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை

## மகஜர் கையளிப்பு

(மல்லாவி)


முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கரும்புள்ளியான், கொம்பறுத்தகுளம் ஆகிய பகுதிகளில் தாங்கள் மீள்குடியேறி ஏழு ஆண்டுகளாகியும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

தமக்கான மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி இப்பகுதி மக்கள் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர் ஆகியோருக்கு மகஜர்களை கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேறிய பகுதிகளாக காணப்படும் மாந்தை கிழக்கு, கொம்பறுத்தகுளம், கரும்புள்ளியான் ஆகிய கிராமங்களில் ஒரு பகுதியான கல்குவாறி வீதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை மாந்தை கிழக்கு பிரதேச செயலரிடம் நேற்று கையளித்துள்ளனர்.

அத்துடன் மாவட்ட அரச அதிபருக்கான மகஜரினையும் நேற்று அனுப்பி வைத்துள்ளதுடன் குறித்த பகுதியானது யுத்தத்தின் பின்னர் முதன் முதலில் மக்கள் மீள்குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதியாகவுள்ளதாகவும் ஆனால் இன்றுவரையும் தமக்கான மின்சார வசதிகள் உள்ளிட்ட வசதிகள் இதுவரை ஏற்படுத்தித்தரவில்லை என்றும் இப்பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளார். (2-15)









32 ஆவது திரிசாரணர் மாநாடு கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமாகி 6 ஆம் திகதிவரை மன்னாரில் நடைபெற்றது. இதற்கமைய யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் திரிசாரணர்கள் கலந்து கொண்டதைப் படங்களில் காணலாம்.

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2016-15.12.2016



*எதிரிகளை வெல்ல அற்புதமான யோசனைகளை எடுத்துரைக்கும் மிதுன ராசி நேயர்களே!*

உங்களது கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தொடக்கத்தில் 6 ஆம் இடத்தில் ராசி நாதன் சஞ்சரிக்கின்றார். அவரோடு சகாய ஸ்தானாதிபதி சூரியனும் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார்கள். அதேநேரத்தில் புதன் கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் என்பதால் 6 இல் சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த யோகத்தை வழங்குவார்.

தனாதிபதி சந்திரன் 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் பார்க்கப்படுகின்றார். இது மாதத்தொடக்கத்தில் உள்ள கிரக நிலை. குருச்சந்திர யோகத்தோடு மாதம் தொடங்குவதால் இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும். தூர தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இட மாற்றம், ஊதிய உயர்வு, இலாகா மாற்றங்கள் போன்றவை எதிர்பார்த்தபடியே கிடைக்கும்.

ராகு-கேதுக்களின் ஆதிக்கம் சகாய ஸ்தானத்திலும் ஒன்பதாம் இடத்திலும் உள்ளது. சர்ப்ப கிரகங்கள் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது அற்புதப் பலன்களை அள்ளித்தர வேண்டுமானால் நாகசாந்திப் பரிகாரங்களை நல்லவிதமாகச் செய்ய வேண்டும். சுய ஜாதகத்தில் ராகு திசை, கேது திசை, ராகுபுத்தி, கேதுபுத்தி போன்றவை நடைபெற்றால் நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்வது நல்லது.

அஷ்டமாதிபதி சனி கொஞ்சம் வலிமையிழந்து இருக்கும் மாதமிது. எனவே ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறி உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்வர். விலகிச் சென்ற உறவுகள் வந்திணையலாம். புதியதொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள வங்கிகளையோ, வள்ளல்களையோ நாடுபவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும். புத்திர ஸ்தானாதிபதி சுக்ரன் சப்தம ஸ்தானத்தில் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால், திருமண வயதில் உள்ள பிள்ளைகளுக்கு கல்யாணப் பேச்சுவார்த்தைகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

செவ்வாய்க் கிரகத்திற்குரிய தெய்வம் முருகப்பெருமானாவார். அந்த செவ்வாய் உங்கள் ராசிக்கு அஷ்டம ஸ்தானத்தில் அல்லவா உச்சம் பெற்றிருக்கின்றார். எனவே வாகனப் பழுதுகள் ஏற்படலாம். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கார்த்திகைத் திருநாளில் குகனை வழிபாடு செய்யுங்கள். நேர்த்தியான வாழ்வு உங்களுக்கு அமையும். நிகழ்காலத் தேவைகளும் பூர்த்தியாகும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 25 ஆம் திகதி தனுசு ராசிக்கு புதன் செல்கின்றார். அங்கிருந்து கொண்டு உங்கள் ராசியை பார்க்கின்றார். ராசிநாதன் ராசியைப்பார்க்கும்பொழுது, யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். நண்பர்கள் நல்ல தகவல்களை கொண்டு வந்து சேர்ப்பர். மாமன் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். வியாபார விரோதங்கள் விலகும். சொத்துக்கள் வாங்குவதில் சொந்தங்களே தடையாக இருந்திருக்கலாம். அந்த தடைகள் இப்பொழுது அகலும். அந்நிய தேசத்திலிருந்து உத்தியோகம் சம்பந்தமாக நல்ல தகவல் வந்து சேரும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 4 ஆம் திகதி மகர ராசிக்கு சுக்ரன் செல்கின்றார். 5, 12 இற்கு அதிபதியான சுக்ரன் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் விரயம் ஏற்படலாம். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி செலவிடுவீர்கள். பெண் குழந்தைகளாக இருந்தால் சீர்வரிசையும் வாங்கிச் சேர்க்கலாம். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். பாதியில் இருந்த கட்டடப் பணியை மீதியும் தொடர்வீர்கள். பொதுவாக இதுபோன்ற காலங்களில் தெசாபுத்திக்கு ஏற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.




## வெற்றி நிச்சயம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார். 11 இற்கு அதிபதியான செவ்வாய் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். அதேநேரத்தில் 6 இற்கு அதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படலாம். தூரத்து உறவினர்களாலும் தொல்லை உண்டு. கட்டடத் திறப்பு விழாக்களிலும் கடை திறப்பு விழாக்களிலும் தாமதம் ஏற்படலாம். செய்தொழிலில் புதியவர்களை சேர்த்துக் கொண்டு பழைய பங்குதாரர் களை விலக்க முன்வருவீர்கள். அரசியலில் உள்ளவர்களுக்கு திடீரென பொறுப்புகள் மாற்றப்படலாம். மருத்துவச்செலவுகளால் மகிழ்ச்சி குறையாமலிருக்க மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. இம்மாதம் குமரக்கடவுளை வழிபடுவதோடு, புதன்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும் மாதமாகும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். தக்க சமயத்தில் தோழிகள் கைகொடுத்து உதவுவார்கள். கணவன்-மனைவிக்குள் பாசமும் நேசமும் அந்நியோன்னிய உறவும் ஏற்படும். குழந்தைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

சேமிப்பின் மூலம் தங்க நகைகளை வாங்க முன்வருவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கச் சம்மதிப்பர். தாய்வழி உறவிலும் சகோதர உறவிலும் பகை பாராட்டாமல் நடந்து கொள்வது நல்லது. கார்த்திகைத் திருநாளில் முருகப் பெருமானையும் புதன்கிழமைகளில் பெருமாளையும் வழிபடுவது நல்லது.



*இலட்சியக் கனவு நிறைவேறும் வரை பாடுபட்டுக் கொண்டிருக்கும் கடக ராசி நேயர்களே!*

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சந்திரன் இலாப ஸ்தானத்தில் உச்சம் பெற்று தனாதிபதி சூரியனால் பார்க்கப்படுகின்றார். எனவே, பணத்தேவைகள் பூர்த்தியாகும். பொருளாதார நிலையிலிருந்த ஏற்ற, இறக்கங்கள் மாறும். வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைப்பீர்கள்.

இயற்கையிலேயே பொதுநல ஈடுபாட்டில் அதிக கவனம் செலுத்தும் நீங்கள், இப்பொழுது ஏதேனும் ஒரு துறையில் சாதனை நிகழ்த்த வேண்டுமென்று விரும்புவீர்கள். அதற்குரிய நேரம் இப் பொழுது அமைகின்றது. செவ்வாய் உச்சம் பெற்று சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றீர்களோ அதைச் செய்து முடிப்பீர்கள். சகோதர ஒத்துழைப்பால் காரியங்களில் இருக்கும் தடைகளை அகற்றிக் கொள் வீர்கள்.

**குருவின் பார்வை**

உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்தில் பதிவதால் கல்யாண வாய்ப்புகள் கை கூடவில்லையே என்ற கவலை அகலும். நல்ல வரன்கள் வந்தும் நழுவிச் சென்று விட்டதே என்று கவலைப்பட்டவர்கள், இப்பொழுது அதைக் காட்டிலும் நல்ல வரன் வந்து விட்டதே என்று மகிழ்ச்சியடைவர்.

குரு மங்கள யோகம் இருந்தால் கல்யாணக் கனவுகள் நனவாக வேண்டுமல்லவா? அந்த அடிப்படையில் இம்மாதம் சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும் வாய்ப்பும் உருவாகப் போகின்றது.

ராகு-கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கும் நேரமிது. இருப்பினும் கேது இருக்கும் வீட்டிற்கு அதிபதியான சனி பகவான் கொஞ்சம் வலிமை இழந்திருக்கின்றார். எனவே இழப்புகளை ஈடு செய்ய எதிர்பாராத நல்ல வாய்ப்புகள் வரும். ராகு கேதுக்களுக்குரிய சிறப்பு வழிபாடுகளையும் நாக சாந்திப் பரிகாரங்களையும் நன்மை தரும் நாளில் செய்தால் உண்மையிலேயே நீங்கள் ஒளிமயமான எதிர்காலத்தை வரவழைத்துக் கொள்ள இயலும். திருக்கார்த்திகையன்று விரதமிருந்து கதிர் வேலனை வழிபடுவதன் மூலம் வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 25 ஆம் திகதி தனுசு ராசிக்குப் புதன் செல்கின்றார். 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சகோதர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அவர் அதிபதியாக விளங்குவதால் சகோதரர்களால் உங்களுக்கு விரயங்கள் ஏற்பட்டிருக்கலாம். கூட்டு வைத்த தொழிலின் மூலமாகவோ கொடுக்கல் - வாங்கல்களின் மூலமாகவோ ஏற்பட்ட விரயங்களை ஈடுகட்ட, இப்பொழுது நீங்கள் எடுக்கும் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சொத்துக்கள் வாங்குவதில் இருந்த தடை அகலும்.




## நட்பால் நலம் கிடைக்கும்

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது திடீர் இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும். அந்நிய தேசத்திலிருந்து கூட அழைப்புகள் வரலாம். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த வெளிநாட்டு முயற்சிகளுக்கு இது உகந்த நேரமாகும். புத்திரப் பேறுக்காக எதிர்பார்த்துக் காத்திருக்கும் தம்பதியர்களுக்கு மகப்பேறு உருவாகி மகிழ்ச்சியைக் கூட்டும்.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**


டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப ராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைக்கும் நேரத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இந்தக்காலத்தில் வாகன மாற்றங்கள் செய்வது நல்லது. உறவினர்களில் ஒரு சிலருடன் விரிசல்கள் ஏற்படலாம். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை தேர்ந்தெடுத்துச் செய்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கும். இம்மாதம் வடிவேலன் வழிபாடும் வராஹி வழிபாடும் வளர்ச்சியிலுள்ள தளர்ச்சியை அகற்றும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். மாதத் தொடக்கத்தில் உத்தியோகம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பீர்கள். எந்தக் காரியத்தையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்து முடிப்பீர்கள்.

கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வாழ்க்கைத்துணையின் வேலை சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். அவர்களுக்கு விருதுகள் மற்றும் பாராட்டுக்கள் கிடைக்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். மாதக் கடைசியில் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முருகன் வழிபாடு முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)




# நல்லாட்சி அரசின் இறுதி பட்ஜெட் இது

## மகிந்தானந்த கூறுகிறார்



2017 ஆம் ஆண்டுக்காக நல்லாட்சி அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டத்தில் வரி விதிப்பதிலும். அரச சொத்துக்களை தனியார் மயப்படுத்துவதிலும்தான் பிரதான அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாக அரசாங்கம் பட்டப்பகலில் திருட்டில் ஈடுபடுகிறது. ஆகவே அரசாங்கத்தின் இறுதி வரவு-செலவுத்திட்டமாக இது அமையவுள்ளதாக மகிந்தானந்த அலுத்கமகே எம்.பி. தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளையிலுள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரு கட்சிகளும் இணைந்துதான் 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டன. என்றாலும் குறித்த இரு கட்சிகளும் இணைந்து 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பித்துள்ளதா என்ற சந்தேகம் எமக்குள்ளது. ஏனெனில் வரவு-செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல யோசனைகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளாகவே அமைந்துள்ளது.

வரி விதிப்பதிலும், அரச சொத்துக்களை தனியார்மயப்படுத்துவதிலும்தான் அரசாங்கத்தின் பிரதான அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் வருமானம் பெறுவதனையுமே இலக்காகக் கொண்டுள்ளனர்.

இருந்தபோதிலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஒருபோதும் இலங்கையில் முதலீடு செய்ய முன்வரப் போவதில்லை. ஏனெனில் மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் ஏற்பட்ட மோசடி மூலம் முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 80 | 80 | 60 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 40 | 50 | 50 | 80 | 60 |
| தக்காளி | 50 | 60 | 45 | 70 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 60 | 80 | 40 | 70 | 70 | 80 | 60 |
| கரட் | 100 | 120 | 70 | 130 | 80 | 140 | 80 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 | 30 | 50 | 40 |
| புடோல் | 50 | 60 | 30 | 60 | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 85 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 90 | 160 | 160 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 50 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 70 | 70 | 80 | 100 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 120 | 80 | 160 | 100 |
| லீக்ஸ் | 90 | 200 | 90 | 80-120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 50 | 60 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 140 | 120 | 105 | 120 | 100 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 30 | 80 | 60 | 120 | 80 |
| போஞ்சி | 180 | 200 | 180 | 180 | 180 | 200 | 160 |
| கத்தரித்தம்புள்ள | 40 | 60 | 30 | 60 | 50 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 30 | 10 | 40 | 20 |
| தேசிக்காய் | 500 | 600 | 400 | 500 | 550 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-35 | 50 | 35 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | 240 | — |
| முள்ளங்கி | 60 | — | 30 | 70 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 15 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | — | — | 50 | — | — |

# சிறைக்குள் பேரறிவு

13

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



**“குற்றமற்ற தனது மகனையும் அவனோடு பிறரையும் மீட்க என ஒரு தாயின் 20 ஆண்டுகால இடைவிடாத கண்ணீர் நிறைந்த போராட்டம் இருக்கிறது. நீதிக்கான அந்தப் போராட்டத்தைப் புரிந்து கொண்டு அதில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட மனிதர்களின் புதிய இளந்தலைமுறை ஒன்றின் தன்னலமற்ற உழைப்பு, தியாகம் இருக்கிறது. எனவே ஒற்றை இரவில் நிகழ்ந்துவிட்ட மாற்றங்கள் இல்லை அவை.”**

...எனது கைது ஏற்படுத்திவிட்ட அடிப்படைச் செலவுகளைச் சமாளிக்க முடியாத நிலையில் எனது தங்கைக்கான கல்விக் கட்டணத்தைச் செலுத்த முடியாத நெருக்கடி ஏற்பட்டது. எனவே படிப்பை இடைநிறுத்துவது என எனது பெற்றோர் முடிவெடுத்தனர். அந்த நிலையில், “எக்காரணம் முன்னிட்டும் கல்வியை இடைநிறுத்த வேண்டாம். முழுக் கல்விச் செலவை நான் ஏற்றுக்கொள்கிறேன்” என



உதவினார், சென்னை மாணவர் நகலகத்தின் உரிமையாளரும், தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனருமான அய்யா அருணாச்சலம். நான் விடுதலை பெற்றவுடன் முதல் சந்திப்பாக அவரைச் சந்தித்து அவருக்கு வியப்பைத் தரவேண்டும், அதன் மூலம் எனது நன்றியை உணர்த்த வேண்டும் என எண்ணமிட்டிருந்தேன். அந்தோ கடந்த 23.05.2016 அன்று அவர் மறைந்துபோனார்.

சி.பி.ஐ. புலனாய்வுத் துறை மிகப்பெரும் பொருட்செலவில் யானை பலத்தோடு ஒரு சட்டத்தரணி பட்டாளத்தையே வைத்துக்கொண்டு எங்களுக்கு எதிராக வாதிட்டு வந்த நிலையில், அவர்களுக்கு ஈடாக ஒரு சட்டத்தரணியை அமர்த்தித்தர என் தந்தையால் எங்ஙனம் இயலும்? என்னைக் காட்டிலும் மோசமான பொருளாதார நிலையிலேயே பெரும்பாலும் அனைவரும் அன்று இருந்தனர். ‘தடா’ நீதிமன்றத்தில் பிணைத் தள்ளுபடியான பின்பு, நாங்கள் எப்படி உச்ச நீதிமன்றம் சென்று மேல்முறையீடு செய்து பிணை பெற்றிருக்க முடியும்.

257 பேரை பலிகொண்ட மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் கைதுசெய்யப்பட்ட சஞ்சய்தத் உட்பட பெரும்பாலானோர் பிணையில் சென்றனர். தமது அன்றாட வாழ்க்கையை நடத்தினர். வெளிநாடுகளுக்குச் சுற்றுலாக்கள் சென்று திரும்பினர். திரைப்படங்களில் நடித்தனர். பிணை தந்த சுதந்திரத்தால் தங்களுக்கு எதிரான வழக்கை வலிமையுடன் எதிர்கொண்டு வாதிட்டனர். ஆனால் எங்கள் வழக்கிலோ, தனது கணவர் விஜயனின் ஒப்புதல் வாக்கு மூலம் தவிர்த்து ஒற்றைச் சாட்சியும் கூட இல்லாமல், எட்டு ஆண்டுகளாக அடைபட்டுக் கிடந்த அவரது மனைவி செல்வலட்சுமிக்கும் கூட பிணை கிடைக்கவில்லை. காரணம், உச்ச நீதிமன்றம் செல்ல பொருள் வசதி இல்லை என்பது மட்டுமே.

தற்போது சில சிறை நண்பர்கள் வேடிக்கையாக என்னிடம், “உங்களுக்கு என்னப்பா, உங்களுக்கு வாதிட இந்தியாவிலேயே தலைசிறந்த சட்டத்தரணி ராம் ஜெத்மலானி இருக்கிறார். அனில் திவான், கொலின் கொன்சால்வஸ், வைகை, யுக் மோத் சௌத்ரி எனப்பலர் உள்ளனர். தமிழக அரசே உங்களுக்காக மூத்த சட்டத்தரணி ராஜேஷ் திரிவேதி போன்றோரை வைத்து வாதிடுகிறது” என்பர்.

அப்போதெல்லாம், 28.01.1998 அன்று எங்கள் 26 பேருக்கும் ‘தடா’ சிறப்பு நீதிமன்றம் மரண தண்டனை தீர்ப்பு வழங்கும்வரை நல்லதொரு சட்டத்தரணியை அமர்த்திடவும் வக்கற்று அரசியல் அநாதைகள் போல் இருந்த எங்கள் நிலையையோ, பின்னர் பல்வேறு தமிழ் மனித உரிமை அமைப்பினர் ஒருங்கிணைந்து ‘26 தமிழர் வழக்கு நிதிக்குழு’ அமைத்து அய்யா பழ.நெடுமாறனின் தலைமையில் வழக்கை உச்ச நீதிமன்றத்தில் எதிர்கொண்டபோது, 25 பேர் சார்பிலும் மூத்த சட்டத்தரணி என்.நடராசன் தவிர்த்து வேறு எவரும் வாதிடும் சூழல் நிகழவில்லை என்ற நிலையையோ என்னால் விளக்க முடியாமல் ஒரு மௌனத்தோடு கடந்து போய்விடுவேன்.

அந்த நண்பர்கள் குறிப்பிடுகிற தற்போதைய மாற்றமெல்லாம் முன்னேற்றமெல்லாம் 2011இல் மூவர் கருணை மனு குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டு மரணத்துக்கு நாள் குறிக்கப்பட்ட பின்பு நிகழ்ந்துவிட்ட மாற்றங்கள். இடையில், குற்றமற்ற தனது மகனையும் அவனோடு பிறரையும் மீட்க என ஒரு தாயின் 20 ஆண்டுகால இடைவிடாத கண்ணீர் நிறைந்த போராட்டம் இருக்கிறது. நீதிக்கான அந்தப் போராட்டத்தைப் புரிந்து கொண்டு, அதில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட மனிதர்களின் புதிய இளந்தலைமுறை ஒன்றின் தன்னலமற்ற உழைப்பு, தியாகம் இருக்கிறது. எனவே, ஒற்றை இரவில் நிகழ்ந்துவிட்ட மாற்றங்கள் இல்லை அவை.

(வலிகள் தொடரும்...)



நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

# பட்ஜெட் - 2017

# கல்வி, திறன் விருத்திக்கான வாய்ப்புக்களை விரிவாக்கல்

(தொடர்ச்சி...)

92.கௌரவ சபாநாயகர் அவர்களே. அறிவினை இலகுவாய் பெற்றுக் கொள்வதற்கு முடியுமானவகையில் எமது மாணவர்களுக்கான சூழலொன்றினை நாம் உருவாக்குதல் வேண்டும். நாம் அவர்களுக்காக "ஸ்மார்ட் வகுப்பறை" ஒன்றினை வழங்குதல் வேண்டும். இதற்காக நாம் ஏற்கனவே ரூபா 6.500 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளோம். இத்துறைக்கான மேலதிக ஏற்பாடாக 2017 இல் இருந்து உயர் தரத்தில் கற்பிக்கும் ஏறக்குறைய 28.000 ஆசிரியர்களுக்கும் உயர்தரத்தில் கற்கவிருக்கும் ஏறக்குறைய 175.000 மாணவர்களுக்கும் டப் உபகரணங்களை (Tabs) இலவசமாக நாம் வழங்கவுள்ளோம். இக் கருத்திட்டத்திற்காக ரூபா 5.000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான்முன்மொழிகின்றேன். வைஃபை (Wi-Fi) இணைப்புகளை வழங்குவதன் மூலம் இம்முன்னெடுப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

93. 3.500 பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேலும் வலுப்படுத்துவதற்காக ஒவ்வொரு பாடசாலையும் ஆகக் கூடியது 50 கணினிகளை வாடகைக்கு பெறுவதற்கான அனுமதியினை வழங்குவதற்கு முன்மொழிகிறேன்.

அதற்காக ரூபா 5.000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

94. உபசார முகாமைத்துவம், ஆடை வடிவமைப்பு, டிஜிற்றல் தொழில் நுட்பம், தளபாடங்கள் மற்றும் நிதியியல் அறிவு போன்ற பல துறைகளினை சாதாரணதர மற்றும் உயர்தர பாடவிதானங்களில் புதிய பாடங்களை நாம் அறிமுகம் செய்யவிருக்கின்றோம்.

95.ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சியினை தொடர்ந்து வழங்குகின்ற எண்ணக்கருவினை கடந்த வருடம் நாம் அறிமுகப்படுத்தினோம்.

தேசிய கல்வி நிறுவகம் தொடர்ச்சியான ஆசிரியப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை தற்பொழுது வழங்கி வருவதனையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். மத்திய அரசாங்க மற்றும் மாகாண பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாகத்தினரின் முகாமைத்துவ திறன்அதிகரிப்பினை நோக்கமாகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கவனம் செலுத்தவிருக்கின்றோம். இதற்காக ரூபா 700 மில்லியனை நாம் ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளோம்.

96.எமது அரசாங்கத்தின் திறமுறை அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில், ஏற்கனவே தரமுயர்த்தப்பட்ட கேகாலை மற்றும் பதுளை மாவட்டங்களிலுள்ள 25 பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு மேலதிகமாக மேலும் 25 பெருந்தோட்டப் பாடசாலைகளை தரமுயர்த்தும் நோக்குடன் ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

97. விசேடமான ஆற்றல்களை வரமாகக் கொண்ட, விளையாட்டு, கலை, கண்டுபிடிப்புகள் போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்ற பல மாணவர்கள் எமது நாட்டில் உள்ளனர்.

அவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான ஒத்துழைப்புகளை வழங்குதல் வேண்டும். அத்தகைய திறமைபெற்ற மாணவர்கள் 1.000 பேருக்கு உதவி வழங்குவதற்காக கல்வி அமைச்சு "சுப் ஹறக்க" புலமைப் பரிசில் திட்டத்தினை ஆரம்பிக்க உள்ளது.

இந்த புலமைப்பரிசில்கள் 6 ஆம் ஆண்டு முதல் மாணவர்களுக்கு வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு மாணவனுக்கும் மாதமொன்றுக்கு 2.500 ரூபா வழங்கப்படும். அதற்காக ரூபா 30 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

98.ஏறக்குறைய 150.000 மாணவர்களுக்கு ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியினை வழங்குகின்ற சர்வதேச பாடசாலைகள் உள்ளடங்கலாக நூற்றுக்குமதிகமான தனியார் பாடசாலைகளும் அவற்றின் கிளைகளும் இந்நாட்டில் காணப்படுகின்றன. இப் பாடசாலைகள் அனைத்தும் வரி விலக்களிக்கப்பட்டவையாகும்.

இதனால் அரசாங்கம் ரூபா 10 பில்லியனை இழக்கவேண்டியுள்ளது. ஆசிரியர்களின் தரம், பௌதிக உட்கட்டமைப்பு மற்றும் பாடவிதானங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக காணப்படுகின்றது.

தனியார் கல்வி நிறுவனங்களின் தொழிற்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்பவில்லையாயினும், அனைத்து மாணவர்களும் தரமான கல்வியினை பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும்.

இந்த வகையில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியினை வழங்குகின்ற தனியார் கல்வி நிறுவனங்களின் தரத்தினை மேற்பார்வை செய்வதற்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் சுயாதீன சான்றுப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு மற்றும் தர உறுதிப்படுத்துகை அதிகார சபையொன்றினை ஸ்தாபிப்பதற்கு தேவையான சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

99.அரசாங்க சம்பளம் வழங்கும் அரச சார்பற்ற பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அக்ரஹார காப்புறுதித் திட்டம், ஆதனக் கடன் மற்றும் இடர் கடன் வசதிகளை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 25 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

100. மாணவ சமூகத்தின் பாதிக்கப்பட்ட குழுவினரில் டிஸ்லெக்சியா, ஓடிஸம் போன்ற கற்றல் இடர்பாடுடைய விசேட தேவையுடைய சிறுவர்களும் மாற்றுத் திறனாளிகளும் காணப்படுகின்றனர்.

இவ்வாறான விசேட கல்வி தேவையுடைய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது.

எவ்வாறாயினும் விசேட கல்வி மற்றும் முறைசாரா கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை கட்புல மற்றும் செவிப்புல குறைபாடுடைய சிறுவர்களுக்கு உதவுவதற்கான கேள்வி மற்றும் பார்வை சாதனங்களின் உதவியுடன் தகவல் தொழில்நுட்ப அடிப்படை உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மூலம்மேம்படுத்துவது அவசியமாகும். மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கான தினசரிக் கொடுப்பனவினை 50 ரூபாவிலிருந்து 150ரூபாவாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

எனவே, விசேட கல்வியினை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் மாற்றுத் திறனுடைய சிறுவர்களுக்கான தினசரிக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்குமாக ரூபா 175 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

101.பாடசாலை சிறுவர்களுக்கு மத்தியில் சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவிப்பதற்காக, நிறுவனசமூகப் பொறுப்புக் கருத்திட்டமென்ற வகையில் 2017 ஜனவரி 8 ஆம் திகதியிலிருந்து அனைத்துப் பாடசாலை சிறுவர்களுக்கும் சேமிப்புக் கணக்கொன்றினை திறக்குமாறு சேமிப்பு வங்கிகள் மற்றும் வர்த்தக வங்கிகள் அனைத்திற்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

102. எங்களது சிறார்களுக்கு சிறந்த தரமான வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கு எங்கள் அரசாங்கமானது அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. இதன் ஒரு முனைவாக நாம் இலவச சுகாதாரத்துறை மீது பாரியளவு முதலீடு செய்துள்ளோம். எவ்வாறாயினும், இந்த பொதுச் சுகாதார சேவைக்கு மேலதிகமாக 5-19 வயது வரையுள்ள 4.5 மில்லியன் பாடசாலை செல்லும் மாணவர்களையும் உள்ளடக்கியதாக ஒரு காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இது ஒரு புரட்சிகரமான நகர்வாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் ரூபா 2 இலட்சம் பெறுமதியான காப்புறுதிக் கொள்கையொன்று வழங்கப்படும். இத்திட்டமானது அதிகபட்சமான ரூபா 1 இலட்சம் வரையிலான தங்கியிருந்து சிகிச்சை பெறும் செலவீனத்தையும் ரூபா 10.000 வரையான வெளி நோயாளர் செலவீனத்தையும் உள்ளடக்கியதாகும். அரசாங்கம் காப்புறுதிக் கட்டணத்தை ஏற்றுக் கொள்வதோடு இதற்காக ரூபா 2.700 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

103. கௌரவ சபாநாயகர் அவர்களே, 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 இல் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி குறைவடைந்திருப்பதாக கலந்துரையாடல்கள் ஏன் விமர்சனங்கள் கூட இடம்பெற்றுவருவதனை நான் அறிவேன். கல்வித்துறைக்கு ஏதேனும் மேலதிக முதலீடுகள் இவ்வருடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகின்ற சிபாரிசுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

## உயர் கல்வி

104. 1995 இலிருந்து பல்கலைக்கழக மாணவர்களின் அனுமதி அதிகரித்துள்ளதுடன், 1995 இல் 9.245 இலிருந்து 2015 இல் 26.000 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களுக்கான மொத்த அனுமதி ஏறக்குறைய 16 சதவீதமாகும்.

சபாநாயகர் அவர்களே, பிரதமரால் பொருளாதாரம் தொடர்பாக இச் சபையில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட அவரது உரையில் குறிப்பிடப்பட்டவாறு எமது நோக்கமானது கல்வி மற்றும் திறன் விருத்திக்கான வாய்ப்புகளை விரிவாக்குவதாகும். இந்த வகையில் 2015 இல் ஏறக்குறைய 26.000 ஆகவிருந்த பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலான உயர் கல்வி நிறுவனங்களுக்கான மாணவர் அனுமதியினை 2020 ஆம் ஆண்டளவில் 50.000 ஆக இரட்டிப்பாக அதிகரிக்கச் செய்வோம்.

105 எமது கலந்துரையாடல்களின் போது தொழிற்றுறையிலிருந்து. நாம் பெற்றுக் கொண்ட பின்னூட்டலானது, எமது கல்வி முறை மற்றும் தொழில் சந்தை இரண்டுக்குமிடையில் எவ்வித தொடர்பும் காணப்படவில்லை என்பதனை தெரியப்படுத்தியது. தொழிற்சந்தையானது நிதி, தகவல் தொழில்நுட்பம், வங்கித் தொழில் மற்றும் உபசார முகாமைத்துவம் போன்ற துறைகளில் பல்வேறு வினைத்திறன் மிக்க உயர் தொழில் புரிநர்களை வேண்டி நிற்கின்றது.


106. எமது மறுசீரமைப்பு முன்னெடுப்புகள் தொழிற்சந்தையினை அடைந்து கொள்வதற்கும் ஏற்கனவே தொழிற்சந்தையிலுள்ளவர்களின் ஆற்றலினை இற்றைப்படுத்துவதற்கும் தேவையான ஆற்றல்களை எமது எதிர்கால இளைஞர் யுவதிகளுக்கு வழங்குவதனை முதன் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த வகையில் வங்கித் தொழில், ஆபத்து முகாமைத்துவம், பிரயோக புள்ளிவிபரவியல், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள், றோபோ தொழில்நுட்பம் மற்றும் இணையத்தள விஞ்ஞானம் மற்றும் உபசார முகாமைத்துவம் போன்ற பட்டப் படிப்புகளை வழங்கும் வகையில் எமது பாடவிதானங்களை நாம் பன்முகப்படுத்த வேண்டியுள்ளதுடன் தற்பொழுதுள்ள கலைப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு கணிதம், புள்ளிவிபரவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணக்கீடு போன்ற பாடங்களை அறிமுகப்படுத்த வேண்டியுமுள்ளது. இந் நோக்கத்திற்காக விரிவுரை மண்டபங்கள், ஆய்வு கூடங்கள், ஹொஸ்டல்கள் மற்றும் ஏனைய வசதிகள் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக வேண்டி ரூபா 13.318 மில்லியனை நாம் ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளோம்.

107. றுகுணு மருத்துவ பீடத்திற்கான மாணவர் அனுமதியினை 160இலிருந்து 300 ஆக அதிகரிப்பதற்கு முடியுமான வகையில் றுகுணு பல்கலைக்கழகத்தின் கராபிட்டியவிலுள்ள மருத்துவ பீடத்தின் 10 மாடிக் கட்டடமொன்று நிர்மாணிக்கப்படும். இந் நோக்கத்திற்காக 2017 இல் ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

108.ஸ்ரீ ஜயவர்த்தனபுர, களனி, றுகுணு, யாழ்ப்பாணம் அதேபோன்று பேராதனைப் பல்கலைக்கழகங்களில் கல்விமாணி கற்கை நெறிகளை நாம் அறிமுகப்படுத்தவுள்ளோம். (தொடரும்)

# தேர்தல் தோல்வியினால் நான் துவண்டுவிட்டேன்

## ஹிலாரி உருக்கமான பேச்சு



அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் தோல்வியால் துவண்டு விட்டேன் என்று ஹிலாரி கிளின்டன் உருக்கமாக பேசியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ஹிலாரி கிளின்டன் எதிர்பாராத நிலையில் தோல்வியை சந்தித்தார். தேர்தல் முடிவுக்குப் பிறகு அவர் எந்த ஒரு பொது நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவில்லை.

தேர்தல் முடிவு தொடர்பாக ஒரே ஒரு கருத்தை மட்டும் அவர் தெரிவித்து இருந்தார். இ-மெயில் விவகாரத்தில் அமெரிக்க புலனாய்வுத் துறைத்தலைவர் எடுத்த முடிவு தான் எனது தோல்விக்கு காரணம் என்று அவர் கூறியிருந்தார்.

ஒரு வாரமாக வெளி நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்ளாமல் இருந்த் ஹிலாரி கிளின்டன் நேற்று வோஷிங்டன் குழந்தைகள் பாதுகாப்பு இல்ல நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது.

இந்த விழாவுக்கு வருவது எனக்கு எளிதாக அமைந்திருக்கவில்லை. பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் தான் இந்த விழாவில் நான் கலந்து கொள்கிறேன். உங்களில் பலருக்கு தேர்தல் முடிவு அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கலாம். எனக்கும் அதே நிலை தான் இருந்தது. தோல்வியால் நான் துவண்டுவிட்டேன்.

இதை ஏற்றுக்கொள்வது எளிதானதாக தெரியவில்லை. நான் இந்த தேர்தல் மூலம் அமெரிக்க மக்களின் ஆன்மாவை புரிந்து கொண்டேன். அதுமட்டுமல்ல எனக்கு ஒரு பாடத்தை கற்றுக்கொள்ளும் நிகழ்வாகவும் இது அமைந்தது.

இன்று டொனால்டு ட்ரம்பிற்கு நாட்டை தலைமையேற்று வழிநடத்தி செல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அமெரிக்கா என்பது ஒரு மதிப்புமிக்க தேசம். அந்த மதிப்பை நாம் ஒருபோதும் இழக்கக்கூடாது. நாட்டின் மீது நம்பிக்கை வையுங்கள். நாட்டின் மரியாதைக்காக நாம் எப்போதும் போராடுவோம். இதை ஒருபோதும் விட்டுக்கொடுக்காதீர்கள்.

குழந்தைகள் நம்முடைய நாட்டின் சொத்து. அவர்களுடைய சக்தி நமக்கு தேவை. குழந்தைகள் ஒருபோதும் வறுமையில் வாடக்கூடாது. அவர்களுடைய வாழ்க்கை தான் நாட்டினுடைய வாழ்க்கை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து வெளியேறியது ரஷ்யா



(மொஸ்கோ)

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து ரஷ்யா வெளியேறுவதற்கு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார்.**

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இனப்படுகொலை, மனிதருக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க 2002இல் உருவாக்கப்பட்டது.

இந்த நீதிமன்றம் நெதர்லாந்தின் டென் ஹாக் நகரில் அமைந்துள்ளது.

ஜூலை 2008 கணக்கெடுப்பின் படி உலகில் 106 நாடுகள் இந்நீதிமன்றத்தின் உறுப்பினராக இருக்கின்றன. ஆனால் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற சில நாடுகள் இந்த அமைப்பை கண்டனம் செய்து சேரவில்லை.

இந்நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து ரஷ்யா வெளியேறுவதற்கு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றம் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற தவறிவிட்டது என்று புடின் குற்றஞ்சாட்டினார். பெரிய நாடான ரஷ்யா சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறுவது பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# இந்திய எல்லை அருகே பாக்.படையினர் பயிற்சி

## பிரதமர் நவாஸ் முன்னிலையில் இடம்பெற்றது

இந்திய எல்லை அருகே, பாகிஸ்தான் படையினர் திடீர் போர் பயிற்சியில் ஈடுபட்டனர். இந்த போர் பயிற்சி, பிரதமர் நவாஸ் ஷெரீப் முன்னிலையில் நடந்தது.

இந்தியா மீது பாகிஸ்தான் தொடர்ந்து எல்லை தாண்டிய பயங்கரவாதத்தையும், அத்துமீறிய தாக்குதல்களையும் நடத்தி மறைமுகப்போரை திணித்து வருகிறது.

காஷ்மீர் எல்லைப் பகுதியில் முகாமிட்டு, இந்திய நகரங்களில் தாக்குதல் நடத்த சதிசெய்து கொண்டிருந்த பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மீது இந்திய இராணுவம் கடந்த செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி நள்ளிரவில் துல்லியமான தாக்குதல் நடத்தியது. இதில் பயங்கரவாதிகளின் 7 முகாம்கள் அழிக்கப்பட்டதுடன், சுமார் 40 பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது.

பாகிஸ்தான், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகிறது. இந்திய வீரர்களும் தகுந்த பதிலடி கொடுத்து வருகின்றனர்.


இந்த நிலையில் பஞ்சாப் மாநிலம், பகவல்பூர் நகர் இந்திய எல்லை அருகே உள்ள காயிர்பூர் டேம்வாலி என்ற இடத்தில் பாகிஸ்தான் படைகள் நேற்று முன்தினம் 'திடீர்' போர் பயிற்சியில் ஈடுபட்டன.

இந்த போர் பயிற்சி, பிரதமர் நவாஸ் ஷெரீப், இராணுவ தளபதி ரஹீல் ஷெரீப் ஆகியோர் முன்னிலையில் நடந்தது.

இந்த போர் பயிற்சியில் விமானப்படையும், இராணுவமும் பங்கேற்றிருந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் துருப்புகள் 7 பேர் கடந்த வாரம் இந்திய படையினரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தான் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

போர் பயிற்சி முடிந்தவுடன், அங்கு கூடி இருந்தவர்கள் மத்தியில் நவாஸ் ஷெரீப் பேசினார்.

நமது நாட்டின் பாதுகாப்புக்கு எந்தவொரு அச்சுறுத்தல் வந்தாலும் அதை எதிர்கொள்ள நாம் தயார் நிலையில் இருப்பதை பிரதிபலிக்கிற வகையில்தான் இந்தப் பயிற்சி நடந்து முடிந்துள்ளது. எந்தவொரு நாடும் தேச பாதுகாப்பை எண்ணி கவலைப்



பட்டுக் கொண்டிருக்க முடியாது. பாகிஸ்தான் எந்த நிலையிலும் வலியப்போய் தாக்குதல் நடத்தாது.

அதுதான் நாம் பின்பற்றி வருகிற கொள்கை. நமது பிராந்தியத்தில் அமைதி தவழ்வதற்கு பிற நாடுகளிடமும் பாகிஸ்தான் இதைத்தான் எதிர்பார்க்கிறது.

பிராந்தியத்தில் நடந்து கொண்டிருக்கிற நிகழ்வுகளை நாம் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது.

பாதுகாப்பு, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை கெடுக்கிறபோது, அதற்கு சரியான பதிலடி தரப்படும்.

பாகிஸ்தானின் எதிரிகள் தங்கள் நோக்கத்தை தெரியப்படுத்தி உள்ளனர். அவர்கள் நமது நாட்டின் முன்னேற்றத்தின் அறிகுறிகளை சகித்துக்கொள்ள மாட்டார்கள். எனவேதான் பாகிஸ்தான், பயங்கரவாதத்துக்கு பலியாகி வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)


# சட்டவிரோத குடியேற்றம் இத்தாலியில் 15 பேர் கைது

இத்தாலியில் நடத்தப்பட்ட அதிரடி சோதனையில் சட்டவிரோத குடியேற்றத்திற்கு உதவியதாக 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தாலியில் போலி ஆவணங்களுடன் சட்டவிரோதமாக குடியேறும் வெளிநாட்டவர்கள் அதிகரித்து வருவதாக புகார் எழுந்தது. குறிப்பாக சீன மக்கள் அதிகம் வசிக்கும் டஸ்கன் நகரில், ஐரோப்பிய யூனியன் அல்லாத வெளிநாட்டவர்கள், குறிப்பாக சீனர்கள் சட்டவிரோதமாக தங்கியிருந்து தொழில் செய்வதற்கு தொழிலாளர் ஆலோசனை நிறுவனங்கள் உதவி செய்வதாக குற்றம் சாட்டப்பட்டது.

பிராட்டோ மாகாணத்தில் சுமார் 50 ஆயிரம் சீனர்கள் வேலை செய்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் சட்டவிரோதமாக குடியேறிய தொழிலாளர்களை சார்ந்து இருக்கும் நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். இந்த நிறுவனங்கள் எல்லாம், பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றவில்லை என்றும், வரி ஏய்ப்பு செய்வதாகவும் கூறப்படுகிறது. எனவே, சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்கும் நடவடிக்கைகள் முடக்கி விடப்பட்டுள்ளன. அவ்வகையில், நேற்று முன்தினம் டஸ்கன் நகரில் 'ஒயிட் காலர்ஸ்' என்ற பெயரில் 111 இடங்களில் ஒரே வேளையில் பொலிஸார் சோதனை நடத்தினர். இந்த அதிரடி சோதனையில் 15 பேர் கைது செய்யப்பட்டதாகவும், பலரிடம் விசாரணை நடைபெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7-10)

# காபூலில் தற்கொலைப்படை தாக்குதலுக்கு 6 பேர் பலி!



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று முன்தினம் பாதுகாப்பு அதிகாரிகள் சென்ற பேருந்து . மீது தற்கொலைப் படையினர் நடத்திய தாக்குதலில் இராணுவ அதிகாரிகள் உட்பட 6 பேர் பலியாகினர். 13 பேர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலில் அதிகாரிகள் சென்ற பேருந்து மற்றும் கார் கடுமையாக சேதமடைந்தன. இதனைத் தொடர்ந்து உடனடியாக அந்த இடத்தை அதிகாரிகள் சீல் வைத்தனர். இதற்கு ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டதாக அந்நாட்டின் உயரதிகாரி தெரிவித்தார்.

இந்த தாக்குதல் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

காபூலில் தற்கொலைப் படையினர் பாதுகாப்பு அதிகாரிகளை குறிவைத்து தாக்குதல் நடத்துவது இந்த வருடத்தில் இது இரண்டாவது முறையாகும். கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற தற்கொலைப்படை தாக்குதலில் 64 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# பொலிவியாவில் வாட்டும் வரட்சி!

## குடிநீரின்றி தவிக்கும் மக்கள்

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் வரலாறு காணாத வரட்சி ஏற்பட்டுள்ளதால் முக்கிய நீர் நிலைகள், அணைகள் என்பன நீர்வற்றிக் காணப்படுகின்றன.

இதன் காரணமாக அந்நாட்டின் முக்கிய நகரங்கள் பலவற்றில் முதன்முறையாக நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொலிவியாவின் லாபாஸ் நகர மக்களுக்கான குடிநீர் மற்றும் இதர நீர் தேவைகளை பூர்த்தி செய்யும் முக்கிய அணைகளாக காணப்படும் மூன்று அணைகளிலும் வெகுவாக நீர் வற்றியுள்ளது.

இதற்கமைய Ajuan Khota என்ற பெரிய மற்றும் முக்கிய அணையில் ஒரு சதவீதமே நீர் இருப்பதாகவும் ஏனைய இரண்டு அணைகளில் 8 சதவீதம் நீர் காணப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பல நகரங்களிலும் சுமார் 60 மணிநேரம் வரையான நீர் வெட்டுகள் அமுலில் இருப்பதன் காரணமாக மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக ட்ரக் வண்டிகள் மூலம் நீர் வழங்கப்படும் பிரதேசங்களிலும் இயற்கை நீர் மூலங்களிலும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து நீரைப் பெற்று நீண்ட தூரத்திற்கு சுமந்து செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (இ-7)

# அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிடம் உடன்படிக்கை ஜனவரியில் கைச்சாத்து

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கையளிப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில் இறுதிப்படுத்தப்படும் என்று அனைத்துலக வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

"அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கையளிக்கும் புரிந்துணர்வு உடன்பாடு எதிர்வரும் ஜனவரி மாதம் கையெழுத்திடப்படும்.

இது தொடர்பான 95 வீதமான பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த மாத முடிவுக்குள் புரிந்துணர்வு உடன்பாடு இறுதிப்படுத்தப்படும்.

தற்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பெறுமதி, 1.3 தொடக்கம் 1.5 பில்லியன் டொலராக இருக்கக் கூடும்.

இந்தத் திட்டம் கூட்டு முயற்சியாக மேற்கொள்ளப்படும். சீன மேர்ச்சண்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு 80 வீத பங்குகள் வழங்கப்படும். மிகுதியை அரசாங்கம் வைத்துக் கொள்ளும்.

துறைமுகத்தை முகாமைத்துவம் செய்யும் மற்றும் இயக்கும் நடவடிக்கைகள் கூட்டு முயற்சியாகவே இடம்பெறும்.

அம்பாந்தோட்டை, மாத்தறை, மொனராகல மாவட்டங்களை இணைத்து, 15 ஆயிரம் ஏக்கரில் சிறப்பு பொருளாதார வலயம் உருவாக்கப்படும்.

இது குடியிருப்புக்கள், வைத்தியசாலைகளைக் கொண்டதாக இருக்கும். தென் சீனாவில் உள்ள ஷென்சென் அபிவிருத்தித்திட்டத்தை ஒத்ததாக இது அமையும்.

மத்தள விமான நிலையம் தொடர்பாக சீன நிறுவனம் ஒன்றும் திட்ட முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்தது. அது ஏற்பான திட்டமாக இருக்கவில்லை. அதனால் புதிய திட்டம் கோரப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையம் என்பன தற்போதைய அரசாங்கத்துக்கு முன்னைய ஆட்சியாளர்களால் விட்டுச் செல்லப்பட்ட மிகப்பெரிய தலைவலியாக இருந்தது.

கப்பல்கள் வராத துறைமுகமாகவும் விமானங்கள் வராத விமான நிலையமாகவும் இவை இருக்கின்றன" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# தாஜுடீனுக்கு கிடைத்த தொலைபேசி அழைப்பு குறித்து விசேட விசாரணை



பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுடீன் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் அவரது கையடக்கத் தொலைபேசிக்கு கிடைத்த அழைப்பு தொடர்பில் விசேட விசாரணை இடம்பெற்று வருவதாக இரகசிய பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படுகொலை இடம்பெற்று விசாரணைகள் ஆரம்பமாகி இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் விசாரணைகளை விரைவுபடுத்துமாறு நீதிமன்றம், இரகசிய பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது.

2012ஆம் ஆண்டு கொழும்பு - நாரஹேன்பிட்டியில் வைத்து படுகொலை செய்யப்பட்ட வசீம் தாஜுடீன் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதவான், நிஷாந்த பீரிஸ் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது பிரசன்னமாகியிருந்த இரகசிய பொலிஸார், நீதிமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தனர்.

தாஜுடீன் படுகொலை செய்யப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் அவரது கையடக்கத் தொலைபேசிக்கு அஹமட் சபர் என்பவரது தொலைபேசியிலிருந்து அழைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் விசேட விசாரணை இடம்பெற்று வருவதாகவும் இரகசிய பொலிஸார் மன்றில் அறிவித்தனர்.

எனவே இந்த விசாரணைகள் மூலம் மேலும் பல முக்கிய தகவல்கள் கிடைக்கவிருப்பதாகவும் இரகசிய பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் தாஜுடீன் சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்துள்ள நிலையில் மேலும் விசாரணைகளை தாமதப்படுத்தாமல் விரைவுபடுத்துமாறு நீதவான் இரகசிய பொலிஸாரை அறிவுறுத்தினார்.

இந்த நிலையில் இது தொடர்பிலான அடுத்தகட்ட விசாரணைகள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# நாட்டிலுள்ள அரச நிறுவனங்களுக்கு 500 தகவல் உத்தியோகத்தர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை

தகவல் அறியும் உரிமைக்கான சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளின் கீழ், நாட்டிலுள்ள அரச நிறுவனங்களுக்கு 500 தகவல் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தகவல் உத்தியோகத்தர்களை நியமித்தல் தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களையும் தெளிவுபடுத்தி சுற்றறிக்கைகளை அனுப்பியுள்ளதாக அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகளின் அமைச்சுக்கள் மற்றும் மாகாண திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களுக்கும் தகவல் உத்தியோகத்தர்களை நியமிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மாத இறுதிக்குள் தகவல் உத்தியோகத்தர்களை நியமிக்கும் நடவடிக்கைகளை நிறைவுசெய்யுமாறு சகல அரச நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# ஜி.எல்.பீரிஸின் கட்சியில் பசில் இணைவு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஜி. எல் பீரிஸின் தலைமையில் இயங்கும் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்புரிமையை முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பெற்றுக் கொண்டார்.

நேற்று முன்தினம் மாலை அவர், குறித்த கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக் கொண்டதாக கட்சியின் பொதுச்செயலாளர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்தக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டமையை அடுத்து ஜி. எல் பீரிஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை இழந்து விட்டதாக அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க அறிவித்திருந்தார்.

இந்தநிலையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவரான பசில் ராஜபக்ஷவும் பொதுஜன பெரமுனவில் இணைந்துள்ளார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்தக் கட்சியில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7-10)



## இன்று ஒரு தகவல்

### பரசுராமர் பாணி

தன் தாயையே வாளால் வெட்ட நேர்ந்தது பரசுராமருக்கு. வெட்டச் சொன்னவர் தந்தை. தாயை வெட்டிச் சாய்த்தார் பரசுராமர். உள்ளம் மகிழ்ந்து நீதான் நான் சொன்னதைச் செய்து முடித்த அற்புத மகன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றார் தந்தை. தந்தையே! என் தாயை மன்னித்து அவள் உயிரை மீட்டுத் தாருங்கள் என்றார் பரசுராமர். தந்தை திகைத்துப் போனாலும் அந்த உயிரை மீட்டுத்தந்தார்.

இந்தப் புராணக் கதையை நாத்திகக் கோணத்திலும் பிற கோணத்திலும் அறிவியலின் அடிப்படையில் நாம் பிய்த்துப் பிய்த்து ஆராய்வதிலும் இறங்கி விடாமல் இதில் உள்ள ஒரு நல்ல கருத்தை மட்டும் எடுத்துக் கொள்வது நமக்கு நன்மை தரும்.

அதாவது கீழ்ப்படிவதற்குக் கீழ்ப்படிந்து தன் நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்வது.

வாழ்க்கையில் நாம் எவ்வளவோ பேருக்குக் கட்டுப்பட்டும் கீழ்ப்படிந்தும் நடக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தகுதியால் உயர்ந்தவர்கள் என்றில்லாமல் காரியம் ஆக வேண்டும் என்பதற்காகத் தகுதியால் குறைந்தவர்களிடம் கூடச் சமயங்களில் நாம் கைகட்டி வாய் பொத்தி நிற்க வேண்டியிருக்கிறது.

இவர்களை எதிர்த்துக் கொண்டால் காரியம் ஆவதில்லை. மாறாக கெட்டுவிடுகிறது.

''அப்படியா?'' சரி அப்படியே செஞ்சிடுவோம்! என்று சொல்லிவிட்டு சற்று இடைவெளி விட்டு "ஆனா அதுல வந்து பாருங்க இப்படி கஷ்டம் இருக்கு!" என்கிற பாணியில் நாம் அணுகவேண்டும்.

நம்மை விரட்டி விரட்டி வேலை வாங்குகிறவர்களுக்கு எப்போதுமே ஒரு குணம் உண்டு. அது வேலை ஆகிறதோ இல்லையோ முதலில் இவர்கள் நாம் சொல்வதைச் செவி சாய்த்துக் கேட்கிறார்களா? கேட்டுவிட்டுச் சரி என்கிறார்களா? அதற்காகக் கொஞ்சமாவது முயற்சி எடுத்துக் கொள்கிறார்களா? என்று அக்கறை கொள்வதுதான் அது.

இதையெல்லாம் நாம் செய்துவிட்டு அல்லது செய்வதாகக் காண்பித்துக்கொண்டு ''வேலை ஆகலீங்க!'' என்றால்கூட இவர்கள் சும்மா இருப்பார்கள். ஆனால் எடுத்த எடுப்பிலேயே '' இது கஷ்டம், நடக்காது; என்னத்திற்குத் தேவையில்லாமல்? வேண்டாம்!'' என்கிற பாணியில் அணுகினோமோ –கெட்டது காரியம்! என்ன ஆகும் என்கிறீர்களா? இவர்களது அதட்டல், உருட்டல், மிரட்டல்கள் முன்பை விட அதிகமாகிவிடும்.

சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்ள விரும்புகிறவர்களும் சுமுகமான உறவை விரும்புகிறவர்களும் யாருக்குத் தாங்கள் கீழ்ப்படிய வேண்டுமோ அவர்களிடத்தில் எதிர்ப்புணர்ச்சிகளை உருவாக்கி விடக்கூடாது. இது அமைதியற்ற வாழ்க்கைக்கு நாமே விதை விதைத்ததாக ஆகிவிடும்.

எதிர்த்துச் சாதிப்பதைவிட அணைத்துச் சாதிப்பது நல்லது; பாதுகாப்பானது. வெற்றியின் சதவிகிதமும் இதில்தான் அதிகம்.

**லேனாதமிழ்வாணன்**

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016
# மாதிரி வினாத்தாள்

English Language II

Two Hours

## Test 12

Read the following notice. Fill in each blank with the correct form of the verb given within brackets. The first one is done for you.

**Golden Opportunity for Talented Actors!**

The English Literary Association of Rangama Vidyalaya (1) ***is planning*** ...... (plan) to stage the Caucasian Chalk Circle, a drama (2) ............................ (write) by Bertolt Brecht, to mark the English Day. It (3) ........................ (stage) in the third week of November at the school main hall.

In order to make this event a success, we (4) ................................ (look) for talented students who would like (5) ........................... (act) in this drama, which (6) ............................... (last) for two hours. If you (7) ........................... (interest), please submit your application to the Secretary of the English Literary Association before the 15th of October.

A specimen application form (8) ............................... (display) on the school noticeboard already. The venue and date for the auditions (9) ............................... (announce) later. For more details, you (10) ............................ (request) to contact your English teacher now. (11) ............................... (not miss) this golden opportunity!

1st October, 2016 — Organizing Committee

## Test 13

St. Sebastian's College, Kandy, won the Boys' over all championship at the Sir John Tarbet Athletics Championships this year. A journalist is interviewing Shan de Silva who won the gold medal in the Boys under - 16 Triple Jump. Match the questions with the answers by writing the letter of the question in the space given. The first one is done for you.

a. Who has supported you?
b. What's your next step?
c. You are a professional athlete, what do you do for fun?
d. Tell me, what made you enter the world of sports?
e. Is there anything you'd like to tell the up-and-coming athletes of our country?
f. Have you any unforgettable memories in the event?

Journalist :
Shan, you won the gold medal in the Triple Jump at the last Sir John Tarbet Athletics Championships and you're in the limelight today.
(1) ......d....

Shan :
Well, my father's a sportsman. Ever since I was a kid I've been in the field with my father. So I simply followed in his footsteps. My father is the one who identifed my hidden talents first and he directed me to the correct path. Journalist :
(2) ..............................

Shan :
My parents, my brother and my coach. They have always been with me in my failures as well as successes. No matter what, their blessings are always with me. Without their help I wouldn't have become a champion today.

Journalist :
(3) ..............................

Shan :
Mm... I managed to set a new Sri Lankan record in Triple Jump at the Sir John Tarbet Athletics Championships and it was a dream come true. There's nothing like winning the gold medal, being on the podium, representing my school after so much of hard work.

Journalist :
(4) ..............................

Shan :
Well, my aim is to take part in the South Asian Junior Athletics Championships in India next month. It won't be easy to beat highly talented athletes. I practise very hard every day and I'm fully committed to become a big challenge to the other competitors who take part in this event.

Journalist :
(5) ..............................

Shan :
Well, I watch movies and listen to music. I like classical music a lot. This doesn't mean I don't like pop music. Music helps me to relax and when I'm free I play the guitar.

Journalist :
(6) ..............................

Shan : Yes, nothing is impossible. All you have to do is pursue your goals with determination, confidence, commitment and resilience. If you don't have these qualities, you always find a way not to win!

Journalist :
That's a nice way to put it, Shan. It's been nice talking to you. I wish you all the best in your future endeavours.

Shan :
Thank you.

## Test 14

(a) You are the Secretary of the Young Inventors' Club. You have decided to invite a lecturer of a leading university to speak on 'Modern Technology and Inventions' as part of the Science Day programme. Write a letter to invite him / her. Use about 100 words.


Include the following:
- date
- time
- venue
- purpose
- request for an early reply

OR

(a) The following pie chart shows the results of a survey done to find what Grade 11 students of Walasgala Maha Vidyalaya usually do during the weekend. Study the pie chart and write a description about it.

Use about 100 words.
You may use some of the words given in the box.

| | | | | |
|---|---|---|---|---|
| highest, | lowest, | equal, | less, | more, |
| percentage, | majority, | most, | least | |




## Test 15

Read the following text and answer the questions given below.

The great midnight feasts we used to have are one of the happiest memories of our hostel life. Our hostel master, Mr. Fernando, was a terror and had an evil reputation and these feasts had to be organized with considerable skill. Each feast was something of an adventure and afforded countless opportunities of deeds of daring.

I remember one occasion particularly well. The new term had begun and of course, a feast had been arranged because everyone has brought food from home. There was great excitement during the day and our masters must have wondered what it was all about. There were remarkably few complaints at tea time and some boys did not eat anything at all. Later that evening, punctual as ever, Mr. Fernando turned the lights off at ten o'clock. We could be punished for talking after 'lights out', but it was diffcult to keep quiet. At about eleven o'clock, Saman and Sisira at last overcame their fears. They crept up to the window and drew the curtains slightly to see if Mr. Fernando's light had been turned off. It was still on and we waited impatiently for ages, sorry to have given our hostel master so much marking to do.

When his lightswent out at last, we all jumped out of bed. Thilina produced a wax candle which he set in the middle of the foor. In no time the place was covered with cakes, fruits, nuts and gallons of soft drink. We even persuaded the fat Kanchana to give up his mother's fruit cake, which was not an easy thing to do. Even then we found that he had reserved a very large piece for himself, wrapped up in one of the sheets. It must have been about one o'clock - when some of us were falling a sleep on the foor and only a few hardy ones were still eating - that Kanchana dropped his mother's cake tin. There was a loud crash and gathering up the remains of the feast which we slipped under the bed-clothes, we quickly retired to bed. It was a good thing we acted so rapidly, for a few minutes later the door opened and Mr. Fernando appeared- only to find twenty little boys sleeping gently.

(1) Say whether the following statements are True or False by writing T or F against them.
(i) The hostel master was not popular among the children. ............
(ii) A feast was arranged because the new term had begun. ............

(see page 16)

(iii) None of the children ate anything at tea that day. ..........
(iv) Usually the lights went out at eleven o' clock at night. ..........

(2) What were the boys not allowed to do after 'lights out'?
..................................................

(3) Write the sentence which shows that Kanchana was reluctant to share his fruit cake ..................................................

(4) What made the feast end suddenly?
..................................................

(5) What did the hostel master find out at the end?
..................................................

(6) What do the following words refer to?
(a) it (line 7 - 2nd paragraph) ; ..................................
(b) himself (line 4 - 3rd paragraph) : ..................................

(7) Find the words from the passage which have the same meaning as the following.
(a) crawled ; ..................................
(b) convinced : ..................................

**Test 16**

Write on one of the following. Use about 200 words.
(a) Write an article to your school magazine on "Spending Leisure Time Usefully' Include the following:
- a short introduction to what leisure activities are.
- some useful leisure activities.
- advantages of engaging in them.

**OR**

(b) Write the speech you would make at your school assembly on 'Time is Precious'. Include the following:
- importance of managing time.
- what results from wasting time.
- how should one allocate time for studies, play etc.

**OR**

(c) Complete the following story.
It was a holiday. I was alone at home. I invited some friends to spend the day with me .........

**OR**

(d) Complete the following dialogue.
Vindya : What are you going to do for your A/L's?
Dilini : My parents want me to study Maths or Commerce. But I don't know, I'd love to study Music.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சை
## மாதிரி வினாப்பத்திரம்-2016
## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பகுதி-I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்தெரிவு செய்க.

1) பின்வருவனவற்றில் தகவலை இனங்காண்க.
1)கையடக்கத் தொலைபேசியை அதிகம் பயன்படுத்தல்
2)கையடக்கத் தொலைபேசியினை அதிகம் பயன்படுத்தல் தடைசெய்யப்படல் வேண்டும்.
3)கையடக்கத் தொலைபேசிகளில் பல வகைகள் உண்டு
4)கையடக்கத் தொலைபேசிகளில் பல பயன்பாடுகள் காணப்படுகின்றன

2) ஆசிரியர் தனது கணனியிலுள்ள செயற்றிட்டத்தினைப் பாடசாலைகளுக்குக் கொண்டு செல்ல விரும்புகிறார். அதற்கு அவர் பயன்படுத்தும் சாதனங்களில் மிகப்பொருத்தமானது.
A-உள்ளக வன்தட்டு B-பளிச்சீட்டு நினைவகம் C -இறுவெட்டு
1) A,Bமட்டும் 2) B,Cமட்டும்
3) A,Cமட்டும் 4)A,B,C எல்லாம்

3) USB குதை தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் பிழையானது
1) விரைவான தரவு ஊடுகடத்தல்
2)இயக்கி செலுத்தி (plug and play)
3)இக்குதையினூடாகப் பல்வேறு USB சாதனங்களை இணைக்க முடியும்
4)இக்குதையில் விசைப்பலகை இணைக்க முடியாது

4) திறந்த மூல மென்பொருள் தொடர்பான கூற்றுகளில் சரியானது/சரியானவை
A-Linux Red hat open office writer என்பன திறந்த மூல மென்பொருள் ஆகும்
B-திறந்த மூல மென்பொருட்கள் இயங்கு முறைமை மென்பொருளாக(system sofware) மட்டுமே காணப்படுகின்றது
C-திறந்த மூல மென்பொருட்கள் பிரயோக மென்பொருட்களாக இருப்பதில்லை.
1)A மட்டும் 2)Bமட்டும்
3)A,C மட்டும் 4)A,B,C எல்லாம்

5) ASCII,EBCDIC,UNICODE குறி முறையில் முறையே பயன்படுத்தப்படும் பிற்றுகளின் எண்ணிக்கை?
1)8,7,32 2)7,8,16
3)7,8,32 4)8,7,16


6) $10110_2$ என்ற இரும எண்ணிற்கு சமவலுவான பதினறும எண்
1)$16_{16}$ 2)$15_{16}$
3)$17_{16}$ 4)$18_{16}$

7) $101_2 + A00_{16}$ இற்குச் சமவலுவான இரும எண்?
1)100011 2)101101
3)101010 4)100110

8) 8MB கொள்ளளவிற்குச் சமவலுவான பிற்றுகள்
1)8x2048 2)8x1024
3)$8x2^{25}$ 4)$2x2^{25}$

9) ஒவ்வொரு இலக்கத்தினையும் வகை குறிப்பதற்கு துவித குறியீட்டுத் தசமத்தில் (BCD) நான்கு பிற்றுகள் பயன்படுத்தப்படுகின்றன. பின்வருவனவற்றுள் எது குறியீட்டுத் தசமத்தில் செல்லுபடியற்ற இலக்கமாகும்
1)1000 2)1001
3)0110 4)1100


10) மாணவன் ஒருவன் காலை உணவாக இடியப்பம் அல்லது பாணை பருப்புடன் உண்பான்.
இடியப்பம்-A பாண்-B பருப்பு-C எனக் குறிக்கப்பட்டால் மேற் குறித்த நிகழ்ச்சியினை வகைகுறிக்கும் பூலகணிதக் கோவை யாது?
1)(A and B) or C 2)(AorB) and C
3)A or B or C 4)A and B and C

11)


உருவில்வருவிணைவுD ஆனது 1 ஆகும். பின்வருவனவற்றுள் எது உள்ளீடுகள்A,B,C இற்குப் பொருத்தமற்றவை
1)A=0,B=1,C=0 2)A=1,B=0,C=0
3)A=0,B=0,C=0 4)A=1,B=1,C=1

12) கணனிச் செய்நிரலாக்க செயலொழுங்கில் Y=3+8=6/2-7 இன் பெறுமதி யாது?
1)21 2)26
3)20 4)20.5

13) $(A+B).(\bar{A}+B)$ என்ற பூலகணிதக் கோவையின் எளியவடிவம் யாது?
1)I 2)$\bar{A}$
3)B 4)A

14)


அருகில் உள்ள உருவில் மின்விளக்கு எரிவதற்கு மேற் கொள்ள வேண்டிய செயற் பாட்டில் பொருத்தமானது?
1)A ஆளியினை மூடுதல்,B ஆளியினை மூடுதல்,C ஆளியினை திறத்தல்
2)A,B,C ஆளிகள் திறக்கப்படல்
3)A ஆளியினை மூடுதல்,B,C ஆளிகள் திறந்திருத்தல்
4)A ஆளி திறந்திருத்தல்,B,C ஆளிகள் மூடியிருத்தல்

15) பின்வருவனவற்றில் கலமுகவரியினை சரியாகக் காட்டுவது
1)$ABI 2)A$BI
3)IAB 4)ABI$

அருகே காட்டப்பட்ட விரிதாளைப் பகுதியினைப் பயன்படுத்தி 16ம், 17ம், 18ம் வினாக்களுக்கு விடை தருக.

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1 | 1 | 5 | | |
| 2 | 2 | 30 | | |
| 3 | 3 | 15 | | |
| 4 | 4 | 20 | | |
| 5 | | | | |

16) கலம் C1 இல் தட்டச்சு செய்யப்பட்ட =A1*B2 என்னும் சூத்திரத்தைப் பயன்படுத்தி கலம் C3 வரைக்கும் பிரதி செய்யப்படுகிறது. C3 இல் கிடைக்கும் பெறுமானம்
1)10 2)20
3)45 4)60

17) D1 என்ற கலத்தில் =MAX(B1:B4) என்ற சார்பு பிரயோகிக்கப்பட்டால் D1 இல் பெறப்படும் பெறுமானம்
1)30 2)10
3)20 4)60

18) மேற்காட்டப்பட்ட பகுதி விரிதாளில் உள்ள எண்களின் கூட்டுத்தொகையை கலம் C5 இல் காண்பதற்கான சரியான சூத்திரம்
1)=SUM(A1:B1) 2)@SUM(A1:B4)
3)=+SUM(A1:B4) 4)=SUM(A1:B4)

19) தரவுத்தள மென்பொருளில் தரவுகளை உள்ளீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படக்கூடியது
1)Macro 2)அட்டவணை (Table)
3)அறிக்கை(Report) 4)வினவல்(Query)

| SNO | NAME | ADDRESS |
|---|---|---|
| 001 | - | - |
| 002 | - | - |
| 003 | - | - |
| 004 | - | - |

அட்டவணை 1


| SNO | TERM | MATHS | ICT |
|---|---|---|---|
| 001 | 01 | 75 | 25 |
| 001 | 02 | 35 | 45 |
| 002 | 01 | 75 | 26 |
| 002 | 02 | 20 | 30 |

அட்டவணை 2

20) மேற்காட்டப்பட்ட அட்டவணைகள் தொடர்பான பிழையான கூற்று
1)அட்டவணை 1இல் SNO உள்ள புலத்திற்கு முதன்மைச் சாவியினை (Primary Key) வழங்கலாம்.
2)அட்டவணை 2இல் SNO இற்கு முதன்மைச் சாவியினை வழங்க முடியாது
3)இரண்டு அட்டவணைகளையும் இணைக்கமுடியாது
4)இரண்டு அட்டவணைகளையும் இணைக்கும்போது ஒன்றிற்குப் பல (One to many) தொடர்பு பயன்படுத்தப்படும்.

மிகுதி நாளை தொடரும்...

# ‘ஒரு நாள் ஒரு நிமிடம் வேகத்தை தணிப்போம்’ விழிப்புணர்வு நிகழ்வு









படங்கள்:- பொ.சோபிகா

“ஒருநாள் ஒருநிமிடம் வேகத்தை தணிப்போம்’’ எனும் விழிப்புணர்வு நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.மாவட்டச் செயலக முன்றலில் காலை 7 மணி தொடக்கம் 8.30 மணிவரை நடைபெற்றது.

சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு செயற்பாட்டில் வீதியால் சென்ற வாகனங்கள் அனைத்தும் ஒரு நிமிடம் நிறுத்தப்பட்டு விழிப்புணர்வு செய்தியை தெரிவித்து வாகனங்களில் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டதுடன்பிரயாணிகளுக்கு வீதி விபத்து தொடர்பானதுண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டது.

500 வாகனங்களுக்கு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டதுடன் ஆயிரம் பிரயாணிகளுக்கு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தனர்.

விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புக்கள், துன்பங்கள் என்பவற்றை அனைவரும் ஒரு நிமிடம் சிந் தித்து பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கும்விதத்தில்மேற்கொள்ளப்பட்ட இந்த விழிப்புணர்வு செயற்பாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சத்தியமூர்த்தி கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்ததுடன்வைத்திய அதிகாரிகள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சக்தி கலாசார அபிவிருத்தி மன்றத்தினர் உட்பட பலர்கலந்துகொண்டனர். (இ-9)

# மகிந்தவின் தோல்விக்கு நானும் ஒரு காரணமே!

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு






(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு தானும் ஒரு வகையில் காரணம் என்பதை ஒப்புக்கொள்வதாகவும் எது எப்படி இருந்தாலும் மகிந்தராஜபக்ஷவுடனேயே தனது அரசியல் பயணம் தொடரும் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான புதிய கட்சியின் முதலாவது ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே இந்த கட்சியினை ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. 2017ஆம்ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் மூலம் நல்லாட்சி மக்களின் மீது அதிக வரிச் சுமையை சுமத்தி நாட்டின் பொருளாதாரத்தில் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இதன் அடிப்படையில் நாட்டினுடைய பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைந்த கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர்களை ஒன்றிணைத்து ஸ்ரீலங்கா பொது மக்கள் முன்னணியை உருவாக்கியுள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும் ஸ்ரீலங்கா பொது மக்கள் முன்னணியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எந்த ஒரு பதவியும் வழங்கப்பட மாட்டாதுஎனவும்பசில்தெரிவித்தார்.

அரசியல் பதவிக்காக மட்டும் பல கட்சிகள் தற்போது இயங்கி வருகின்றன. அவ்வாறிருக்க தங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்காக இந்த புதிய கட்சி செயற்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும் சில கட்சிகள் பணத்திற்காக மக்கள் வாக்குகளை பெற்றவர்களை விடுத்து விருப்பு வாக்கு முறையில் கட்சிகளின் தலைமைத்துவத்தை வழங்கி வருகின்றனர்.

கட்சியின் நிலவரங்கள் மற்றும் கட்சியின் பிரதிநிதிகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் மக்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் அந்த தகவல் அறியும் உரிமையினை எமது கட்சி வழங்கும் எனவும் பசில் தெரிவித்தார்.

இவ்வாறு தேர்தல் முறையில் எந்த மாற்றமும் நாட்டில் சிறந்தொரு அரசியல் முறையினை ஏற்படுத்தவும் இந்த புதிய கட்சியும் புதிய திட்டமும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பினை பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 903

கண்ணா




ஜோர்ச்




வில்மன்




விது




ரூபன் லிங்கா




டிலக்ஷி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

11.2016 18

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1421 - நெதர்லாந்தில் கடல் தடுப்புச் சுவர் ஒன்று இடிந்து வெள்ளம் பரவியதில் 10.000 பேர் வரையில் உயிரிழந்தனர்.
- 1477 - இங்கிலாந்தில் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்ட முதலாவது நூலான "Dictes or Sayengis of the Philosophres" வில்லியம் கக்ஸ்டன் என்பவரால் வெளியிடப்பட்டது.
- 1493 - கொலம்பஸ் புவேர்ட்டோ ரிக்கோ என இன்றழைக்கப்படும் நாட்டை முதன்முறையாகக் கண்ணுற்றார்.
- 1626 - புனித பீட்டர் பசிலிக்கா தேவாலயம் ரோம் நகரில் திறந்து வைக்கப்பட்டது.
- 1803 - எயிட்டி புரட்சியின் கடைசிப் பெரும் போர் இடம்பெற்றது. இது எயிட்டி குடியரசு என்ற மேற்கு அரைக்கோளத்தின் முதலாவது கறுப்பினக் குடியரசு அமைக்கப்பட வழிவகுத்தது.
- 1863 - டென்மார்க்கின் ஒன்பதாம் கிறிஸ்டியன் ஷ்லெஸ்விக் நகரம் டென்மார்க்குக்குச் சொந்தம் என அறிவிக்கும் சட்டமூலத்துக்கு ஒப்பமிட்டான். இது 1864 இல் ஜேர்மன்-டென்மார்க் போர் ஏற்பட வழிவகுத்தது.
- 1903 - பனாமா கால்வாய்க்கு தனிப்பட்ட உரிமையை ஐக்கிய அமெரிக்காவுக்கு வழங்கும் உடன்பாடு பனாமாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது.
- 1909 - நிக்கராகுவாவில் இரண்டு அமெரிக்கர்கள் உட்பட 500 புரட்சியாளர்கள் அரசுப்படையினால் கொல்லப்பட்டதை அடுத்து ஐக்கிய அமெரிக்கா இரண்டு போர்க்கப்பல்களை அந்நாட்டுக்கு அனுப்பியது.
- 1918 - லாத்வியா ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1926 - ஜோர்ஜ் பேர்னாட் ஷா தனக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசுப் பணத்தை ஏற்க மறுத்தார்.
- 1929 - அத்திலாந்திக் பெருங்கடலில் நியூஃபின்லாந்துக் கரையில் இடம்பெற்ற 7.2 ரிக்டர் நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. 28 பேர் கொல்லப்பட்டனர்.
- 1943 - உக்ரேனில் லூவிவ் என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த 6,000 யூதர்கள் நாசிப் படைகளினால் கொல்லப்பட்டனர்.
- 1947 - நியூசிலாந்தில் கிறைஸ்ட்சேர்ச் என்ற இடத்தில் வர்த்தகத் தொகுதி ஒன்றில் இடம்பெற்ற தீயில் 41 பேர் கொல்லப்பட்டனர்.
- 1978 - கயானாவில் ஜிம் ஜோன்ஸ் என்பவரின் மக்கள் கோயிலில் இடம்பெற்ற கொலை மற்றும் தற்கொலை நிகழ்வுகளில் 270 குழந்தைகள் உட்பட 918 பேர் இறந்தனர்.
- 1987 - லண்டனில் கிங் க்ரொஸ் சுரங்கத் தொடருந்து நிலையத்தில் இடம்பெற்ற தீயில் 31 பேர் கொல்லப்பட்டனர்.
- 1989 - கோபெ செயற்கைமதி விண்வெளிக்கு ஏவப்பட்டது.
- 1991 - தமிழீழ காவல்துறையின் முதலாவது அணி பயிற்சி முடிந்து வெளியேறியது.
- 2002 - சென்னை புறநகர் பேருந்து நிலையம் கோயம்பேட்டில் திறக்கப்பட்டது:
- 2006 - ஈழப்போர்: மன்னார்க் கடற்பரப்பில் இடம்பெற்ற மோதலில் இலங்கைக் கடற்படையினர் 10 பேர் கொல்லப்பட்டு 3 விடுதலைப் புலிகள் காயமடைந்தனர்.

**பிறப்புக்கள்**

- 1923 - அலன் ஷெப்பர்ட், விண்வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கர். (இ. 1998)
- 1945 - மகிந்த ராஜபக்ச, இலங்கையின் 6வது ஜனாதிபதி.

**இறப்புகள்**

- 1936 - வ. உ. சிதம்பரம்பிள்ளை, கப்பலோட்டிய தமிழன். (பி. 1872)
- 1952 - போல் எல்யூவார், பிரெஞ்சுக் கவிஞர். (பி. 1895)
- 1962 - நீல்ஸ் போர், இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1885)
- 2014 - சி. ருத்ரைய்யா, தமிழ்த் திரைப்பட இயக்குனர். (பி. 1947)
- 2015 - கா. மீனாட்சிசுந்தரம், தமிழறிஞர்.(பி. 1925)

**சிறப்பு நாள்**

- லாத்வியா - விடுதலை நாள். (1918)
- ஓமான் - தேசிய நாள்.

# சுகயீன விடுப்பு போராட்டம்

துணை மருத்துவ சேவையிலுள்ள தொழிற்சங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் சுகயீன விடுப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 9ஆம் திகதி மேற்கொண்டிருந்த சுகயீன விடுப்பு போராட்டத்துக்கு எந்தவிதமான பதிலும் அரசினால் வழங்கப்படாத நிலையில் மீண்டும் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி 16,17ஆம் திகதிகளில் தமது ஒழுங்கிணைந்த சுகயீன விடுப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுகாதார அமைச்சின் துணை மருத்துவ சேவையில் 14 தொழிற் சங்கங்கள் காணப்படுகின்றன.

இதில் பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களை பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பாட விதானத்தில் உள்ளீர்க்கப்பட்டு பயிற்சிகளை வழங்குவதற்கு அரசு முற்பட்டுள்ளதாகவும் குறித்த புதிய பாட விதானத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் இரண்டாவது கோரிக்கையாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை துணை மருத்துவ சேவையில் உள்வாங்கக் கூடாது எனவும் இதற்கான மாற்று வழிகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரி மேற்குறித்த சுகயீன விடுப்பு போராட்டத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்திருந்தனர்.

மேற்குறித்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதவிடத்து தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியசூழ்நிலையில் உள்ளதாகவும் அறிவித்துள்ளன. (இ-9)

# உலகளாவிய சிறுகதை போட்டியில் முதற் பரிசு



லண்டன், புதினம், பத்திரிகை 2016 ஆம் ஆண்டு தனது இருப்தாவது ஆண்டில் பயணிக்கத் தொடங்கியதை முன்னிட்டு நடத்திய உலகளாவிய சிறுகதைப் போட்டியில் கே.ஆர்.டேவிட்டால் எழுதப்பட்ட தாய் என்ற சிறுகதைக்கு முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இவர் 2016 ஆம் ஆண்டுக்குரிய கொடகே சாகித்திய விருது, இரா.உதயணன் தேசிய விருது ஆகிய இரண்டு விருதுகளையும் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# தமிழ் சினிமா வரலாறு

## 29 வயதில் கல்யாண சுந்தரம் மறைந்தார் 302

..கொஞ்சநேரத்தில் படக் கம்பனியைச் சேர்ந்த ஆள் பணத்துடன் அலறியடித்துக்கொண்டு கல்யாண சுந்தரத்திடம் வந்து பணத்தைக் கொடுத்தார்.

கல்யாண சுந்தரம் அப்படி என்னதான் எழுதி வைத்தார்? இதோ இதுதான் தாயால் வளர்ந்தேன் தமிழால் அறிவு பெற்றேன் நாயே! நேற்று ன்னை நடுத்தெருவிலே சந்தித்தேன். நீ யார் என்னை நில் என்று சொல்ல?

இதைப் படித்துப்பார்த்த பட அதிபர் அசந்து போனார். பணம் வீடு தேடி பறந்து வந்தது.

மாடர்ன் தியேட்டர்ஸுக்கு அவர் பாடல் எழுதிக் கொண்டிருந்த போதும் ஒரு சம்பவம் நடந்தது. அதிபர் பாடலை திருப்பி அனுப்பிவிட்டார். உடனே கல்யாண சுந்தரத்தை நண்பர்கள் சமாதானப்படுத்தி சுந்தரத்தின் அறைக்கு அழைத்துச்சென்றனர். அங்கே நாற்காலியில் அமர்ந்தபடி சுந்தரம் பேசினார். அவருக்கு எதிரில் நாற்காலி எதுவும் போடப்படவில்லை.அது தான் அங்கு வழக்கம். இதனால் கல்யாண சுந்தரமும் அவருடன் சென்ற 2 நண்பர்களும் நின்று கொண்டே இருந்தனர். திடீரென்று கல்யாண சுந்தரம் ஒரு பேப்பர் கேட்டு வாங்கினார். அதில் ஒரு வரி எழுதி சுந்தரத்திடம் நீட்டினார்.

அவரும் அதை பார்த்தார்.முகம் மாறியது. சற்று நேரத்தில் 3 நாற்காலிகள் வந்தன. 3 பேரும் உட்கார முடிந்தது.


மரியாதை கொடுத்து மரியாதை வாங்க வேண்டும் இது தான் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எழுதிக் கொடுத்தது.

**எம்.ஜி.ஆர், சிவாஜி படங்களில்**

கல்யாண சுந்தரத்துக்கு வெற்றி மேல் வெற்றி குவியத் தொடங்கியது.

1956இற்கு பிறகு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எழுதிய பாடல்களோடு பல படங்கள் வெளிவரத் தொடங்கின. குறிப்பாக எம்.ஜி.ஆர். படங்களில் தத்துவப் பாடல்கள் இடம்பெற்றன. அவை அவரை புகழ் ஏணியின் உச்சிக்கே கொண்டு சென்றன.

இயக்குநர் கே.சுப்பிரமணியம் கல்யாண சுந்தரத்தை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிர்வாகி ஆர்.எம்.வீரப்பனுக்கு அறிமுகம் செய்தார். அதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆரின் முதல் சொந்தப்படமான நாடோடி மன்னன் படத்துக்கு கல்யாண சுந்தரம் பல பாடல்களை எழுதினார். அதில் தூங்காதே தம்பி தூங்காதே என்ற பாடல் சுப்பர் ஹிட் ஆனது. கல்யாண சுந்தரம் புகழின் சிகரத்தை அடைந்தார்.



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்களை அரசுடைமை ஆக்கி, அதற்கான தொகையை, அவர் மனைவியிடம் வழங்குகிறார், ஜெயலலிதா. கல்யாணசுந்தரத்தின் மகன் குமாரவேலு உடன் இருக்கிறார்.

எம்.ஜி.ஆர் நடித்த அரசிளங்குமரி, கலைஅரசி, சக்கரவர்த்தி, திருமகள், மகாதேவி, விக்கிரமாதித்தன், திருடாதே போன்ற படங்களுக்கும் சிவாஜிகணேசன் நடித்த மக்களைப் பெற்ற மகராசி, அம்பிகாபதி, இரும்புத்திரை, உத்தமபுத்திரன், பதிபக்தி, தங்கப்பதுமை, பாகப்பிரிவினை, புனர் ஜென்மம் போன்ற படங்களுக்கும் பாடல்கள் எழுதினார்.

டைரக்டர் ஸ்ரீதர் இயக்கத்தில் வெளிவந்த கல்யாணப் பரிசு படத்துக்கு எழுதிய அனைத்து பாடல்களுமே சுப்பர் ஹிட்டாக அமைந்தன.

கல்யாண சுந்தரம் எழுதிய பிரபலமான பாடல்களில் சில வருமாறு,

ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே அவன் ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே. ஆராய்ந்து பார் மனதுக்குள்ளே... (படம்: தங்கப்பதுமை - 1959)

குட்டி ஆடு தப்பி வந்தால் குள்ள நரிக்கு சொந்தம். குள்ள நரி மாட்டிக்கிட்டால் கொறவனுக்கு சொந்தம். (படம்: பாசவலை -1956)

சின்னப்பயலே சின்னப் பயலே சேதி கேளடா நான் சொல்லப்போற வார்த்தையை நல்லா எண்ணிப்பாரடா. (படம்: அரசிளங்குமரி-1957)

தூங்காதே தம்பி தூங்காதே நீயும் சோம்பேறி என்ற பெயர் வாங்காதே. (படம்: நாடோடி மன்னன் - 1958)

திருடாதே பாப்பா திருடாதே! வறுமை நிலைக்கு பயந்து விடாதே! திறமை இருக்கு மறந்து விடாதே! (படம்: திருடாதே - 1961)

துள்ளாத மனமும் துள்ளும் சொல்லாத கதைகள் சொல்லும் (படம்: கல்யாணப்பரிசு - 1959)

ஆடை கட்டி வந்த நிலவோ- கண்ணில் மேடை கட்டி ஆடும் நிலவோ. (படம்: அமுதவல்லி-1959)

(தொடரும்)





வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்திய முழுநாள் கலை விழா கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, பேராசிரியர் க.கந்தசாமிக்கு நினைவுப்பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் ஈழநேசன் தம்பதியினர் கீர்த்தனாமுதம் இறுவெட்டினை வெளியிட்டு வைப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)





பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற 54 ஆவது ஆண்டு விழா கலை விழா, பரிசளிப்பு விழா என்பன அண்மையில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் விருந்தி னர்கள் வரவேற் கப்படுவதையும் திருமதி நந்தினி உதயகுமார் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.






இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட மாகாணசபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன், யாழ். மாவட்ட சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் மா.பிரபாகரன், யாழ்.மாவட்ட முதியோர் பேரவைத் தலைவர் இ.மயில்வாகனம் உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.பஞ்சலிங்கம் உரையாற்றுவதையும் மாணவி ஒருவரின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம் . (படங்கள்:-நல்லூர் செய்தியாளர்)






யாழ்.நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளையின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான பல்லூடக தெறிகருவி, மடிக்கணனி முதலான நவீன கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதையும் பாடசாலைச் சமூகத்தால் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை நினைவுப்பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.



மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் புதிய ஆய்வுகூட உட்கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் இடம்பெற்றது. வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் ஏ.காந்தநேசன் உள்ளிட்ட விருந்தினர்கள் பங்கேற்றிருந்தனர்.



வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனின் குறித்தொதுக்கப்பட்ட மாகாண சபையின் நிதியிலிருந்து யாழ்.கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தியாலயத்திற்கு போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்று பாடசாலைச் சமூகத்தினரிடம் வழங்கப்பட்டது.

# யா/ஆனைப்பந்தி மெதடிஸ்மிஷன் வித்தியாலயம்

## தரம் 05 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு-2016


### வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்



மா. தனுசியன் - 180


கி. அட்ஷஜா - 179



ர. பிரதாப் - 178



சி. ஷந்தோஷ் - 175


பா. கௌசிகன் - 171


ரா. ஹரிஷ்ராஜ் - 169


க. கவிந்தியா - 167


ப. வினுக்சன் - 165


ர. அட்சயன் - 163


கி. கயல்விழி - 163


பா. கிருத்திகன் - 162


யே. யுவன்ராஜ் - 162


ர. தனுசன் - 160


வி. சந்தியா - 158


சோ. ஸ்ரீசந்தோஷ் சர்மா-156


க. இலக்கியா - 154


இ. ஹரிசன் - 153


கு. பிரவின்ஜா - 152

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் விபரம்



| | |
|---|---|
| க.லதுர்ஷன்– 149 | இ.மிதுசாயினி–130 |
| ம.ஜனுசன்– 147 | ச.கலைநயன்–129 |
| க.கஜபவன்–146 | செ.ஜதீசன்– 122 |
| சி.கோகுலன்–146 | ப.வினுர்சாந்–122 |
| ர.விஷாலன்– 145 | வி.மிதுஷன்–121 |
| வி.ஜதுர்சன்–145 | இ.மதுனிசா–120 |
| ச.ஹரிஸ்ராகவி–141 | ச.வேணுஷா–117 |
| இ.டிலானி–136 | வி.டர்சனா–113 |
| வி.திபிராஜ்–135 | கு.திருக்குமரன்–112 |
| சு.தரணியா–134 | உ.பவன்–112 |
| யோ.வியாஷன்– 134 | கு.மதுசா– 112 |
| சி.ஹம்சனா–133 | தீ.லேணிகா–111 |
| ரூ.நிருஷயன்–132 | ர.பிரியங்கா– 110 |
| ச.ஸ்ரீநமிதா–131 | கே.சுகிர்தன்–110 |
| க.அபிஷேக்–131 | ஸ்ரீ.பிரணவன்–103 |

தோற்றிய மாணவர்கள் (65) 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்தவர்கள் 62. எமது மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து எமது பாடசாலையின் உயர்வுக்கு பெருமை சேர்த்துத் தந்த அதிபர் **யோ.ஜெகஆனந்தம்** அவர்களுக்கும் எமது ஆசிரியர்களான **செல்வி த. வளர்மதி , திரு.செ.ஜெயகாந்தன், திருமதி வெ.உமாரஞ்சினி, திருமதி வி. ஜெயபாரதி** மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் உளப்பூரிப்போடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## வாழ்த்துவோர்: மாணவர்களின் பெற்றோர்கள்.

(6618)

உழைப்பதற்கு தேவையான வலிமையான கரங்களைவிட உழைப்பை பாதுகாக்க வலிமை அதிகம் வேண்டும். *– ஓர் அறிஞர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாரியும் கோடையும் போல களவும் கொலையும்

பருவகாலம் என்பது இயற்கை கொண்ட ஒழுங்கமைப்பாகும். பருவகாலத்தின் ஒழுங்கில் இயற்கை தனது கொடுப்பனவை இந்தப் பூமிக்கு வழங்கிக் கொள்கிறது.

பருவகாலம் மாறி குழப்பமடையுமாக இருந்தால் எல்லாமுமே குழப்பமாகும். பருவ காலத்தில் குழப்பங்கள் ஏற்பட்டால் அஃது இயற்கையின் சீற்றமாக மாறிக்கொள்ளும்.

எனவே கோடை, மாரி என்ற பருவகாலங்கள் ஒரு ஒழுங்கு முறையில் – சீரான அசைவில் ஏற்படும் போது மனிதர்கள் உட்பட இந்தப் பூமியில் வாழக்கூடிய அத்தனை ஜீவராசிகளும் தங்கள் வாழ்க்கையை தத்தம் கால அளவுக்கேற்ப சுகமாக வாழ்ந்து முடிக்கும்.

இவை இயற்கையின் பாற்பட்ட பருவகாலம் பற்றியது. இயற்கை தன் கொடுப்பனவை வழங்குவதற்கான பருவகாலம் சில நாடுகளில் பயங்கரமாக இருப்பதும் உண்டு.

வெள்ளப்பெருக்கு, அதிகூடிய வெப்பம், மோசமான சூறாவளி என்றவாறான பருவகால ஒழுங்கீனங்கள் மனித வாழ்க்கையைச் சிதைத்துவிடும்.

இத்தகைய சிதைவிலிருந்து இன்றுவரை விடுபட முடியாத துன்பத்துக்குள் சிக்குண்டிருக்கும் மக்கள் ஏராளம்.

நம் தமிழர் தாயகத்தில் கோடை, மாரி என்ற பருவகால கட்டமைப்பு ஒரு வருடத்தின் இரு பகுதிகளாகியுள்ளன. இந்தப் பருவகாலமே இயற்கையுடனான எங்கள் வாழ்வை தீர்மானிக்கின்றதென்பது அனைவரும் அறிந்த உண்மை.

இவை ஒருபுறம் இருக்க; கோடை, மாரி என்ற பருவகாலம் போல எங்கள் வடபுலத்தில் சில சம்பங்கள் மாறிமாறி வந்து நம்மை வதைத்துச் செல்கிறது.

இதில் களவு, கொலை, விபத்து என்பன முக்கியமானவை. விபத்து என்பது இப்போது வருடம் 365 நாட்களும் என்றாகிவிட்டது. விபத்தும் அதனால் ஏற்படுகின்ற படுகாயங்களும் இறப்புகளும் இல்லாத நாட்களே இல்லை என்று சொல்லுமளவில் நிலைமை வந்துவிட்டது.

வீதியில் இறங்குபவர் வீட்டுக்கு வந்தால் உண்டு என்று நினைக்குமளவில் எங்கள் மண்ணில் விபத்தெனும் கொடூரம் தடுக்க முடியாத சண்டமாருதமாக வீசுகிறது. எனவே விபத்து என்பது நாளாந்தம் நமக்கு அழிவு செய்யும் ஒன்றாகிப்போக,

கொலை, களவு என்பன இன்றைய பருவ கால சீரழிவாகி தமிழ் மக்களின் வாழ்விற்குப் பெரும் அச்சுறுத்தலைக் கொடுக்கிறது.

இப்போதெல்லாம் களவு மிக மோசமாக நடந்து வருகிறது. அண்மைக்காலமாக கட்டுப்பாட்டில் இருந்த களவு மீண்டும் தலை தூக்கி இருப்பதை அவதானிக்க முடியும்.

பட்டப்பகலில் நடக்கக் கூடிய இக் களவு தொடர்பில் இன்னமும் கைதுகள், விசாரணைகள் நடப்பதான தகவல்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

சிறிதுகாலம் களவில்லை என்ற நிம்மதியில் இருந்த மக்களைப் போதைப்பொருள் கடத்தலும் விபத்து மரணங்களும் உலுப்பவே செய்தன.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது, களவு என்ற பருவகாலம் மீண்டும் வழமை பெற்றுள்ளது.

தவிர, இடையிடையே கொலைக் கலாசாரங்களும் வந்துபோவது நாம் அறிந்ததே.

எனவே எங்கள் தமிழ் மக்களின் வாழ்வென்பது திட்டமிட்டு நம் எதிர்காலத்தை சிதைக்கின்றவர்களின் கெடுஞ் செயலால் அவதியுறுகிறது.

இதிலிருந்து விடுபடுவதென்பது சாதாரண விடயமல்ல. போதைவஸ்தைக் கட்டுப்படுத்தினால் களவு; களவை நிறுத்தினால் கொலை என்பதாக எங்கள் வாழ்வின் அவலம் தொடரவே செய்கிறது.

இதிலிருந்து நம் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றால், பொலிஸ் பாதுகாப்பு என்பதில் எங்கள் மக்களுக்கான வகிபங்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.

# அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்

யாழ்ப்பாண மாநகர சபையின் பொதுச்சுகாதார பொறியியற் பிரிவின் வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம், வேலைப்பகுதியின் தொழிலாளர் சங்கம் மற்றும் சாரதிகள் சங்கமும் ஒன்றிணைந்து 2016.11.07 ஆம் திகதி தொடக்கம் 2016.11.15 ஆம் திகதி வரை மேற்கொண்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்களுக்கு மாநகர சேவை வழங்கலில் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

அத்துடன் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் பல்வேறு பொது இடங்களிலும் வியாபார தாபனங்களிலும்வேலைப்பளு மற்றும் இடையூறுகளின் மத்தியிலும் தாமாகவே முன்வந்து கழிவகற்றல் செயற்பாட்டில் ஈடுபட்ட அனைத்து பொதுமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்துள்ளார். (இ)

## மரநடுகை விழா

யாழ்.அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தினால் வடமாகாண மரநடுகை மாதத்தினை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சனசமூக நிலைய முன்றலில் மரத்திற்கு உயிர்கொடுப்போம் மண்வளம் காப்போம்னும்தொனிப் பொருளில் மரநடுகை விழா ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நிலையத் தலைவர் ச. மோகனதாசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதம் கலந்து கொள்வார். (இ-7-91)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்து கொள்ளப் பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால் அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்"

*–நீ.தி.மிரேரவ் (அமெரிக்க எழுத்தாளர்)*

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருநது 6 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** நீர்வேலி ஒருபகுதி, மாசிவன், கொத்தியாவத்தை, கோம்பையன் மணல் ஒருபகுதி, காக்கை தீவு ஒருபகுதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** டொன்பொஸ்கோ, வன்னி விளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டான்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், பிள்ளையார் அரிசி ஆலை, 65வது **Infantry** ஆலங்குளம், துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், **TRC 1, 2 Signal medium work shop,** பனிக்கன்குளம், **CATIC** பனிக்கன்குளம், மாங்குளம், நீதிபுரம், டயலொக் தொலைத்தொடர்பு கோபுரம் ஒலுமடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** வவுனியா நகரம், நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம் வரை, செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டிகுளம் இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வலயம் 6 ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** சிறுநாவற்குளத்திலிருந்து திருக்கேதீஸ்வர கிராமம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கோலட்சுமி என பசுக்களை ஏன் அழைக்கின்றோம்?

இந்து சமய வழக்கப்படி புதிய வீடு கட்டி குடியேறும் பொழுது கிரகப்பிரவேசம் நடத்தப்படும்.

அப்பொழுது பசுக்களை வீட்டிற்குள் அழைத்துச் செல்வதுண்டு. இதன்மூலம், லட்சுமி வீட்டிற்குள் செல்கிறாள் என்று பெரியோர்கள் சொல்வதுண்டு.

இதுமட்டுமல்லாது வீட்டில் சாணத்தால் மெழுகும் பொழுது லட்சுமி கடாட்சம் கிட்டும் என்பது ஐதீகம்.

பசுக்களை கோலட்சுமி என அழைக்க காரணம் பசுக்களின் ப்ருஷ்ட பகுதியான பின் பகுதியில் லட்சுமி இருக்கிறாள்.

பசுக்களின் பின்புறத்தில் மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு பூஜிக்கின்றனர். இதனால், தான் பசுக்களை கோலட்சுமி என அழைக்கின்றனர்.

மேலும், கஜ பூஜை செய்வதன் மூலம் வீட்டில் செல்வ வளம் பெருகும்.

# வர்ண இரவு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகு மற்றும் விளையாட்டுச்சபை ஆகியன இணைந்து நடத்தும் 2015 ஆம் ஆண்டிற்கான வர்ண இரவு நிகழ்வு நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக முன்னாள் இலங்கை வலைப்பந்தாட்டக் கழகத் தலைவரும் கொழும்பு செலான் வங்கியின் பொறுப்பு பொருட்கள் மேலாண்மை அதிகாரியுமான செல்வி தர்ஜினி சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## சின்னம் சூட்டுதல்

யாழ்.மண்டைதீவு மகா வித்தியாலய மாணவ முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் சி.இளங்கோ தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிராமசேவை உத்தியோகத்தர் என்.உதயகுமார் கலந்து கொண்டு மாணவர்களுக்குசின்னஞ்சூட்டுவார். (இ-3)

## ஒரு தகவல் அமர்வு

2017 ஆம் ஆண்டிற்கான இளைஞர் காலநிலை மாநாட்டின் ஒரு தகவல் அமர்வு மற்றும் விண்ணப்ப செயல் முறை என்பன இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5.30 மணி வரை இல.23, அத்தியடி வீதி, நல்லூரில் அமைந்துள்ள அமெரிக்கன் கோணரில் (American Corner) இடம்பெறும். (இ-3)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

**பத்மநாபர்: தாமரைக் கொப்பூழ் (தொப்புள்)**

நம் உடலின் ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு தேவர்கள் ஆளுகின்றனர். நமது தொப்புள்- மணிபூரகம்- சூரியனுடன் சம்பந்தப்பட்டது. அதனால், சூரியனுடைய சக்கரம் என அழைக்கப்படுகிறது. சூரியனின் முதல் கிரகணங்கள் இந்தச் சக்கரத்தின்மேல் பட்டால் உடலுக்கு மிகவும் நல்லது. அதனால்தான் சூரிய நமஸ்காரம் யோக சாதனைகளை விடியற்காலையில் செய்தல் மிகவும் நல்லது.

இந்த மணிபூரகச் சக்கரம் நமது மத்திய நரம்பு மண்டலம், கண் நரம்புகள், வயிறு, ஆறாவது அறிவு- " உள்ளுணர்வு" இவற்றுடன் நெருங்கிய, ஆழ்ந்த தாக்கம் கொண்டிருக்கிறது. இது நமது உடலில் இரண்டாவது மூளை, சாதாரணமாக இந்த மணிபூரகம் ஒரு பாதாம் பருப்பை விடச் சற்றுப் பெரிதாக இருக்கும். யோகா சாதனை, தியானம், சுதர்சனக்கிரியா போன்ற சாதனைகள் செய்வதால், அதன் அளவு ஒரு நாவல் பழும் பெரிதாகும். அப்போது அதன் இயக்கம் சிறப்பாகிறது. உடல் உறுப்புக்களின் வேலைகளைச் சீர்படச் செய்கிறது.

மணிபூரகச் சக்கரம் சுருங்கும் பொழுது பயம், சோகம், மனச்சோர்வு போன்ற எல்லா எதிர்மறை உணர்ச்சிகளும் ஏற்படுகின்றன.மணிபூரகச் சக்கரம் விரிவடையும்போது விடயங்களை உணர்ந்துகொள்ளும் அதீதமான ஆற்றல் விழித்தெழுகிறது.

கிருஷ்ணனுக்குப் பத்மநாபன் என்ற பெயர் உண்டு. ஒரு பூர்ணமாக மலர்ந்த தாமரை மலர் அளவு மணிபூரகச் சக்கரத்தை உடையவர் எனப் பொருள்படும். நீ பத்மநாபனாக ஆவாயானால், ஆக்கபூர்வமான சக்தியை நீ முழுமையாக பெறுவாய். பிரம்மா- படைப்பவர், மலர்ந்து விரிந்த மணிபூரகச் சக்கரத்திலிருந்து உண்டானவர்.

இப்பொழுதெல்லாம் மணிபூரகம் சிறியதாகவே இருக்கிறது. ஆனால், வயிறு மட்டும் பெரிதாகிக் கொண்டு வருகிறது.




## நம்பியவரைக் கைவிடாதீர்

❖ இறைவனின் பார்வை மனிதனின் இதயத்தின் மீதும் ஊடுருவிக் கொண்டிருக்கிறது. மனிதன் எதைச் செய்கிறானோ, அதை எந்த எண்ணத்துடன் செய்கிறான் என்பதைத் தான் இறைவன் கவனிக்கிறான்.

❖ மெய்யாக உங்கள் கையிலுள்ள பொருள்கள் பரிசுத்தமடைவதற்காகவே அல்லாமல், இறைவன் உங்கள் மீது ஜகாத்தைக் கடமையாக்கவில்லை.

❖ ஒரு மனிதன் தன்னுடையவர்களிடத்தில் ஒழுக்கமாக நீடந்து கொள்ளுதலே, அவர்களை ஒழுக்கமாக நடந்து கொள்ளச் செய்தலாகும்.

❖ தன் பிள்ளைகளைப் பிறர் நல்லவிதமாக நடத்த வேண்டும் என்று விரும்புகின்றனர், அநாதைப் பிள்ளைகளை நல்ல விதமாக நடத்தட்டும்.


❖ உங்களை நம்பி ஒருவன் ஒரு செய்தியைச் சொன்னால் அதை அடைக்கலப் பொருளைப் போல் பாதுகாத்து வையுங்கள்.


❖ தர்மம் செய்ய இயலாதவன் ஒரு நற்செயல் செய்வானாக. அல்லது ஒரு கெட்ட செயலிலிருந்து விலகிக் கொள்வானாக. அதுவே அவனது ஈகை.

# பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான கபடி சுற்றுப்போட்டி

## பருத்தித்துறை - முனை சென்.தோமஸ் வெற்றி







வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்தி சங்கம் சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் திக்க முனை மைதானத்தில் மின்னொளியில் லீக் முறையில் நடத்தும் கபடிச் சுற்றுப் போட்டித் தொடர் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியில் "A" பிரிவில் ஐந்து கழகங்களும் "B" பிரிவில் ஐந்து கழகங்களும் மொத்தமாக 10 கழகங்கள் போட்டியிடுகின்றன.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் கபடியில் வடக்கின் வல்லவர்கள் என்னும் பெயரை தாங்கியுள்ள பருத்தித்துறை-முனை சென். தோமஸ் "A" அணி, பருத்தித்துறை சென்.அன்ரனிஸ் அணியை எதிர்கொண்டது.

விறுவிறுப்பாக ஆரம்பித்த போட்டியில் சென்.தோமஸ் "A" அணியின் ஆதிக்கத்திற்கு பஞ்சமே இருக்கவில்லை. சென்.தோமஸ் "A" அணியினர் மிக விரைவாக தமக்குரிய புள்ளிகளை பெற்ற வண்ணம் முன்னேறிக் கொண்டே இருந்தனர்.

சென். தோமஸ் "A" அணி விளையாட்டு வியூகங்களுக்கும் அவர்களின் பாணிக்குள்ளும் விழுந்துபோன சென். அன்ரனிஸ் அணி மீளுவதற்கு சந்தர்ப்பமே கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக போட்டி முடிவுக்கு வரும்போது சென். தோமஸ் "A" அணி 99:24 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் பெரும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இத்தெடரில் முதல் வெற்றியை பதிவு செய்தமைக்காக 4 புள்ளிகளுடன் "A" பிரிவில் பருத்தித்துறை -முனை சென்.தோமஸ் "A" அணி முன்னிலை வகிக்கின்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக பருத்தித்துறை-முனை சென்.தோமஸ் "A" அணியின் தலைவர் யோன் மேரி யூட் சுலக்ஷன் தொரிவு செய்யப்பட்டார். (க)

# ஆஸியின் தொடர் தோல்வி பதவி விலகினார் றொட் மார்ஷ்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளரான றொட் மார்ஷ், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். தென்னாபிரிக்க அணிக்கெதிராகவும் இலங்கை அணிக்கெதிராகவும் அண்மைய நாட்களாகப் பெறப்பட்ட தோல்வியைத் தொடர்ந்தே, அவர் பதவி விலகியுள்ளார்.

இலங்கையில் வைத்து டெஸ்ட் தொடரை 0-3 என இழந்த அவுஸ்திரேலியா, தற்போது அவுஸ்திரேலியாவில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக இடம்பெற்றுவரும் தொடரில், முதலிரு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது. தவிர, இதற்கு முன்னர் தென்னாபிரிக்காவுக்கு எதிராக தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், 0-5 என்ற கணக்கில் தோல்வியடைந்திருந்தது.

இதன்போது, தேர்வாளர்களின் முடிவுகளும் விமர்சிக்கப்பட்டிருந்தன. மார்ஷின் பதவிக் காலம், அடுத்தாண்டு ஜூன் மாதத்துடன் முடிவடையவுள்ள நிலையில் அதன் பின்னர் பதவியில் தொடரும் எண்ணம் இல்லையென அவர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவின் தோல்வியைத் தொடர்ந்து ஏற்பட்ட அழுத்தத்தின் விளைவாக தனது பதவியிலிருந்து உடனடியாக விலகுவதாக றொட் மார்ஷ், நேற்று அறிவித்தார்.

இது எனது தனிப்பட்ட முடிவு. அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையில் எவரும் இது தொடர்பாக எனக்கு அழுத்தம் வழங்கவோ அல்லது இதைப் பரிந்துரைக்கவோ இல்லை என, மார்ஷ் தெரிவித்தார்.

புதிய மாற்றம் தேவைப்படுவதாகத் தெரிவித்த, எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்காக டெஸ்ட் அணியில் புதிய வீரர்கள் தேவைப்படுவதைப் போன்றே தேர்வாளர்களிலும் புதுமுகங்கள் தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (க)

# வருண பகவான் வருகையால் பாகிஸ்தான் - நியூசிலாந்து டெஸ்ட்

## முதல் நாள் ஆட்டம் முழுமையாக இரத்து




பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் இரத்து செய்யப்பட்டது.

மிஸ்பா-உல்-ஹக் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக நியூசிலாந்து சென்றுள்ளது.

இரு அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் நடைபெறவிருந்தது. ஆனால் மழையால் போட்டி பாதிக்கப்பட்டது. 'டாஸ்' கூட போட முடியாத அளவுக்கு பலத்த மழை பெய்தது. இதனால் முதல் நாள் ஆட்டம் இரத்து செய்யப்பட்டது.

இந்த டெஸ்ட் போட்டி 4 நாட்களே நடைபெறும். எஞ்சிய நாட்கள் ஆட்டத்தில் 98 ஓவர்கள் வரை வீசப்படும். இயல்பாக ஒருநாளில் 90 ஓவர் வீசப்படும்.

கிறிஸ்ட்சர்ச் நகரில் அண்மையில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால் பாகிஸ்தான் வீரர்கள் பீதி அடைந்தனர். இதனால் இந்த டெஸ்ட் போட்டிக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று கருதப்பட்டது. ஆனால் திட்டமிட்டபடி போட்டியை நியூசிலாந்து கிரிக்கெட் வாரியம் நடத்தியது.

ஆனால் மழை காரணமாகத் தான் போட்டிக்கு பாதிப்பு ஏற்பட்டது. (க)

# உலக ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் ஜோகோவிச் அரை இறுதிக்கு முன்னேற்றம்

உலக ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் ஜோகோவிச் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

உலக ஆண்கள்டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. டாப்-8 வீரர்கள் மட்டுமே பங்கேற்றுள்ள இந்த போட்டியில் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு மோதுகிறார்கள். ரவுண்ட் ராபின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் வீரர்கள் அரைஇறுதிக்கு தகுதி பெறுவார்கள்.

இதில் இவான்லென்டில் பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் 2 ஆம் நிலை வீரரும், 5 முறை சம்பியனுமான நோவக் ஜோகோவிச் (செர்பியா), மிலோஸ்ராவ்னிக்கை (கனடா) எதிர்கொண்டார். திரிலிங்கான இந்த மோதலில் ஜோகோவிச் 7-6 (8-6), 7-6 (7-5) என்ற செட் கணக்கில் ராவ்னிக்கை வீழ்த்தி2ஆவது வெற்றியுடன் முதல் வீரராக அரை இறுதிக்குள் நுழைந்தார்.



இந்த பட்டத்தை மட்டும் ஜோகோவிச் வென்றால் தரவரிசையில் மீண்டும் முதலிடத்தை பிடித்து விடுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

மிலோஸ் ராவ்னிக் கடைசி லீக்கில் டொமினிக் திம்முடன் (ஆஸ்திரியா) மோதுகிறார். இதில் வெற்றி பெறுபவர் இந்த பிரிவில் இருந்து 2 ஆவது வீரராக அரைஇறுதியைஎட்டுவர். 2தோல்விகளை சந்தித்த கேல் மான்பில்ஸ் (பிரான்ஸ்) வாய்ப்பை இழந்து வெளியேறி விட்டார். (க)

## வலைப்பந்தாட்ட விதிகள் தொடர்பான கருத்தரங்கு

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினால் ஒழுங்கமைத்து நடத்தப்படவுள்ள வலைப்பந்தாட்ட புதிய விதிகள் தொடர்பான கருத்தரங்கு நாளை மறுதினம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது. மேற்படி கருத்தரங்கில் அனைத்து வலைப்பந்தாட்ட நடுவர்களையும் பயிற்றுவிப்பாளர்களையும்கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்க செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (க)

# கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சித்த வைத்திய வெற்றிடத்தினுள் யுனானி வைத்தியர்களை நியமித்ததைக் கண்டித்து வேலையற்ற சித்த வைத்தியர்கள் சங்கமும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் ஒன்றியமும் இணைந்து இன்று வெள்ளிக்கிழமை கவனஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.

மேற்படி போராட்டமானது இன்று மதியம் 12 மணியளவில் கைதடி சித்த மருத்துவ துறைக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

சித்த வைத்தியர்களுக்குரிய வெற்றிடத்தினுள் சித்த வைத்தியர்கள் நியமிக்கப்பட வேண்டும், வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் காணப்படும் சித்த வைத்தியர் வெற்றிடங்களுக்கு சித்த வைத்தியர்களை நியமித்தல் போன்ற கோரிக்கையை முன்வைத்து நடைபெறும் இப் போராட்டத்தின் முடிவில் வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது. (செ-11)

# மாயக்கல்லி மலையடியில் விகாரை அமைக்கத் திட்டம்

## தொடரும் பதற்ற நிலையால் அச்சத்தில் பிரதேச மக்கள்



(அம்பாறை)

இறக்காமம், மாணிக்கமடு மாயக்கல்லி மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பௌத்த மத வழிபாடுகள் நடைபெறுவதுடன், நிரந்தர விகாரை அமைப்பதற்கான முன்னெடுப்பும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அப்பிரதேச மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பான நீதிமன்ற விசாரணை நடைபெற்று வரும் நிலையில், தேரர்களுடன் பெரும்பான்மையின மக்களும் அங்கு வந்து செல்கின்றமை தங்களுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளதாக அம்மக்கள் தெரிவித்தனர்.

மாயக்கல்லி மலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை மாலை புனித போயா நோன்மதித் தின தியான நிகழ்வு முதன்முறையாக அம்பாறை வித்தியானந்த பிரிவனாதிபதி கிரிந்திவெல சோமரத்தின தேரர் தலைமையிலான தேரர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. அன்றையதினம் மாலை மாயக் கல்லி மலையெங்கும் எண்ணெய் விளக்குகள் ஏற்றபட்டு தியான நிகழ்வு நடைபெற்றது.

இதற்காக பஸ் வண்டிகள், வான்கள் மற்றும் கன்டர் ரக வாகனங்களில் பிக்குகள், பௌத்த தர்ம பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டோர் ஏற்றிவரப்பட்டதாக அப்பிரதேச மக்கள் கூறினர்.

மலையடிவாரத்தில் விகாரை அமைப்பதற்கான காணி வழங்குமாறு இறக்காமம் பிரதேச செயலாளரிடம் அண்மையில் தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

பொலிஸ் மற்றும் நீதிமன்ற விசாரணையிலுள்ள இப்பிரதேசத்தில் காணி வழங்கும் அதிகாரம் தனக்குக் கிடையாது என இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர், நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

மாயக்கல்லி மலையில் புத்தர் சிலை வைப்பு விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதிவரை அம்பாறை நீதவான் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# உதயமானதைப் போன்றே...

பிரசாரங்களை மேற்கொள்ளும் சிலர், சமூகத்தை பிழையான வழியில் நடத்த முயற்சிக்கின்றனர். எனவே இனவாத, மதவாதத்தை விதைக்க வேண்டாமென கேட்டுக் கொள்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும், பாதுகாப்புச் செயலாளராக கோத்தபாய ராஜபக்ஷவும், தேவைக்கேற்ப பணத்தை விரயம் செய்யும் அமைச்சராக பசில் ராஜபக்ஷவும் இருந்த போதிலும், அமைச்சர்கள் படைப் பட்டாளத்துடன் தேர்தலுக்கு மகிந்த ராஜபகஷ முகங்கொடுத்த போதிலும் படுதோல்வியடைந்தார். இன்று மகிந்த ராஜபகஷவயும் மைத்திரிபால சிறிசேனவையும் ஒப்பிடுகிறார்கள்.

இனி ஒருபோதும் இவ்விருவரும் தேர்தலொன்றில் நேருக்கு நேர் முகங்கொடுக்க மாட்டார்கள். நாட்டு சட்டத்தின்படி மஹிந்த ராஜபக்ஷவும், சந்திரிகா குமாரதுங்கவும் போட்டியிட முடியாது.

எனவே இவ்விருவரையும் ஒப்பிட்டு காலத்தை வீணடிக்க வேண்டாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து செல்வோர் இறுதியில் அவமானப்பட்டு சுதந்திரக் கட்சியில் இணைவதை தவிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவார்கள்.

அல்லது அரசியலில் இருந்து ஓய்வுபெறுவது உறுதி. புதிய கட்சி ஆரம்பித்தோம் என்று எவரும் இப்போதைய சூழலில் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதையும் கூறிக்கொள்கின்றேன் என சாந்த பண்டார குறிப்பிட்டார். (செ-11)

# மங்களராமய விகாராதிபதி...

பொலிஸார், சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட தவறுவதாகவும் சாடியுள்ளார்.

பட்டிப்பளையில் நடைபெற்ற பிக்குவுக்கு எதிரான ஆர்ப்பாட்ட நிகழ்வுக்கு வருகை தருமாறு தொலைபேசி மூலம் அழைத்த போதும் மாவட்ட அரசாங்க அதிபர் தான் வராது மேலதிக அரச அதிபரை அனுப்பியுள்ளார்.

அத்தோடு பிரதேச செயலாளர், கிராம அதிகாரியை அவதூறாக பேசிய மட்டக்களப்பு மங்களராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்தின தேரர் பண்குடாவெளியில் தனியார் காணியில் சென்று அமர்ந்து அரசாங்க அதிபர் வந்தால் மாத்திரம் காணியை விட்டு வெளியேறுவேன் எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு குறித்த பிக்கு கூறிய போது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன், அரசாங்க அதிபரை அழைத்த போதும் அரச அதிபர் வரமறுத்துள்ளார். இதனால் பிக்குவிற்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஆதரவா? என்ற சந்தேகம் எங்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

பொலிஸாரின் நடவடிக்கை பக்கச்சார்பு, அரசாங்க அதிபரின் வருகை மறுப்பு, பிக்குவின் அடாவடித்தனம் போன்றவை குறித்து தீவிர விசாரணை செய்ய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட உரையின் போது, பட்டிப்பளை பிரதேச செயலாளர், கிராம அதிகாரிகளுக்கு அம்பிட்டியே சுமணரத்தின தேரர் அவதூறாக பேசியது மற்றும் பண்குடாவெளியில் புத்தர் சிலை வைக்க நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் சபையில் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரியப்படுத்தியுள்ளார்.

இதன்போது, சுமணரத்தின தேரருக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதி அமைச்சுடன், புத்தசாசன அமைச்சு இணைந்திருக்ககூடாது என்றும் நீதி அமைச்சு தனியாக அமைந்திருக்க வேண்டும் என்றும் அவர் சபையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதியின் செயற்பாடு மற்றும் புத்தர் சிலை விவகாரம் தொடர்பான செய்தி ஜனாதிபதி, பிரதமருக்கு தெரிவித்துள்ளதாகவும் யோகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிக்குவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாரும் அரசாங்கமும் தவறுமானால் அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களினாலும் மாவட்டம் முழுவதும் தொடர் ஹர்த்தால் மேற்கொள்ளப்படுவதை யாராலும் தடுக்கமுடியாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் இதற்கான பூரண ஆதரவை நாங்கள் வழங்கவும் தயாராக உளளோம் என்றும் நாடாளுமன்ற உறுபபினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# இலங்கையை வெளிநாட்டு காலனியாக மாற்றும் ஆபத்தான திட்டத்திற்கு அரசாங்கம் தயாராகின்றது!

## பாராளுமன்றில் மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை, திருகோணமலை பிரதேசங்களில் பெருந்தொகை காணியை வெளிநாட்டவருக்கு விற்று இலங்கையை வெளிநாட்டு காலனியாக மாற்றும் ஆபத்தான திட்டத்திற்கு அரசாங்கம் தயாராகிறது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பிரதாய ஐ.தே.க. வரவு செலவுத் திட்டமே இம் முறையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்தகால கடன் சுமையை காரண ங்காட்டி மக்கள் மீது சுமையேற்றப்பட்டுள்ளது. 2002 ஐ.தே.க. ஆட்சியில் வெளிநாட்டவருக்கு எமது காணிகள் விற்கப்பட்டன. 20 வீதம் வற் வரி உயர்த்தப்பட்டது, 3 இலட்சம் அரச ஊழியர் தொகை குறைக்கப்பட்டது. 80 அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டன.

1977இல் 68.8 வீதமாக இருந்த கடன் சுமை 1994இல் 95 வீதமாக உயர்ந்தது. சந்திரிகா ஆட்சியில் இது 100 வீதமாக உயர்ந்தது 2002 - 2004 ஆட்சியில் இது 102 வீதமாக அதிகரித் தது. எமது 2009 - 2015 ஆட்சியில் இது 70.7 வீதமாக குறைக்கப்பட்டது.

பாராளுமன்றத்திற்குள்ள நிதி தொடர்பான அதிகாரம் மத்திய வங்கி க்கு வழங்கப்பட்டது.

தற்போது நிதிச் சபையின் அனுமதியின்றி நிதி தொடர்பான அதிகாரத்தை தனியார் துறைக்கு வழங்க அரசாங்கம் தயாராகிறது. இது தவிர துறைமுகம், நெடுஞ்சாலைகள் ரயில் பாதை, மொரகஹகந்த நீர்த்தேக்கம் என்பவற்றையும் தனியாருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு சுதந்திர கட்சியில் உள்ள சிலரும் பங்கு தாரராக இருபபது நாட்டிற்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியமாகும்.

2014ஆம் ஆண்டு இறுதியில் 73.91 பில்லியனாக இருந்த கடன் தொகை 906 பில்லியனாக அதிகரித்துள்ளது. எனது ஆட்சியில் அதிக கடன் பெறப் பட்டதாக குற்றஞ்சாட்டினாலும் நீங்களே இன்று குற்றவாளி கூண்டில் இருக்கிறீர்கள். நாம் பெற்ற சில கடன்கள் கணக்குகளில் சேர்க்கப்பட வில்லையென குற்றஞ் சுமத்தப்பட்டது. அந்த பணம் எதற்குப் பயன்படுத்தப்பட்டது என முடிந்தால் வெளிப்படுத்துங்கள். ஒப்பந்தம் செய்து கொள்ளப்படாது பெற்ற கடன்களை மீள செலுத்தத் தேவையில்லை.

கடந்த 2 வருட காலத்தில் கடன் சுமை உயர்ந்துள்ள போதும் ஒரு திட்டம் கூட முன்னெடுக்கப்படவில்லை. சீனாவில் இருந்து பெறும் கடனுக் கான வட்டி அதிகம் எனக் கூறி அமைச் சர் ஒருவர் சீன தூதுவருடன் மோதலில் ஈடுபட்டார். இது இரண்டாம் வகுப்பு பயிலும் மாணவரின் செயல் போலவே உள்ளது.

எமது ஆட்சியில் தங்கத்திலா நெடுஞ்சாலைகள் கட்டப்படுகிறது என்று கேள்வி கேட்டார்கள். அப்படியானால் இன்று பிளாட்டினத்திலா கட்டப்படுவதாக மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். சீனாவுடனான உறவில் விரிசல் ஏற்படுததப்படடுள்ளது.

மாணவர்களுக்கு டப் வழங்குவதை வரவேற்கிறோம். ஆனால் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணனி வழங்குவதாக அறிவிக்கப்பட்ட போதும் இன்னும் அது வழங் கப்படவில்லை. "இன்டர் நெட்" கட்டணம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் எப்படி டப் கணனியை பயன்படுத்த முடியும்? பசுமாடுகளை இறக்குமதி செய்வதையும் கோழி உற்பத்தி, மீன்பிடி உற்பத்தி என்பவற்றை ஊக்குவிப்பதும் வரவேற்கததக்கது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை 1200 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

15 ஆயிரம் காணியை தனியார் துறைக்கு உரித்துரிமைக்கு வழங்கு வது எவ்வளவு நியாயமானது. நாடு பூராகவும் 12 முதலீட்டு வலயங்கள் உள்ளன. இவை பூர்த்தி செய்யப் படாத நிலையில் தனி ஒரு கம்பனி க்கு துறைமுகம், விமான நிலையம் மற்றும் 15 ஆயிரம் ஏக்கர காணி என்பன வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது நாட்டின் இறைமைக்கு பாதகமான தாகும். இது தவிர திருகோணமலை எரிபொருள் களஞ்சிய பிரதேசத்தையும் வெளிநாட்டுக்கு வழங்க அரசு தயாராகிறது.

தேசிய சொத்துக்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பதை அனுமதிக்க முடியாது. அம்பாந்தோட்டையின் 15 ஆயிரம் ஏக்கர் காணியை விற்பனை செய்ய மக்கள் இடமளிக்க மாட்டார் கள். இந்த வரவு செலவுத் திட்டம் வெளி நாடுகளுக்கே ஊக்குவிப்பு வழங்கியுள்ளது. இலங்கையை வெளிநாட்டு காலனியாக மாற்றும் பயங்கரமான நடவடிக்கைக்கு இடமளிக்கப்பட்டுள்ளது என்று மகிந்த தனதுரையில் குற்றஞ் சாட்டியுள்ளார். (செ)

# கிராம உத்தி...

மடு கிராம உத்தியோகத்தர் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் மேற்கொண்டுள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடமையை செய்வதற்கு சென்ற தனக்கு அச்சுறுத்தல் விடுத்ததன் மூலம் தனது அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாகவும் கிராம உத்தியோகத்தர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சம்பவம் இடம்பெற்றபோது பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்ட பொலிஸார் அம்பிட்டிய சுமணரத்ன தேரரரின் செயற்பாடுகளைத் தடுக்காது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது தொடர்பிலும், கெவிலியாமடு கிராம உத்தியோகத்தர் ஜீவிதன் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் பதிவு செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (செ-11)

## புதிய கட்சியுடன்...

கிழமை சீனாவிற்கு செல்கின்றது. டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி வரை சீனாவில் தங்கியிருக்கும் குழு அங்கு பலதரப்பட்ட சந்திப்புகளில கலந்து கொள்ளவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் உதித் லொக்கு பண்டார தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த உள்ளிட்ட குழுவினரே சீனாவிற்கு விஜயம் செய்ய உள்ளனர். சுமார் ஒரு வாரகாலம் வரை சீனாவில் தங்கியிருக்கும் குழுவினர் அந்நாட்டு அரச மட்ட தலைவர்கள் உட்பட முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாட உள்ளனர்.

அதேபோன்று சீனாவில் வாழும் இலங்கையர்களையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உள்ளிட்ட குழுவினர்கள் சந்தித்து கலந்துரையாட உள்ளனர். புதிய கட்சியின் கொள்கைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் என்பவற்றை தெளிவுபடுத்துவதே இந்த விஜயத்தின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கன்னி ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்ற நிலையில், புதிய கட்சியின் கன்னி விஜயமாக சீனாவுக்கான பயணம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எதிர்கொண்டு புதிய கட்சியினை வலுபபடுத்தும் நோக்கில் கூட்டு எதிர்க்கட்சியினர் தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை இன்று கொண்டாடப்படவுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளன்று புதிய கட்சி எதிர்கால நடவடிக்கைகள் தொடரபாக அவர் அறிவிக்க உள்ளார்.

மேலும் மகிந்தவின் பிறந்த நாளை முன்னிட்டு கொழும்பில் சர்வமத வழிபாடுகள் இடம பெறவுள்ளதுடன் நாளை சனிக்கிழமை அநுராதபுரத்தில் பிரதான நிகழ்வு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ)

## ஜனாதிபதியின்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்துக்குள் பிரவேசித்த பாடசாலை மாணவனுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பாராட்டுப் பரிசு ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த மாணவன் நேற்று பிற்பகல் தனது பெற்றோர் மற்றும் சகோதரர்களுடன் ஜனாதிபதியை சந்திக்கும் வாய்ப்பை பெற்றிருந்த நிலையில் ஜனாதிபதியின் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த மாணவனுக்கு விசேட பரிசு ஒன்றையும் ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

மேலும் இந்த மாணவனின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவு செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆசீர்வதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## உதயமானதைப்...

கலந்துகொண்ட நிலையிலேயே ஜி.எல். பீரிஸ் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கட்சி குறித்து சாந்த பண்டார இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"தாமரை பூவும், தாமரை மொட்டும் இதற்கு முன்னரே தேர்தல்களில் போட்டியிட்டு படுதோல்வி அடைந்த சின்னங்களாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி பல கட்சிகள் ஸ்தாபிக்கப்பட்டன. அதேபோல் தான் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச்சென்று தேர்தல்களில் போட்டியிட்ட கட்சிகளும் உண்டு. ஆனால் அவற்றில் எந்தவொரு கட்சிகளும் தேர்தல்களில் வெற்றிபெறவும் இல்லை. நிரந்தரமாக நீடிக்கவும் இல்லை. தனிப்பட்ட மற்றும் ஒருவரை எதிர்ப்பதற்காக அல்லது பதவிகளுக்காக கட்சிகளை உருவாக்குவதற்கே பாடுபடுகிறார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று பௌத்த மதத்திற்கு பங்கம் ஏற்படுத்துவதாக பொய்யான

23ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம்...

சாயம் உள்ளிட்ட விடயங்களுக்காக விரிவான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான வேலைத்திட்டம் விரைவில் தயாரிக்கப்படுவதற்கான அழுத்தத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொடுக்கும் என்றும் இதில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் உள்வாங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்கில் இருந்து 18 தமிழ் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 16 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள், இது 90 வீதத்துக்கும் அதிகமானதாகும்.

இதன்மூலம் வடக்கு, கிழக்கு மக்கள் தம்மை பிரதிநிதித்துவம் செய்யுமாறு எம்மைத் தெரிவு செய்துள்ளார்கள் என்பதை சுட்டிக்காட்டுகின்றோம். நாம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவில்லை. எனினும், இலக்கை அடைவதற்காக நாம் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விரும்புகின்றோம்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றை வைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான வரைபொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டும்.

அரசாங்கம் வடக்கு, கிழக்கிற்கென விரிவான வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். இதில் வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாட வேண்டும். விரைவில் இவ்வாறான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதிப்படுத்தும்.

அதேநேரம், வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றங்களைத் தட்டிக்கழிக்க முடியாது. இதுதொடர்பில் அண்மையில் முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்திருந்ததுடன், அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்ந்திருந்தோம். தமது மீள்குடியேற்றம் நிராகரிக்கப்படுவதாக முஸ்லிம் மக்கள் மத்தியில் கவலையொன்று காணப்படுகிறது.

அவர்களுடைய கவலை நீடிக்கக்கூடாது. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் என்பதே தமிழ் மக்களினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் கொள்கையாகும். இவர்கள் சகல வசதிகளுடனும் மீள்குடியேற்றப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தனது உரையில் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, நாட்டிலுள்ள வசதி குறைந்த மக்கள் மீது மேலும் வரிச் சுமைகள் சுமத்தப்படக்கூடாது எனக் குறிப்பிட்ட சம்பந்தன் நாடு கடனில் மூழ்கியிருந்தாலும் அந்தத் தரப்பினரின் மீது சுமைகளை சுமத்தும் வகையில் வரி அதிகரிப்புக்கள் காணப்படக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார். (செ)

## சிங்களவர்களை...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு சேர்க்கும் வகையில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் உருவாக்கப்பட்ட புதிய கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றையதினம் கொழும்பு இராஜகிரியவில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் உருவாக்கத்திற்கான நோக்கம், எதிர்கால நடவடிக்கை தொடர்பாக கட்சியின் தவிசாளரான முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸினால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதன்பின்னர் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் தனதுரையில்,

இன்று பாதுகாப்பு தொடர்பாக அனைவரிடையேயும் அச்சநிலை ஏற்பட்டுள்ளது. அந்த அச்சநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அன்று முஸ்லிம் மக்கள் வடக்கிற்குச் செல்லமுடியாத நிலையே ஏற்படுத்தப்பட்டது. 48 மணித்தியாலங்களிற்குள் வெறும் இரண்டு பொலித்தீன் பைகளில் தங்களது பொருட்களை எடுத்துக்கொண்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் அன்று வடக்கிலிருந்து வெளியேறினர். அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு மகிந்த ராஜபக்ஷவே முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனினும் மீண்டும் அந்த அபாயநிலை உருவாகியுள்ளது. இவ்வாறான அறிவிப்புகள் இன்றும் தொடர்வதால் சிங்கள மக்கள் வடக்கில் வாழ முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. அதே போன்று தமிழ்-முஸ்லிம் மக்களிடையேயும் அச்சநிலை உருவாகியுள்ளது.

எனவே இந்த அச்சநிலையை நீக்குவதே எமது கட்சியின் பிரதான இலக்காகும். பெரும்பான்மையினரான சிங்கள மக்களிடையே அச்ச நிலையை ஏற்படுத்திவிட்டு தமிழ் மக்களின் அச்சநிலையை நீக்கிவிட முடியாது. அதனை அனைத்துத் தரப்பும் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே முதலில் சிங்கள மக்களின் அச்சநிலையை நீக்கிவிட்டு தமிழ் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை நடத்த தேவையான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்காக எதையேனும் அர்ப்பணிப்பதற்கு எமது கட்சி தயாராக உள்ளது.

எமது ஆட்சியில் இழைக்கப்பட்ட தவறுகளினால்தான் எம்மை ஆட்சியிலிருந்து நீக்குவதற்கு மக்கள் தீர்மானித்தார்கள். மக்களின் ஆணைக்கு நாங்கள் தலை வணங்குகின்றோம். எனவே தவறுகளை சரிப்படுத்தி பயணத்தை ஆரம்பிக்கின்றோம். இரணடு வருடங்களுக்குப் பின்னர் எமது தவறுகளை திருத்திக்கொண்டு பயணத்தை தொடர்வதற்கு தயார் என்பதை மகிந்த ராஜபக்ஷவும் கூறியிருந்தார். நாங்களும் அதனையே கூறுகின்றோம். எனவே எமக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியில் தானும் இணைநது கொண்டதாக இதன்போது கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பொது மக்களும் இதில் இணைந்து கொள்ள வேண்டும் என்ற அழைப்பையும் விடுத்ததோடு, கட்சி உறுப்புரிமைக்கான விண்ணப்பப் படிவத்தையும் ஊடகங்களின் முன்பாக காண்பித்திருந்தார். (செ)

(மற்றுமொரு செய்தி உள்ளே)

## மாணவர் படுகொலை...

இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியினைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது 24), கிளிநொச்சி இரணைமடுப் பகுதியினைச் சேர்ந்த நடராஜா கஜன் (வயது 23) என்னும் இரு இளைஞர்கள் உயிரிழந்திருந்தனர்.

இதில் உயிரிழந்த மாணவர் ஒருவரின் இடப்பக்க விலாப் பகுதியின் ஊடாக துப்பாக்கி சன்னம் பாய்ந்து அவருடைய இடது பக்க முதுகுப்பகுதியின் ஊடாக வெளியே சென்றிருந்தது என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இந்த சம்பவத்தை விபத்தாக பொலிஸார் கூறி வந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத பரிசோதனை அறிக்கை குறித்த மாணவர்களில் ஒருவர் துப்பாக்கி சூட்டினாலேயே உயிரிழந்தார் என்பதனை வெளிப்படுத்தியிருந்தது.

கடந்த நான்காம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையில், நீதவானின் அறிக்கையிலும் ஒரு மாணவன் துப்பாக்கி சூட்டினாலும் மற்றைய மாணவன் அதனால் ஏற்பட்ட விபத்தினாலும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கு இன்றைய தினம் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. கடந்த மாதம் சம்பவ இடம் நடைபெற்ற இடத்தில் துபபாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டதா? என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் துப்பாக்கி சூட்டை மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் சம்பவ இடத்திற்கு அழைத்து வந்து அவர்களின் அடையாளப்படுத்தல்கள் மூலம் தடயங்களை ஆராயுமாறு யாழ்.நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

சம்பவ இடத்திற்கு பொலிஸ் சந்தேக நபர்கள் ஐவரும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் கண்காணிப்புடன் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது தாம் இங்கிருந்து தான் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக குளப்பிட்டி சந்தைப்பகுதிக்கு முன்பான ஒரு இடத்தினை காட்டினார்கள். இதனை அடுத்து அங்கு சல்லடை போட்டு தேடிய இரசாயனப் பகுப்பாய்வு பொலிஸார் காங்கேசன்துறை நோக்கி வீதியின் வலது பக்கத்தில் புற்கள் நிறைந்த பகுதியிலிருந்து ஏகே-47 ரக துப்பாக்கியின் ரவைக்கூடு ஒன்றை மீட்டிருந்தனர்.

மேலும் குறித்த சூட்டு சம்பவத்தை நேரில் கண்டதாக கூறப்படும் கண்கண்ட சாட்சியம் ஒன்றின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையிலும் இன்றைய தினம் குறித்த வழக்கு மீண்டும் யாழ்.நீதவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (செ-4)

## கசிப்பு உற்பத்தி...

கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவ லில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 9:00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி உத்தரவிற்கமைய முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போதே மேற்படி சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையத்திலிருந்து 48 000 மில்லி லீற்றர் கசிப்பு கோடா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்தோடு குறித்த கசிப்பு உற்பத்தி நிலையமும் பொலிஸாரால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்ட 48 000 மில்லி லீற்றர் கசிப்பு கோடா மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ள சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)


அனைத்து நாடுகளுக்குமான
விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6359)



FALC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French·
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007,
University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவர்.
DELF A1, A2,B1 பரீட்சைகளில் 100 % சித்தி. 1154 மாணவர்கள் French கற்றுள்ளனர்.
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 26.11.16 சனி 8 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 28.11.16 Mon @ 3.30pm.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre
(சி-6422)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!
உணவே மருந்து!
SIKARAM ACADEMY, School of Hospitality
அறிமுகப்படுத்தும்


யாழ்ப்பாண பாரம்பரிய
ஆரோக்கிய உணவகம்
இலைக்கஞ்சி, ஆட்டா றொட்டி, குண்டுத்தோசை
குழல் பிட்டு, கீரைப் பிட்டு, அரிசிமா இடியப்பம்
மரக்கறி, மீன், நாட்டுக்கோழி சாப்பாடு
சுறாப் பிட்டு, இறால் பிட்டு
பிட்டு / இடியப்ப கொத்து
ஆயுசு கோப்பி, பழரச பானங்கள்,
சூப் வகைகள், ஒடியல் கூழ்
பயற்றம் உருண்டை, சீனி அரியதரம்,
தட்டு வடை, முறுக்கு
யாழ் நகர எல்லைக்குள் FREE Delivery
இல.175, 1ம் குறுக்குத்தெரு
(வேம்படி பாடசாலை வீதி) யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
(சி-6413)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.